விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 02 வியாழக்கிழமை (15.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 087

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பொறுப்புக் கூறத் தவறினால் மீண்டும் போர் உருவாகும்!

## இலங்கைக்கு பிளேக் எச்சரிக்கை



(வாஷிங்டன்), இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப் பட்ட மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்புக் கூறப்படாதுவிட்டால், இலங்கையில் மீண்டும் போர் உருவாகக் கூடிய ஆபத்து இருப்பதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் ஏபி செய்தி நிறுவனத்திற்கு வாஷிங்டனில் வைத்து வழங்கிய செவ்வியின் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## மன்னிப்புச் சபை அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது!

### ரஜீவ விஜேசிங்க தெரிவிப்பு




அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் நேற்று உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை விவகாரங்கள் தொடர்பில் இலங்கை (23ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. உடனான பொருளாதாரத்தை நம்பியே இலங்கை அரசு உள்ளது!

### அமைச்சர் விமலுக்கு ஐ.தே.க. பதிலடி

(கொழும்பு)

அமெரிக்காவுடனான பொருளாதார உறவுகளை துண்டித்துக் கொண்டால் இலங்கை போன்ற சிறியதொரு நாடு தனது பொருளாதாரத்தை தக்கவைப்பது எவ்வாறென ஐக்கிய தேசிய கட்சி, வீடமைப்பு மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சர் விமல் வீரவன்சவிடம் கேட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த கூட்டமொன்றில் அமைச்சர் வீரவன்ச, அமெரிக்காவில் அறிமுகம் செய்யப்பட்ட இணையத்தினால் வழங்கப்படும் கூகுள் மற்றும் ஜி-மெயில் வசதிகள் உட்பட அமெரிக்க உற்பத்திகளை பகிஷ்கரிக்குமாறு மக்களிடம் கோரினர்.

இதுபற்றி கருத்து தெரிவித்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல, இலங்கையின் ஏற்றுமதியில் 75 சதவீதம் அமெரிக்க சந்தையை நோக்கியதாகவே உள்ளது. எனவே (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஆதரிப்பதா? எதிர்ப்பதா? முடிபெடுக்கத் தயங்கும் இந்தியா

(புதுடில்லி)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நட்பை அடிப்படையாகக் கொண்டு, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானம் குறித்து இந்தியா முடிபெடுக்கும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா தெரிவித்தார்.


இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானம் தொடர்பில் இந்திய அரசின் நிலைப்பாட்டை விலக்க வலியுறுத்தி தமிழக எம்.பிக்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்திய நாடாளுமன்றில் குரல் கொடுத்திருந்தனர். இந் நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சரினால், இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு அடங்கிய அறிக்கையொன்று நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து அவரால் உரையொன்றும் நிகழ்த்தப்பட்டது.

இதன்போது அங்கு உரையாற்றிய கிருஷ்ணா,மேலும் கூறியதாவது,

அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரிப்பதா? வேண்டாமா? என்பது குறித்து, இந்தியா இன்னும் முடிபெடுக்கவில்லை. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நட்பு இருக்கின்றது. அந்த நட்புறவில் விளைவுகளை ஏற்படுத்தாத வகையில் இந்தியா தனது முடிபை எடுக்கும்.

இலங்கை அரசாங்கத்துடனான எமது (23ஆம் பக்கம் பார்க்க)

## கிருஸ்ணா சமர்ப்பித்த அறிக்கையை கிழித்தெறிந்த தமிழக எம்.பிக்கள்



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்

கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் இலங்கை-இந்திய நட்புறவின் அடிப்படையில் முடிபெடுக்கப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் அறிக்கையொன்றை சமர்ப்பித்து அறிவித்தார்.

அவரது அறிவிப்பை அடுத்து அறிக்கையின் பிரதிகளை கிழித்தெறிந்த தமிழக எம்.பிக்கள் நாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்தனர். இதனால் நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் பெரும் அமளி ஏற்பட்டது.

இலங்கை தமிழர்களுக்காக இன்னமும் (23ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் யோசனைக்கு அமைச்சர் ஹக்கீம் விசனம்

(கொழும்பு)

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான அமெரிக்க பிரேரணைக்கு ஆதரவளிப்பதாக நோர்வே அறிவித்துள்ளமை குறித்து நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் விசனம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையாளராக செயற்பட்ட நோர்வே, இம்முறை குறைந்த பட்சம் இப் பிரேரணை விவகாரத்திலிருந்து விலகியிருப் (23ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் இன்று நடக்கவிருந்த தபால் மூல வாக்களிப்பு நிறுத்தம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்காக இன்றும் நாளையும் நடைபெறவிருந்த தபால்மூல வாக்களிப்பு நடைபெறாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்கள் என தம்மைக் குறிப்பிட்டவர்கள் தாக்கல் செய்த ஆணை கோரும் மனுக்கள் இரண்டு, மேல் முறையிட்டு நீதிமன்றத்தில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிரதி சொலிசிஸ்டர் நாயகம் ஜனக் டி சில்வா 15ஆம், 16ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த மேற்படி வாக்களிப்பு நடைபெறாது எனவும் இந்த மனுவுடன் தொடர்பான சகல தரப்பினருக்கும் தமது கருத்தைக் கூற வாய்ப்பு வழங்கும் நோக்கில் தபால்மூல வாக்களிப்பை நிறுத்தியுள்ளதாகவும் கூறினார்.

இந்த மனு நீதியரசர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலைக்கு வந்தபோது, இந்த மனுக்கள் அவசரமானவை எனவும் இதனால் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் கிடையாத நிலையிலும் இந்த (23ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி சிறுவன் பலி

தொலைக்காட்சி வயரினை மின்ஆளியோடு தொடுக்க முனைந்த சிறுவன் ஒருவனை மின்சாரம் தாக்கியதில் அவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் உரும்பிராய் வடக்கு சமாதியடிப் பகுதியில் நேற்றுமாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஊரெழு கணேச மகாவித்தியாலயத்தில் கல்விகற்ற பாலச்சந்திரன் மிதுஷன் (வயது 16) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த (23ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யுத்த மீறல்களில் ஈடுபட்டால் பொறுப்புக் கூறுதல் அவசியம்

## அமெரிக்கா வலியுறுத்தல்

(வாஷிங்டன்)

இலங்கையில் சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டங்களை மீறியவர்கள் முழுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பொறுப்புக் கூற வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

வாஷிங்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் நீதிக்கு புறம்பாக படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக வெளியாகியுள்ள செய்திகள் குறித்து ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இந்தக் காணொளியில் பிரபாகரனின் மகன் தொடர்பாக தம்மால் தெளிவாக உறுதிப்படுத்த முடியவில்லை எனக் கூறியுள்ளார்.

ஆயினும் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டமீறல்கள் தொடர்பில் எமது கரிசினைகளை பலமுறை தெளிவுபடுத்தியுள்ளோம்.

சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டங்களை மீறியவர்கள் எவராயினும், அவர் மீது முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக் கூற வைக்க வேண்டும் என்பதை தாம் ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனாலேயே நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறுதலை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் காலம் தாமதித்து வருகின்றமை தொடர்பான சர்வதேச சமூகத்தின் கவலையை வெளிப்படுத்தும் வகையில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஒரு பிரேரணையைக் கொண்டு வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (எ-11)


### வன்னி பிரதேச செய்தியாளர்களுக்கான நேர்முகப்பரீட்சை

இடம் : முல்லை ரெஸ்ற்ருரன்ட்
இல. 09, டிப்போச் சந்தி,
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
காலம் : 16.03.2012 வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 10 மணி

செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களும் விண்ணப்பிக்க விரும்புபவர்களும் இந் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளலாம்.

நேர்முகத் தேர்வுக்கு வருவோர் தமது தே.அ.அ. உள்ளிட்ட சான்றிதழ்களின் போட்டோ பிரதிகளை தனியான கோவையில் எடுத்து வரவும்.

மனித வள முகாமையாளர்
வலம்புரி
தொ.பே.இல.: 0215671532


## பயண எச்சரிக்கையை தளர்த்தியது யப்பான்

(கொழும்பு)

யப்பானிய பிரஜைகள் வடமாகாணத்திற்கு விஜயம் மேற்கொள்வது தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த அறிவுறுத்தலை யப்பான் வெளிவிவகார அமைச்சு தளர்த்தியுள்ளது என கொழும்பிலுள்ள யப்பானிய தூதுவராலயம் நேற்று புதன்கிழமை அறிவித்துள்ளது.

நாட்டின் பாதுகாப்பு நிலைமையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாகவே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் தவிர்ந்த வட மாகாணத்தின் ஏனைய பகுதிகளுக்கு போவதா வேண்டாமா என்பதை மீள்பரிசீலனை செய்யுமாறு என யப்பானிய வெளிவிவகார அமைச்சு முன்னர் தெரிவித்திருந்தது.

எனினும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று கொண்டிருப்பதனால் முல்லைத்தீவு மாவட்டம் மற்றும் மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகளுக்கு பயணம் செய்வதா வேண்டாமா அல்லது மீள் பரிசீலனை செய்ய கோரிய அறிவுறுத்தல் தொடர்ந்து அமுலிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)


### உடன் தேவை

- பத்திரிகை மடிப்பவர்கள் [இரவுக் கடமை, ஆண்கள்]
- ஓப் செற் இயக்குநர்கள் [ஆண்கள்]

குறிப்பு: தங்குமிடம் மற்றும் உணவு வசதி வழங்கப்படும்.
சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நேரில் வரவும்
மனித வள முகாமையாளர்
வலம்புரி
இல. 3, 2−ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.


## டுபாய் நாட்டைச் சேர்ந்த தாயும் சேயும் மரணம்

(கொழும்பு)

கொழும்பு, வத்தளைப் பகுதியிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் டுபாய் நாட்டைச் சேர்ந்த 22 வயதான தாயும் அவரது 6 மாதக் குழந்தையும் நேற்று புதன்கிழமை அதிகாலை மரணமடைந்துள்ளனர். இந்த மரணத்திற்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, தந்தையார் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். டுபாயிலிருந்து நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை மாலை இலங்கையை வந்தடைந்த இவர்கள், வத்தளைப் பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்தனர்.

சுகவீனமடைந்த நிலையில் இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். உணவு நஞ்சாகியதன் காரணமாக இவர்கள் மரணமடைந்திருக்கலாமென வைத்தியர்கள் சந்தேகிக்கின்றனர். (எ-4)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### கேள்வி அறிவித்தல்

1. மருத்துவபீட உணவகம் - திருநெல்வேலி
2. சித்தமருத்துவத்துறை உணவகம் - கைதடி
3. மருத்துவபீட மாணவர் விடுதி உணவகம் - யாழ்ப்பாணம்

மேற்படி உணவகங்களை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 2012.03.30 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 1000/- உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 200/- உம் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனி கேள்விப்படிவங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நலச்சேவைகள் கிளையில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (C-6087) 14.03.2012


## வீதிப் போக்குவரத்து விதிகளை மீறிய 15 பேருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

வீதி போக்குவரத்து விதிகளை மீறினர் என குற்றம் சாட்டப்பட்டு யாழ். மற்றும் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 15 பேர் யாழ். நீதிமன்றில் அபராதமாக ரூபாய் 40 ஆயிரத்து 500 செலுத்தினர்.

கோப்பாய் மற்றும் யாழ்.பொலிஸ் நிலையப் பிரிவுக்கு உட்பட்ட குறித்த 15 பேரும் வீதிபோக்குவரத்துச் சட்டங்களில் வெவ்வேறு சட்டத்தினை மீறினர் என கைது செய்யப்பட்டு நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் மா.கணேசராசா 15 பேரும் குற்றத்தினை ஒப்புக்கொண்டமையால் அபராத தொகையைசெலுத்து மாறு கூறி விடுதலை செய்யப்பட்டனர்.

இதில் சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலியைச் சேர்ந்த நபர் ஒருவர் மது போதையில் வாகனம் செலுத்தினர் என்ற குற்றச்சாட்டை ஏற்க மறுத்ததால் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஒரு ஆட் பிணையில் விடுவிக்கப்பட்டார். (எ-11)


EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

### பெண் விற்பனையாளர் தேவை

எமது நிறுவனத்துக்கு நல்லொழுக்கமும் பண்பும் உள்ள புடவை விற்பனையாளர் தேவை. நேரில் வரவும்.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(மலாயன் கபே அருகில்) (7705)

### நன்றி நவிலல்

யாழ்/ கோண்டாவில் மேற்கு கோண்டாவிலை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

துரையப்பா இராமச்சந்திரன்

அவர்கள் தனது தாயாராகிய

துரையப்பா சின்னத்தங்கச்சி

அவர்களின்

நான்காம் ஆண்டு நினைவு

நாளினை முன்னிட்டு 15.03.2012 வியாழக்கிழமை (இன்று) எமது பாடசாலை மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்குவதினை இட்டு அவருக்கு நன்றியினை தெரிவிப்பதுடன் அவரின் தாயாரின் ஆத்மா சாந்தி பெறவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

முல்லைத்தீவு — மு/ அலம்பில் றோமன் கத்தோலிக்க வித்தியாலய சமூகத்தினர்
(C-6089)

### இளங்கலைஞர் மன்றம் இசைவிழா - 2012

இடம் : மன்றக் கலாமண்டபம்
காலம் : மார்ச் மாதம் 16, 17, 18 ஆம் திகதிகளில்
நேரம் : பி.ப. 3.00 தொடக்கம்

- பாட்டு
- பரத நாட்டியம்
- வாத்திய பிருந்தா
- இசை நாடகம்

சிறப்பு நிகழ்ச்சி
17.03.2012 காலை 9.00 தொடக்கம்

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 165ஆம் ஆண்டு ஆராதனை விழா

- மூத்த மற்றும் இளம் நாதஸ்வர - தவில் வித்துவான்களும்
- மூத்த மற்றும் இளம் பாடகர்களும் கலந்து கொள்வர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோ

மன்ற நிர்வாகம்
(C-6088)

# இன்று ஒரு தகவல்

## நேர்முகத்தேர்வு

ஒரு அலுவலகத்தில் வேலைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத்தேர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது என்ன வேலை என்றால் கம்பியில்லா தந்திக் கருவியை இயக்குகின்ற வேலை.

அதற்காக ஏராளமான இளைஞர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் பக்கத்திலே இருக்கிறவர்களுடன் பேசி அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் அமர்ந்திருந்த இளைஞன் மட்டும் அமைதியாக இருந்தான்.

தேர்வு அதிகாரிகள் இருந்த அறையினுள்ளேயிருந்து கம்பியில்லா தந்திக் கருவியின் சத்தம் மட்டும் சிறியதாக கேட்டுக்கொண்டிருந்தது.

அதனை அமைதியாக இருந்த இளைஞன் மட்டும் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தான்.

திடீரென எழுந்து தேர்வு அறையினுள்ளே நுழைந்தான். ஏனைய இளைஞர்கள் திகைத்துப் பார்த்தார்கள்.

உள்ளே போன சிறிது நேரத்தில் வேலைக்கான உத்தரவுக் கடிதத்துடன் வெளியே வந்தான்.

இதைப்பார்த்த மற்றைய இளைஞர்கள்"இது என்ன அநியாயம்... என்று கூச்சலிட ஆரம்பித்தார்கள்.

உடனே எங்களை எல்லாம் சோதனை செய்த பின்னர் தான் எனக்கு இந்த வேலையைக் கொடுத்தார்கள்.

அந்த அறைக்குள்ளே இருந்த கம்பி இல்லாத்தந்திக் கருவி மூலமாக ஒலிக் குறிப்புக்களாலே அந்த அதிகாரிகள் செய்தி அனுப்பினார்கள்.

அதை நீங்கள் கவனிக்கவில்லை என்றான். "என்ன செய்தி அனுப்பினார்கள்?" என்று அரட்டையில் மூழ்கியிருந்த இளைஞர்கள் கேட்டார்கள்.

"அதிகாரிகள் ஒலிக்குறிப்பு மூலமாக எங்களுக்கு எந்தநேரமும் அக்கறையும் கவனமும் உள்ள இளைஞனே தேவை. இந்த செய்தியைப் புரிந்து முதலிலே உள்ளே வருகிற இளைஞருக்கு வேலை உத்தரவுக் கடிதம் காத்திருக்கின்றது" என்று கூறினார்கள். அதை நான் கவனித்து விட்டு உள்ளே சென்றேன் வேலை கிடைத்தது என்றான் அந்த இளைஞன்.

இது தொடர்பாக ஆன்மீகப் பெரியவர் ஒருவரும் ஒரு கதை சொல்லியிருக்கிறார். இறைவனும் இது மாதிரியான அழைப்புக்களை விடுவித்துக் கொண்டே இருப்பார். இறைவனின் மொழி இயற்கை. அந்த இயற்கையிலே குறிப்புக்கள் வடிவத்திலே இருக்கின்ற அழைப்புக்கள் நாம் அமைதியாக , அக்கறையாக புரிந்து கொள்ளவேண்டும். இதைப் புரிந்து கொண்டால் இறைவனை நெருங்கிக்கொள்ளலாம் என்றார்.

இது இயற்கை நடத்துகின்ற நேர்முகத்தேர்வு. எனக்குத்தெரிந்த நேர்முகத் தேர்வு வேறு மாதிரி!

அது எப்படியென்றால்...

புகையிரதப் பாதையிலே "சிக்னல் மேன்" பதவிக்கான நேர்முகத்தேர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஒருவர் போய் அதிகாரிகளுக்கு எதிரே அமர்ந்திருந்தார். அதிகாரிகள் கேள்வி கேட்டார்கள்.

ஒரே தண்டவாளத்திலே இரண்டு பக்கத்திலேயிருந்து எதிரும் புதிருமாக இரண்டு புகைவண்டிகள் வேகமாக வந்து 'கொண்டிருக்கின்றன. இன்னும் அரை மணி நேரத்திலே அவை இரண்டும் மோதிக் கொள்ளும். இந்த சூழ்நிலையிலே நீ என்ன செய்வாய்? அப்படி என்று கேட்டார்.

அவர் யோசித்து விட்டு உடனே ஓடிப் போய் என் தம்பியை கூட்டிக் கொண்டு வருவேன் அப்படி என்றார்.

"ஏன்? என்று கேட்டார் அதிகாரி. என் தம்பி இன்று வரைக்கும் புகைவண்டி விபத்தை பார்த்ததில்லை சேர்"! என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரச வங்கிகளினூடாக சுயதொழில் கடன் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிஸ்கோ பிரிவினரால் மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்று இருக்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் கடன் அரச வங்களினூடாக செபி திட்டத்தின் கீழ் பெற்றுக்கொடுக்க உள்ளது.

இக்கடன் மூலம் ஆகக்கூடிய தொகையாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதற்கான வட்டிவீதம் குறைவானதாகவும் காணப்படும் என யாழ். தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பொதுமுகாமையாளர் வி.பி. பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

இக்கடன்களை 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கட னுக்கு விண்ணப்பிக்கவுள்ள விண்ணப்பதாரிகள் தாம் மேற்கொள்ளும் சுயதொழில்சார் பயிற்சியினை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தொழிற்பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுநர் மற்றும் பயிற்றுவிக்கும் நிறுவனம் (NAITA), தொழில்நுட்பக்கல்லூரி, பயிற்றுவிக்கும் கல்லூரி, ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றில் ஏதாவது ஒரு நிறுவனத்தில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது தேசிய தொழில்நுட்ப தரச் சான்றிதழ் (NVQ) பெற்றிருத்தல் வேண்டும். மேலும் விண்ணப்பதாரி சுயதொழிலை ஆரம்பித்தல் வேண்டும். ஆரம்பிக்க தயார் நிலையில் உள்ளவர்களுக்கே இக்கடனுதவி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடனுதவியினை பெற விரும்புவோர் சுயமாக தயாரித்த விண்ணப்பத்தினை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் ப.பஞ்சலிங்கம், பொதுமுகாமையாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வீடமைப்புக் கட்டடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-7)

# தேசிய கலை இலக்கிய போட்டி

தேசிய கலை இலக்கியப் போட்டி தொடர்பாக பிரதேச மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் மூன்று கட்டங்களாக நடத்தப்படவுள்ளது.

இதன்போது பாடசாலை மட்டப்போட்டிகள் கோட்டக்கல்வி அதிகாரி ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டு நடைபெறவுள்ளது. திறந்த பிரிவுக்கான போட்டியாளர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் போட்டிக்கான விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிப்பதன் மூலம் போட்டிகளில் பங்கு பற்ற முடியும் என சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இத்திறந்த போட்டிகளுக்கான ஆக்கங்கள் எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்கப்படல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-7)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 25 | 30 | 40 |
| தக்காளி | 10 | 20 | 20 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 10 | 15 | 15 |
| கரட் | 40 | 40 | 40 |
| பூசணி | 35 | 30 | 35 |
| புடோல் | 25-30 | 40 | 30 |
| வாழைக்காய் | 35 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 55 | 60 | 55 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | - | 70 | - |
| பயற்றங்காய் | 40-70 | 80 | 90 |
| லீக்ஸ் | 70 | 70 | 70 |
| பீற்றூட் | 20 | 30 | 20 |
| கறிமிளகாய் | 50 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 200 |
| போஞ்சி | 40 | 50 | 40 |
| கத்தரிதம்புள்ள | 35 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 8-10 | 30 | 20 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 25 |
| வெங்காயப்பூ | 50 | 90 | 50 |

# இராசி பலன்

15.03.2012
(பங்குனி 02, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
அட்டமி முன்னிரவு 10.46 மணிவரை
கேட்டை முற்பகல் 9.50 மணிவரை
இராகுகாலம் 1.50-3.20 மணிவரை
சுபநேரம் 7.50-9.20 மணிவரை
பிரதோச விரதம்

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவர், பயனாளிகளால் பலனுண்டு.

**இடபம்** பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகள் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, . உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள்.

**மிதுனம்** இளமைக்கால நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், கௌரவமான நாள், பொருளாதார நிலை உயரும்.

**கடகம்** பகை விலகி பாசம் கூடும் நாள், உடல் நலம் சீராகும், பயனாளிகளால் பலனுண்டு, செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர்.

**சிங்கம்** சிறப்பான நாள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய நண்பர்களின் சந்திப்புண்டு, பூமியால் இலாபமுண்டு, சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி** விருந்தினர் வருகையால் வியப்படைவீர்கள், தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு, சுபகாரிய செலவுகள் அதிகரிக்கும்.

**துலாம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடரும் எண்ணம் உருவாகும், உடன்பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம்.

**விருச்சிகம்** குடும்பத்தினரின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள், திடீர் பயணம் தித்திக்க வைக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** வழிபாட்டால் சுகம் காணவேண்டிய நாள், சொன்ன சொல்லை காப்பாற்ற துடிப்போடு செயற்படுவீர்கள், வெளியூர் பயணமொன்று உருவாகலாம், சிந்தனை மிகுதியான நாள்.

**மகரம்** சுபவிரயம் ஏற்படும் நாள், வழிபாடு காரிய வெற்றி தரும், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும் நாள்..

**கும்பம்** தன வரவு திருப்திகரமாக அமையும், சமயோசிதப் புத்தியால் பலரையும் கவருவீர்கள், தொலைபேசி மூலம் மகிழ்ச்சிகரமான தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மீனம்** ஆரோக்கியமான நாள், தொழில் சம்பந்தமான புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், நம்பிக்கை நடைபெறும் நாள், போசன சுகமுண்டு.

வளவன்

## மண்டபத்திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் வடக்கு கண்ணகை முன்பள்ளிக்கு திருமதி பாக்கியம் நடராசாவின் நினைவாக நிறுவப்பட்ட புதிய மண்டபத் திறப்பு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சனசமூக நிலையத் தலைவர் ஆ. மகேச்சுரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பொது வைத்திய நிபுணர் டாக்டர் த. பேரானந்தராசா, சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை நீதவான் மு. திருநாவுக்கரசு, கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் பாக்கியராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

# போலியான முத்திரைகளை பயன்படுத்தி நீதவான்களை ஏமாற்றிய கில்லாடி

## யாழ். பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

போலியான இறப்பர் முத்திரையினைப் பயன்படுத்தி இருவரை பிணையெடுக்க முயன்றவரின் முயற்சி நீதிமன்ற பதிவாளரினால் இனங்காணப்பட்டபோது குறித்த நபர் நீதிமன்றத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தப்பிச் சென்ற குறித்த நபர் யாழ். விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த நபரினை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

குறித்தநபர் 17.02.2012 ஆம் ஆண்டு யாழ். நீதவான் நீதிமன்றை ஏமாற்றி அவமதிக்கும் வகையில் J/81 கிராம அலுவலரின் இறப்பர் முத்திரையினையும் யாழ். பிரதேச செயலக உத்தியோகத்தருடைய இறப்பர் முத்திரையினையும் போலியாக தயாரித்தும் அவர்களுடைய கையொப்பங்களையும் போலியாக இட்டும் பிணை எடுக்க முயன்றுள்ளார்.

குறித்த கடிதம் தொடர்பில் யாழ்.நீதவான் நீதிமன்ற பதிவாளருக்கு சந்தேகம் வரவே குறித்த கிராம சேவகரை மன்றுக்கு வருமாறு தொலைபேசியினூடாக அழைத்துள்ளார்.

கிராம சேவகரை நீதிமன்றில் பார்த்த குறித்த நபர் நீதிமன்றிலிருந்து தப்பித்துச் சென்றுள்ளார்.

இதையடுத்து குறித்த நபர் யாழ்.விசேட குற்றத் தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். (ந-4)

# நீதிமன்றை அவமதித்த நால்வருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதவான் நீதிமன்றை அவமதித்து மன்றில் வழக்கு இடம்பெற்றுக் கொண்டிருந்த போது யாழ். நீதவான் நீதிமன்ற திறந்த நீதிமன்றில் கதைத்து இடையூறு ஏற்படுத்திய நால்வருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தாழையடி, மண்கும்பான், சாவகச்சேரி, இயக்கச்சி ஆகிய இடங்களை சேர்ந்த குறித்த நால்வரும் நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் வழக்கு இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் திறந்த நீதிமன்றில் உல்லாசமாக கதைத்து உரையாடிக் கொண்டிருந்தனர்.

குறித்த செயல் நீதிமன்றை அவமதிக்கும் செயலாகும் என கருதப்பட்டு யாழ். நீதவான் மா. கணேசராசா குறித்த நால்வருக்கும் தலா 250 ரூபா அபராதத் தொகையை விதித்ததோடு எச்சரிக்கையும் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (அ-4)

# பெண்களின் தாலிக்கொடியும் சங்கிலியும் அபகரிப்பு

## சந்தேகத்தில் இருவர் கைது

பன்னாகம் விசுவத்தனை முருகமூர்த்தி கோவிலில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் நேற்று புதன்கிழமை காலை 7 மணிக்கு மேற்குறித்த ஆலயத்தில் கோபுர கும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

கோயிலில் இரு குடும்பப் பெண்கள் வழிபட்டுக்கொண்டிருந்த வேளை ஒருவரின் தாலிக்கொடியும் மற்றவரின் சங்கிலியும் அபகரிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் இருவர் அப்பகுதி இளைஞர்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்டவர்களில் ஒருவர் பலாங்கொடையும் மற்றையவர் பாண்ந்துறையையும் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. (அ-3-17)




# எல்லே போட்டியின் சம்பியன்கள்

(கரவெட்டி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற ஆண்களுக்கான எல்லேப்போட்டியில் வேலாயுதம் மகா வித்தியாலய அணியை தோற்கடித்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி சம்பியனாகியது.

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இப்போட்டிகள் இடம்பெற்றன.

இதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிசம்பியனாகியதுடன் வேலாயுதம் மகா வித்தியாலய அணி இரண்டாம் இடத்தையும் மணற்காடு றோ.க.த.க. பாடசாலை அணி மூன்றாம் இடத்தையும் பெற்றது. (அ-3-24)

---


(கரவெட்டி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற எல்லே போட்டியில் மணற்காடு றோ.க.த.க. பாடசாலை அணி வட இந்து மகளிர் கல்லூரி அணியை தோற்கடித்து சம்பியனாகியது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பெண்களுக்கான எல்லே போட்டியில், மணற்காடு றோ.க.த.க. பாடசாலை அணி முதலாம் இடத்தையும் வட இந்து மகளிர் கல்லூரி அணி இரண்டாம் இடத்தையும் பருத்தித்துறை மெதடிஷ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணி மூன்றாம் இடத்தையும் பெற்றது. (அ-3-24)

# வடமராட்சி பிரதேச செயலகத்தின் தடகளபோட்டியில் வெற்றிபெற்றோர்





வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் தடகளப்போட்டியில் ஆண்கள் பிரிவில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் பெண்கள் பிரிவில் மாலுசந்தி மைக்கல் அணியும் சம்பியனாகியது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட 35 கழகங்கள் பங்குபற்றிய தடகளப்போட்டியின் இறுதி நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் 35 புள்ளிகளைப் பெற்று நவஜீவன்ஸ் அணி முதலாம் இடத்தையும் 31 புள்ளிகளைப் பெற்று இமையாணன் மத்திய அணி இரண்டாம் இடத்தையும் 29 புள்ளிகளைப்பெற்று மைக்கல் அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

பெண்கள் பிரிவில் 42 புள்ளிகளைப் பெற்று மைக்கல் அணி முதலாம் இடத்தையும் 22 புள்ளிகளைப் பெற்று வதிரி பொம்மஸ் அணி இரண்டாம் இடத்தையும் 19 புள்ளிகளைப் பெற்று உடுப்பிட்டி யுத் அணி மூன்றாம் இடத்தையும் பெற்றது. (அ-3-24)

# சாவ.சு.வை. அதிகாரி பிரிவினருக்கு தகவல் தொடர்பு சாதனங்கள்

(சாவகச்சேரி)

யாழ். மாவட்டத்தில் ஜப்பானிய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் போஷாக்கு மேம்படுத்தல் திட்டதிற்காக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினருக்கு தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜப்பானிய சமூக அபிவிருத்தி நிதிய திட்டத்தின் கீழ் ஒலிபெருக்கி சாதனங்கள், புகைப்பட பிரதி இயந்திரம், அச்சு இயந்திரத்துடன் இணைந்த மடிக்கணனி, பக்ஸ் இயந்திரம் உட்பட மேலும் பல சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்படும் போஷாக்கு மேம்பாட்டு திட்டத்தை மேலும் விஸ்தரித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனேயே மேற்படி சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# தப்பியோடிய கைதிகளுக்கு சிறைத்தண்டனை

யாழ். சிறைச்சாலையில் இருந்து தப்பியோடிய கைதிகள் இருவருக்கு யாழ்.நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது. இரு வெவ்வேறுபட்ட சம்பவங்களேடு தொடர்புடைய கைதிகள் இருவரில் ஒருவர் சிறைச்சாலையின் கூரையினை பிரித்தும் மற்றையவர் சிறைச்சாலை மதிலினை பாய்ந்தும் தப்பியோடியுள்ளனர். இதில் ஒருவர் 3 தடவைகளுக்கு மேல் தப்பித்துச் சென்றுள்ளார்.இவ்விருவரும் தனித்தனியாக கடந்த 9, 10 ஆம் திகதிகளில் யாழ்.நீதவான் ம. கணேசராசாவினால் விசாரணை செய்யப்பட்டு ஒருவருக்கு 6 மாத கால சிறைத் தண்டனையும் சிறையிலிருந்து 3 தடவை தப்பிச் சென்ற கைதிக்கு 9 மாத சிறைத்தண்டனையும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். (அ-4)

# பௌதிக வளப்பற்றாக்குறையுடன் தாழையடி றோ.க.த.க. பாடசாலை

(கரவெட்டி)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தாழையடி றோ.க.த.க. பாடசாலை கடந்த 2010 ஆம் ஆண்டு மீண்டும் தனது சொந்தக் கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ள போதும் பல பௌதீக வளப்பற்றாக்குறை காணப்படுகின்றது.

வடமராட்சி கிழக்கு தாழையடி றோ.க.த.க. பாடசாலை யுத்தத்திற்கு முன்னர் சிறப்பாக இயங்கியதாகவும் பின் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு தனது சொந்த இடத்தில் இயங்கி வரும் இப்பாடசாலை பௌதீக வளம் போதியளவு இல்லாமையினால் மாணவர்கள் கல்வி கற்பதில் பின்தங்கிய நிலை காணப்படுகின்றது.

இதில் முக்கியமாக தற்போது பாடசாலைக்கு சுற்றுமதில் இன்மையால் பாடசாலை விடுமுறை நாட்களில் கால்நடைகள் பாடசாலையை அசுத்தப்படுகின்றன.

இதனால் பாடசாலை சமூகம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றது.

எனவே அரச.அரச சார்பற்ற நிறுவனங்கள் இப்பாடசாலைக்கு சுற்றுமதில் அமைப்பதற்கு உதவ முன்வரவேண்டுமென பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# மனித உரிமைமீறல்கள் குறித்து இலங்கை பதிலளிக்க வேண்டும்

## நோர்வேயும் ஐரோப்பிய ஒன்றியமும் வலியுறுத்து

**அரசாங்கம், விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு பதிலளித்தேயாக வேண்டும் என நோர்வேயும் ஐரோப்பிய ஒன்றியமும் வலியுறுத்தியுள்ளன.**

இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நேற்று முன்தினம் நோர்வே அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கம் போர்க்குற்றச்சாட்டுக்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற குற்றச்சாட்டுக்களுக்கு தாமதமின்றி பதிலளிக்க வேண்டும். அதேவேளை நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் ஜெனீவாவில் இலங்கைக்கெதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஆதரிக்கப்போவதாகவும் நோர்வே அறிவித்துள்ளது.

இதேவேளை, ஐ.நா வுக்கான டென்மார்க்கின் நிரந்தர பிரதிநிதியும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தில் பங்கேற்பவருமான ஸ்டீபன் ஸ்மிட் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கம் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையுடன் இணங்கிச் செயற்பட வேண்டும். அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளித்தல், பொறுப்புக்கூறும் விவகாரங்களுக்கு பதிலளித்தல் என்பன இனங்களுக்கிடையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அவசியம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## இலக்கிய மன்ற நிர்வாகத்தெரிவு

சாவகச்சேரி

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தில் நூலக எல்லைக்குட்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள் , மாணவர்களை இணைத்து இலக்கிய மன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் தலைவராக நூலகர் இ. தர்மலிங்கம், உப தலைவராக நூலக உதவியாளர் த. பீதாரம்பரம், செயலாளர் திருமதி நாகராஜா தேவராணி, உப செயலாளர் செல்வி கீதாராணி, பொருளாளர் த. சிவகுமாரன், பத்திரிகைப் பொறுப்பாளர் க. ஜசிதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் 9 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-2-29)

# நெல் கொள்வனவில் குளறுபடிகளை ஏற்படுத்துவதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சி

## அரசாங்கம் குற்றச்சாட்டு

அரசாங்கத்தினால் சுமுகமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வரும் நெல் கொள்வனவில் குளறுபடிகளை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஜே.வி.பியினரும் சதி முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளியாது என கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்திற்கு சேறு பூசுவதனை மாத்திரமே குறியாக கொண்டிருக்கும் ஐ.தே.கவும் ஜே.வி.பியும் விவசாயிகள் மீது அதிக அக்கறை கொண்டவர்களாக பாசாங்கு செய்கின்றனர்.

நெல் கொள்வனவின் போது கிலோவொன்றிற்கு 40 ரூபா வழங்க வேண்டும் என்ற புதுச்சர்ச்சையை உருவாக்கி சில விவசாயிகளினது மனதை திசைதிருப்பி நெல் கொள்வனவிலிருக்கும் சுமுக நிலையை சீர்குலைக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

விவசாயிகளை வெட்டிக் கொலை செய்து நெல் களஞ்சியசாலைகளுக்கு தீ மூட்டிய ஜே.வி.பியினருக்கு இன்று விவசாயிகள் மீது புதிதாக அக்கறை ஏற்பட்டுள்ளமை நகைப்பிற்குரிய விடயமாகவுள்ளது.

மீனவர்களை தூண்டி விட்டு அநியாயமாக ஒருவரது உயிரிழப்பிற்கு காரணமான இவர்கள் இன்று விவசாயிகளையும் தூண்டி வருகின்றனர். இந்த சதி முயற்சிகளுக்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளியாது என்றார் அமைச்சர்.

பெரும்போகத்தில் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் தொன் நெல்லினை கொள்வனவு செய்வதற்கு நாம் திட்டமிட்டிருந்த போதும் கிடைக்கும் அனைத்து நெல்லினையும் கொள்வனவு செய்வதற்கும் நாம் திட்டமிட்டிருந்த போதிலும் கிடைக்கும் அனைத்து நெல்லினையும் கொள்வனவு செய்யுமாறு ஜனாதிபதி எனக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குறிப்பிட்ட மாவட்டத்தின் களஞ்சியசாலையில் போதிய இடவசதி இல்லாவிடத்துஅவை லொறி மூலம் ஏனைய களஞ்சியசாலைகளுக்கு கொண்டு செல்லப்படுமெனவும் அவர் கூறினார்.

நெல் கொள்வனவில் அரசாங்கத்தின் திட்ட முறைகளை நன்கு அறிந்துவைத்துள்ள ஐ.தே.க வும் ஜே.வி.பியும் குழப்பம் விளைவிக்க எதுவும் இல்லாத நிலையிலேயே விலையை ஒரு காரணமாக காட்டி விவசாயிகளை குழப்பி வருகிறது.

களஞ்சியப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் விவசாயிகளை குழப்பி வருகிறது.

களஞ்சியப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் 14 சதவீதத்திற்கும் குறைவான ஈரப்பதன் கொண்ட நெல் கிலோ ரூபா 28 முதல் 30 வரை வழங்க எடுக்கப்பட்டிருக்கும் தீர்மானத்தில் அரசாங்கம் ஒருபோதும் மாற்றங்களை கொண்டுவர மாட்டாதெனவும் அவர் இதன் போது உறுதியாக கூறினார். (அ-2)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (அ-7)


## சேவை நலன் பாராட்டு

### திரு சுப்பிரமணியம் வாமதேவன்



எமது பாடசாலையின் விடுதி மேற்பார்வையாளராக 14 வருடங்கள் சிறப்புடன் சேவையாற்றி 14.03.2012 அன்று ஓய்வு பெற்ற திரு. சுப்பிரமணியம் வாமதேவன் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ பிறந்த நன் நாளிலே வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

(7701)


## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி யாழ் பிரதேச ஓய்வூதிய சபையின் 4 ஆவது பொதுக் கூட்டம் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பி.பாலசுந்தரம்பிள்ளையும்; விருந்தினராக பெற்றோர் சங்க தலைவர் அசோக பெரேராவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)


## ஆசீர்வாத பெருவிழா!

தெய்வத்தின் திருப்பாதத்தில்



இயேசு ஜீவிக்கிறார் ஊழியத்தின் 3புவது வருட சுவிசேஷ மாநாடு

அன்பின் வாசகர்களே! வானத்தையும் பூமியையும் படைத்த தெய்வம் மனித அவதாரம் எடுத்து, பிரம்ம புத்திரனாக, ஆண்டவராகிய இயேசு எனும் நாமத்தில் இரட்சகராக, மானிடனைத் தேடி பூமிக்கு வந்தார். இன்றும் அவர் ஜீவிப்பதினால் அந்த தெய்வம் உங்களை அரவணைக்க ஆவலோடு இருக்கிறார். எனவே சமாதானமற்ற உள்ளங்களுக்கு சமாதானத்தை அருளவும், தீராத நோய்கள், துன்பம், கண்ணீர் நிறைந்த வாழ்விலிருந்தும், இருள், பில்லிசூனியம், மாந்திரீகக் கட்டு, பிசாசின்பிடி, தீமையான பாவக் கட்டுகளிலிருந்தும் விடுதலை தரவும், நிம்மதி, ஆறுதல் அளிக்கவும் உங்களைத் தேடுகிறார். அவர் நாமத்தினால் மட்டுமே மனுக்குலத்திற்கு விடுதலை இருப்பதினால் ஜாதி, மத, இன, பாகுபாடின்றி உங்கள் வாழ்வு சுபீட்சம் அடைய அனைவரையும், அன்புடன் அழைக்கிறோம்.
இதுவே உங்கள் அற்புதத்தின், அதிசயத்தின் நாட்கள்! தெய்வீக சுகமளிக்கும் நாட்களை நழுவவிடாதீர்கள். தேவ கிருபை, அருள் பெற வாரீர்.

இடம்:- நகரசபை மைதானம்
(துரையப்பா மைதானம் அருகில்) யாழ்ப்பாணம்

காலம்:- 2012 மார்ச் 16, 17, 18 மாலை 5.00 மணி

செய்தி:-
M.R. இராஜேந்திரம், C.V. இராஜேந்திரம்

மைதானத்திலிருந்து பஸ் சேவை இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

34வது வேதாகம கருத்தரங்கு! பிரவேசம் இலவசம்!

காலம் - மார்ச் 13 முதல் 17ம் திகதி வரை நேரம் - காலை 9.00 - 1.00
இடம் - A.O.G. சபை, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்

For Information:- Jesus Lives Evangelical International Ministry
T.P. 2522608, Fax - 2525695, Web- jesuslivesIk.com
Jaffna Contact- Rev. Rajasooriyar 0777238300, 0779946524, 0758487994, 0755048503

# சர்வதேச மன்னிப்பு சபையின் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை

## ஹக்கீம் தெரிவிப்பு

சர்வதேச மன்னிப்பு சபையினால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சட்டவிரோதமான முறையில் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை குற்றம் சுமத்தியுள்ளது. சர்வதேச ரீதியில் அபகீர்த்தியை ஏற்படுத்தும், நோக்கில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபை மிகைப்படுத்தப்பட்ட அதீதமான தரவுகளை வெளியிட்டு வருவதாகவும் கைது செய்யப்பட்ட மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்கள் பற்றிய சகல தரவுகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டம் அல்லது சாதாரண சட்டத்தின் கீழ் மட்டுமே கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற தொண்டு நிறுவனமொன்று எவ்வித ஆதாரமுமின்றி குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது வருத்தமளிப்பதாகவும் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தால் அதனை அரசாங்கத்திடம் தெரிவித்து தீர்வு காண முடியும் என தெரிவித்துள்ளார்.


இந்த அறிக்கையை வன்மையாக கண்டிப்பதாக குறிப்பிட்டுள்ளார் அவர். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வரும் தருணத்தில் இந்த அறிக்கை திட்டமிட்டு வெளியிடப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார். (அ-7)



இந்தியன் தென்பகுதி இராணுவத்தளபதி யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு யாழ்.இராணுவத் தளபதியினை பலாலி படைமுகாமில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது இந்திய தென்பகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஏ.கே.சிங்கிற்கு யாழ்.இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

# ஏ 9 வீதியில் விபத்து; பெண் படுகாயம்

(மல்லாவி)



யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த டிப்பர் ரக ஊர்தியும் வவுனியாவில் இருந்து யாழ். நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றும் ஒன்றையொன்று விலத்திச் செல்ல முற்படுகையில் குறுக்குவீதி ஒன்றில் இருந்து ஏ9 வீதியைக் கடக்க முற்பட்ட மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் நேற்றுக்காலை 7.30 மணிக்கு இப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மாங்குளம் புதிய கொலனியைச் சேர்ந்த த.சிவராணி (வயது 45) என்ற குடும்பப்பெண் தலையில் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த பெண்ணின் உறவினர்கள் டிப்பர் ரக ஊர்தி சாரதியை தாக்கியதால் சாரதி படுகாயமடைந்துள்ளார். சம்பவ இடத்திற்கு சென்ற மாங்குளம் போக்குவரத்து பொலிஸார் தடைப்பட்டிருந்த ஏ9 வீதி போக்குவரத்தை சீர்படுத்தியதுடன் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-15)

# யாழ்.மாவட்டத்தில் பால் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சங்கத்தின் கிளை நிலையங்களில் தற்போது பால் தட்டுப்பாடு நிலவுகின்றது என சங்கப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இம்மாத காலங்களில் பால் உற்பத்தி குறைவாக இருப்பதும் முன்பள்ளி சிறார்களுக்கு பால் வழங்கும் காரணத்தினாலும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் பாலின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக பதனிடப்பட்ட பால் பைக்கற் வழங்கப்படுகிறது. இதற்கு வாடிக்கையாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

மேலும் சங்கத்திற்கு பால் வழங்கி வந்த சில கால்நடை வளர்போர் கூட்டுறவுச் சங்கமும் தற்போது நிறுத்தியுள்ளதாகவும் தென் பகுதியிலிருந்து வந்த பிற நிறுவனங்களுக்கு பால் வழங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மக்களினதும் சிறார்களினதும் நன்மை கருதி பால் வழங்குமாறு வழங்குநர்களைக் கேட்டுள்ளார். (அ-7)

# எமிரேட்சிலிருந்து இலங்கை வந்தவர்கள் மரணம்

லண்டனிலிருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்த பெண்ணொருவரும் அவருடைய மகனும் திடீரென உயிரிழந்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு வத்தளையில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்ட 22 வயதான தாயும் அவருடைய ஒன்றரை வயது ஆண் பிள்ளையும் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன கூறியுள்ளார். உயிரிழந்த பெண்ணின் கணவரும் நோய்வாய்ப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸ் ஊடப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை மூன்று மணிக்கு அபுதாபியிலிருந்து இலங்கை வந்தடைந்த விமானத்தின் மூலம் வருகை தந்த குறித்த குடும்பத்தினர் சீதுவ பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்ததாகவும் அவர்கள் திடீரென சுகயீனமுற்றதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார். (அ-7)


**மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தானம் பங்குனித் திங்கள் உற்சவ தினங்கள்**

*19.03.2012, 26.03.2012, 02.04.2012, 09.04.2012* ஆகிய தினங்களில் நடைபெற உள்ளதால் உற்சவ காலக் கடைகள் *16.03.2012* வெள்ளிக்கிழமை பி.பகல் *2* மணிக்கு, அர்ச்சனை கடை உட்பட சகல கடைகளும் ஏலத்தில் வழங்கப்படும். கடையை ஏலத்தில் எடுப்பவர்கள் முழுப்பணத்தையும் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளவும்.

**முக்கிய அறிவித்தல்**

திருப்பணி, அன்னதானத்துக்கு நிதி அன்பளிப்புச் செய்வோர் ஆலய அலுவலகத்தில் மாத்திரம் நிதியை செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளவும்.

தர்மகர்த்தா
பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன்
தேவஸ்தானம்

(7703)



**1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

**அமரர் கனகசபாபதி புஸ்பராசமணி**

தோற்றம் 15 . 10 . 1931

மறைவு 26 . 03 . 2011



அன்புள்ள அம்மாவே! ஆண்டொன்று ஓடினாலும்
ஆறுமா எங்கள் துயரம் கண்மூடித் திறக்கும் முன்
காலன் உன்னை அழைத்தானே
தினந் தோறும் உனது நினைவில்
கண்ணீர் காவியம் ஆகின்றது
உனது பிரிவால் நிம்மதியை
தொலைத்து விட்டோம் அம்மாவே!


அமரர் கனகசபாபதி புஸ்பராசமணி அவர்களின் ஓராண்டு நினைவுதின ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று 15.03.2012 வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மயிலு வீதி,
ஆறுகால்மடம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(7690)

# நீ களைப்படைந்து விட்டாயா?




## ஆன்மீகம் 06

நீ வீடு போய்ச்சேரும் வரை, நீ ஓய்வெடுக்க முடியாது.பாதையில் சிறிது அமரலாம்- சிறிது ஓய்வு எடுக்கலாம் - ஆனால் அங்கேயே எப்போதும் இருக்க முடியாது. ஒரு இடைவேளை மட்டுமே உனக்குக் கிடைக்கும். வாகனம் செல்லும் வீதியில் நீ இளைப்பாற, காலைச் சற்று நீட்டி மடக்க ஒரு ஓய்விடம் இருக்கலாம். ஆனால் நீ அங்கே அமைதியாய் இருக்க முடியாது. ஏனெனில் உன்மனம் சொல்கிறது, நகர்ந்து செல் என்று. இளைமைப் பருவத்தில் உன்னுடைய தேடல் வேறு எங்கோ இருக்கிறது. எந்தப் புதுப்படம் காட்டப்படுகிறது, எங்கே போவது? எந்த விருந்திற்குப் போவது? என்பவற்றில். பிறகு நீ மேலும் நகர்ந்து செல்கிறாய். பிறகென்ன? உனக்குச் சொந்தமாக வீடு கிடைக்கிறது. குழந்தைகள் வருகின்றனர்.

தனத்திருப்போர், தங்களை விடத் திருமணமானவர்கள் சந்தோசஷமாக இருப்பதாக நினைக்கிறார்கள். திருமணமானவர்கள், திருமணமாகாதவர்களே மிகவும் சந்தோஷமாக- சுதந்திரமாக- இருப்பதாக நினைக்கிறார்கள். குழந்தைகளில்லாதவர்கள் குழந்தைகள் உள்ளவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக நினைக்கிறார்கள். குழந்தைகள் இருப்பவர்கள் தங்கள் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களானதும் அவர்களுக்குச் சுதந்திரம் கிடைக்கும் என நினைக்கிறார்கள். வாழ்க்கை இப்படியாக நகர்ந்து கொண்டே இருக்கிறது. ஆனால், எல்லாமே சலிப்பைத் தருகிறது.

ஒரு ஆன்மீகப் பாதையிலிருந்து மற்றொரு ஆன்மீகப் பாதைக்கு மாறுகிறாய். இந்தப்பயிற்சி செய்கிறாய். அந்தப்பயிற்சி செய்கிறாய். அதுவும் சலிப்பதைத் தருகிறது. நான் இருபது வருடங்கள் தியானம் செய்திருக்கிறேன். தியானம் செய்வதில் சலித்துப்போய்விட்டேன். தயவுசெய்து என்னை வேறு ஒரு தியானம் செய்யச் சொல்லாதே. போதும் போதும். எல்லாமே போதும் பிராணாயாமம், அதை



மறந்து விடு அது மிகவும் சலிப்பானது.

ஒருவர் என்ன செய்கிறார்? எங்கே போகிறார்? ஆசைதான் உன்னைச் சோர்வடையச் செய்கிறது. உன் மனதிலுள்ள வேட்கைதான் உன் உடலைவிட மனத்தை மிகச் சோர்வடைய வைக்கிறது. உனக்கு விருப்பமிருந்தால், பதினைந்து மணி நேரம்கூட அற்புதமாய் வேலை செய்யலாம். விருப்பமில்லையெனில் நான்கு மணிநேர வேலை கூட சோர்வைத் தரும். விருந்துக்குத் தயார் செய்தல், அலங்கார வேலைகள் ஏற்பாடுகள் செய்தல்- இவை உனக்குப் பிடித்தால் பலமணி நேரங்கள், பின்னிரவு வரைகூட வேலை செய்வது களைப்பைத் தராது. ஆனால் உனக்கு விருப்பிமில்லாத இடத்தில் வேலை செய்தால், பல கோப்பி, தேநீர் இடைவேளைகள் எடுத்துக்கொள்கிறாய் அதற்குப் பின்னும் களைப்பை உணர்கிறாய்.


நீ எந்த வேலையும் செய்யாமல் வெறுமனே உட்கார்ந்து சிந்திக்க மட்டுமே செய்கிறாய்- அது உன்னைக் களைப்படையச் செய்கிறது. களைப்பு என்பது யோசனையால் மட்டுமே வருகிறது, வேலையினால் வருவது இல்லை.

நீ தெய்வத்துடன் சேர்ந்து ஓய்வெடுக்க ஓரிடம் இருக்கிறது. அதுதான் அன்பு- அது தான் சரணடைதல். ஆனால் நீ உண்மையிலேயே கனளப்படைந்து கீழே விழுந்தால் அதுதான் சரணாகதி. இதைத்தான் காலங்காலமாய், ஞானம் பெற்ற குருமார்கள் சொல்லி வந்திருக்கிறார்கள். நீ உன் பயிற்சிகளை நீயாகவே செய்துவா. உன்னால் மேலேபோக முடியாதபோது அவை எல்லாம் சலிப்பைத் தருகையில் வந்து ஓய்வெடு. அதனால் தான் ஞானம்பெற்ற குருமார்களின் இடங்கள் ஆசிரமங்கள் என அழைக்கப்பட்டன. ஆசிரமம் என்றால்- எங்கு நீ வந்து உன் களைப்பை போக்கிக் கொள்கிறாயே அந்த இடம் என்று பொருள். ஆ என்றால் இல்லாமல், சிரமம் என்றால் முயற்சி. எங்கே மன, உடல் ரீதியான சிரமங்கள் மறைகின்றதோ அந்த இடமே ஆசிரமம். சற்று அந்த ஒளியில் உட்கார். அங்கே ஒரு ஜோதி- ஒரு விளக்கு- உனக்காக எரிந்து கொண்டிருக்கிறது. அதன் வெளிச்சத்தில் நீ சற்று அமர்ந்தால் நீ ஒளிர்கிறாய். நீ செய்ய வேண்டியது எதுவும் இல்லை. அது உன்காகவே எரிந்து கொண்டிருக்கிறது. நீ செய்ய கொள்ளவேண்டியது இணைத்துக் கொள்ளுதல் மட்டுமே. சற்று அமர்ந்து தெய்வீக உணர்வை உணர்- தெய்வீகத்தின் பகுதியாய் இரு. அப்பொழுது இவ்வுலகில் எதனாலும் உன்னை களைப்படையச் செய்யமுடியாது என உணர்வாய். நீயே அன்பின் ஆதாரம் ஆகிறாய். நீ அதுவாக இருக்கும் பொழுது வேறு எதுவும் உன்னைப் பாதிக்காது.

(தொடரும்)

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

# உங்கள் கைரேகை பலன்கள் 06



**கிரகங்கள் கிரகமாய் அமைய வேண்டிய இடங்கள்**

*1.குரு, 2.சனி, 3.சூரியன், 4. புதன், 5.சதுரம், 6.செவ்வாய், 7.முக்கோணம், 8.கீழ்செவ்வாய், 9.சுக்கிரன், 10.மேல் செவ்வாய்,*

*11., 12., 13., 14. — சந்திர மேட்டின் மூன்று பகுதி*

## ரேகைகளும் கிரகங்களும்

**கிரக மேடுகளில் நோய்க்குறிகள்**

கிரகமேடுகள் அதீதப்பட்டிருப்பதும், அவைகளின் சிக்கலான சில ரேகைக்குறிகள் அமைவதும் நோய்களைக் குறிப்பனவாகும். நோய்கள் காலச்சந்தர்ப்பத்தை ஒட்டிவருமேயன்றி தொடர்ந்து வராது.

ஒருவர் கையில் குரு மேட்டில் கிரகம் உச்சமாயிருந்தால் அது அவரது தேகத்தில் இரத்தக் கொதிப்பும் சுவாசாசயத் தொந்தரவும் ஏற்படும் என்பதை குறிப்பதாகும் சனிமேட்டில் கிரகம் உச்சமானால் அவருக்கு நரம்புகளினால் தொந்தரவு உண்டாகும் என்பதையும் கால் நோவும், காது, பற்கள் சம்பந்தமான நோய்களும் உண்டாகும் என்பதையும் அது குறிப்பதாகும். மூட்டுக்களில் பிடிப்பும், பாரிசவாயுவும் மற்றும் துர்க்கிருத்தியங்களால் நோயும் அவருக்கு உண்டாகக்கூடும் என்பதையும் அது காட்டுவதாகும். சூரியமேட்டில் கிரகம் உச்சமாயிருந்தால், அவருக்குச் சில சமயங்களில் இருதயத்துடிப்பு அதிகரிக்கும். கண்நோய்வரும், பார்வை குறையும்.

புதன் மேட்டில் கிரகம் உச்சமாயிருந்தால், அது பித்தாசயநோய், மஞ்சக்காமாலை முதலிய நோய்கள் வருவதைக் குறிப்பதாகும். மேல் செவ்வாய் மேட்டில் கிரகம் உச்சமாயிருந்தால் தொண்டைநோய், இருமல் முதலிய வியாதிகள் வரக் கூடும் என்பதை அது குறிப்பதாகும். சந்திரமேட்டில் கிரகம் உச்சமாயிருந்தால், மகோரம், சோகை, பிடிப்பு, ஸ்திரீ சம்பந்தமான நோய் முதலிய வியாதிகள் வரும் என்பதையும், பார்வைக் குறைவும் சில சமயங்களில் குருட்டுத் தன்மையும் உண்டாகும் என்பதையும் குறிப்பதாகும். சுக்கிரமேட்டில் கிரகம் உச்சமாயிருந்தால், அது மூத்திரேந்திரிய நோய் உண்டாகும் என்பதைக் காட்டுவதாகும். கீழ்செவ்வாய்மேட்டில் கிரகம் உச்சமாயிருந்தால், சுக்கிரமேட்டில் கிரகம் உச்சமாயிருப்பதற்கு ஏற்படும் பலனே ஏற்படும்.

**கிரகங்களின் விபரீதம்**

ஒருவர் கையில் குருமேட்டில் குருவிருந்தால், அவருக்கு எவ்வித ஆபத்தும் நேராது. குரு உச்சத்திலிருந்தால், அவர் ஐம்புலனுக்குக் கதீதமான வழியில் சிந்தனையைச் செலுத்துவார். சாஸ்திர ஆராய்ச்சியும், ஆத்ம விசாரணையும் செய்வார். தான் அதிகமாய்க் கொண்டிருக்கும் கர்வத்துக்கு ஒருக் கால் பங்கமேற்படில், மன மாழ்கி உயிரை விடினும் விடுவர். ஆனால் இவ்விதம் செய்வது அபூர்வமே.

ஒரு கையில் சனி அதீதப்பட்டிருந்தால், அவர் உயர்ந்த ஸ்தானங்களிலிருந்து தேகத்தைக்கீழே தள்ளுவார். விஷங்களினால் தனக்கு முடிவைத் தேடுவார். மேல் செவ்வாய் அதீதப்பட்டிருந்தால் தன்னுடன் எப்போதும் ஆயுதம் வைத்திருப்பார். அதனாலே திடீரென தனக்கு முடிவைத்தேடுவார். புதன் அதீதப்பட்டிருந்தால், சனி அதீதப் பட்டிருந்தால், செய்வதைப் போல், விபரீதமான செயல்களைப் புரிய மாட்டார். ஆனால் விஷத்தால் தன் வாழ்நாளை முடித்துக் கொள்ள நாடுவார்.

ஒருவர் கையில் சந்திரன் அதீதப் பட்டிருந்தால்,அவர் தேகபாரம் தாங்கமுடியாமல் ஜலத்தில் மூழ்குவார். சூரியனும் சுக்கிரனும் அதீதப் பட்டிருந்தால், அவருக்கு விபரீத எண்ணம் உண்டாகாது. உலகத்தில் தானும் மற்றவர்களும் சுகமாயிருக்க ஆசைப்படுவர். அவருக்குக் கஷ்டம் ஏற்பட்டபோது சுக்கிரன் அவருக்குச் சமாதானத்துக்கான பல வழிகளையும் காட்டிக் கொடுப்பான்.

(தொடரும்)

**சக்தி**

# குற்றச்செயலில் ஈடுபட வேண்டுமா? இராணுவத்தில் இணையுங்கள்

## பொன்சேகா கூறுகிறார்



(கொழும்பு)

குற்றச்செயல்களில் ஈடுபட வேண்டுமாயின் அரசாங்கத்தில் இணைந்துகொள்ள வேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆளும் கட்சி அரசியல்வாதியொருவர் மீண்டும் இளைஞர் ஒருவரை கொலை செய்துள்ளார். பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த வேண்டுமாயின், சொலை செய்ய வேண்டுமாயின், போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட வேண்டுமாயின் அரசாங்கத்தில் இணைந்த கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களுக்கு அடைக்கலம் வழங்கியமைக்காக சரத் பொன்சேகாவிற்கு எதிராக வழங்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழங்கு விசாரணைகளில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஜெனீவா கூட்டத்தொடர் குறித்து அரசு போலியாக செயற்படுகிறது

## அத்தநாயக்க எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்படுமாயின் அதனை பாராளுமன்றத்தின் ஊடாகவே உள்நாட்டில் அமுல்படுத்த வேண்டும். அரசாங்கமானது அந்தப் பொறுப்பினை தனியாக நடைமுறைப்படுத்த முற்பட்டால் நாட்டுக்கு பேராபத்தையே அது ஏற்படுத்தும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் தேசியத்துவம் நிறைந்த ஒரு விடயமாகும். இதனை முழு அளவில் நிறைவேற்றுவதாக அரசாங்கம் ஜெனீவாவில் உறுதிமொழியளித்துள்ளது. எனவே, அரசியல் சுயநலனுக்காக ஜெனீவா விடயம் தொடர்பிலான போலித் தகவல்களை அரசாங்கம் உள்நாட்டில் பரப்பக்கூடாது என அவர் சுட்டிக் காட்டினார்.

ஜெனீவாவில் நடைபெறுகின்ற ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடர் தொடர்பாக அரசாங்கம் போலியான தகவல்களையே மக்களிடையே பரப்பி வருகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உள்நாட்டில் அமுல்படுத்துவதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஊடாக ஜெனீவாவிற்கு அரசாங்கம் வாக்குறுதியளித்துள்ளது. எனவே, போலி பிரசாரங்களை நாட்டிற்குள் பரப்பக்கூடாது. (அ-7)

# தனியார் மருந்தகங்களை மேம்படுத்த வேலைத்திட்டம்

நாடெங்கிலுமுள்ள தனியார் மருந்தகங்கள் ஊடாக நாட்டு மக்களுக்கு சிறந்த சேவையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் விடேச வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருப்பதாக அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மருந்து பொருட்கள் அதிகார சபையின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த பெணரகம நேற்று முன்தினம் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுகாதார கல்வி பணியகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், தனியார் மருந்தகங்கள் மக்களுக்கு வழங்குகின்ற சேவையை மேம்படுத்தவென பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தனியார் மருந்தகமும் குளிரூட்டப்பட்டிருப்பது, தடுப்பு மருந்துகள் களஞ்சியப்படுத்தும் அறை குளிரூட்டப்பட்டிருப்பது, தகுதியான மருந்தாளர் பணியாற்றுவது, ஆயுட் காலம் முடிவுற்ற, மருந்து பொருட்கள் சந்தைப்படுத்தாமல் இருப்பது, வைத்தியர்களின் சிபாரிசு மருந்துச் சிட்டை இன்றி மருந்து பொருட்களை வழங்காதிருத்தல் போன்றன கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஒழுங்குவிதிகள் எந்த மருந்தகத்திலாவது மீறப்படுமாயின் அது தொடர்பாக எழுத்து மூலமாகவோ தொலைபேசி ஊடாகவோ பிரதேச மட்டத்திலுள்ள எமது தகுதி வாய்ந்த அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்ல முடியும். மாகாண சுகாதார பணிப்பாளர்கள், மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர்கள், உணவு மற்றும் மருந்து பொருட்கள் தொடர்பான பரிசோதகர்கள், மருத்துவ அலுவலக அதிகாரிகள் போன்றோர் தகுதி வாய்ந்த அதிகாரிகளாகச் செயற்படுகின்றனர். (அ-2)

# கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்கள் விரிவுரைகளைப் புறக்கணித்தனர்

(யாழ்ப்பாணம்)

கலைப்பீடத்தில் இரண்டாம் வருட மாணவர்கள் தமது சிறப்புக் கலை பாடத் தெரிவினை மேற்கொள்ளும் விடயத்தில் புதிதாக சில கட்டுப்பாடுகள் புகுத்தப்பட்டுள்ளன. இக் கட்டுப்பாடுகளை தளர்த்தவும் சிறப்புக்கலை பாடத்தெரிவினை மேற்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்குமாறு கோரியும் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்கள் நேற்றுக் காலை பகிஸ்கரிப்பு ஒன்றினை மேற்கொண்டனர்.

கடந்த வருடங்களில் ஒவ்வொரு துறைகளிலும் மட்டுப் படுத்தல்கள் எதுவுமின்றி தகுதி படைத்த மாணவர்கள் சிறப்புக் கலையை கற்பதற்கு தெரிவு செய்யப்பட்டனர்.

ஆனால் இம்முறை மாணவர்கள் அடைந்திருக்க வேண்டிய GPA அளவு அதிகரிக்கப்பட்டமையினால் 40 மாணவர்களே GPA அளவின் அடிப்படையின் முன்னுரிமையில் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இப்புதிய விதியினால் ஒரு பாடத்தினை முதல் வருடத்தில் கற்று அப்பாடத்தை சிறப்புக்கலையாக தொடர்ந்து கற்க விரும்பும் GPA அடைவை அடைந்த மாணவர்கள் பலரும் பாதிக்கப்படுவதாக மாணவர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட சில விசேட பாட அனுமதியின் கீழ் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் பலர் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

அரசாங்கம் வருடா வருடம் பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கும் மாணவர்கள் தொகையினை அதிகரித்துச் செல்லும் நேரத்தில் மாண்வர்களினதும் சிறப்புப் பாடத் தெரிவினை மட்டுப்படுத்துவது அநீதியானதாகும் எனவும் மாணவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

சிறப்புக்கலை பாடத் தெரிவில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையினால் மாணவர்கள் விரிவுரைகளுக்கு செல்லாது இருப்பதால் வரவுப் பதிவேட்டில் இக்குழப்ப நிலை தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (அ-4)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

அதிகார் வீதி மட்டக்களப்பைச் சேர்ந்த் நாகேந்திரராசா கோபிநாத் என்பவருடைய அடையாள அட்டை (902742239V) சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய பேஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலு வலக நேரத்தில் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளலாம் (அ-2-7)

# இந்து நாகரிகம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அரசாங்கப் பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் இந்துநாகரிக பாடத்தினை போதிக்கும் ஆசிரியர்களுக்கு இந்துநாகரிகம் தொடர்பாக மேலதிக ஆலோசனைகளையும் விடய அறிவினையும் வழங்கும் முகமாக பயிற்சிப் பட்டறையொன்றினை எதிர்வரும் மே மாதம் 29, 30, 31 ஆம் திகதிகளில் நடத்தவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

இந்து சமய கலசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசு அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி பட்டறையின் விரிவுரைகளைப் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறை தலைவர் கலாநிதி வ.மகேஸ்வரன், கிழக்குப் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ச.முகுந்தன், தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.இரகுபரன், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன், ஆன்மீக சொற்பொழிவாளர் கலாபூஷணம் திருமதி வசந்தா வைத்தியநாதன், கிழக்குப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் திருமதி சாந்தி கேசவன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

வவுனியாவில் நடைபெறவுள்ள இப் பயிற்சி பட்டறையில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு திணைக்களத்தால் பதிப்பு செய்யப்பட்ட உசாத்துணை நூல்கள், குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளது.

கலந்து கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் தமது பெயர் விபரங்களை 011 2552826, 011 2552641 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ள முடியும்.

தபால் மூலம் தொடர்பு கொள்ள விரும்புவர்கள் பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1 காலி வீதி, கொழும்பு-04 என்னும் முகவரிக்கு கடிதம் அனுப்புவதன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம். விண்ணப்பிக்கும் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் இந்துநாகரிகம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான பயிலரங்கு என குறிப்பிடுதல் வேண்டும் எனவும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-7)





இந்து, பௌத்த கலாசார பேரவையினால் முன்னெடுக்கப்படும் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்கும் மாணவர்களுடனான கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இந்து, பௌத்த கலாசார பேரவையின் இணைப்பாளர் என்.பி.எஸ்.ராமச்சந்திரன் உரையாற்றுவதையும் அருகில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உள்ளிட்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதனையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 70

இதே காலகட்டத்தில் தெற்கே வரோனிஷ் மற்றும் தென்மேற்கு சேனைகள் கடுமையான தற்காப்புச் சண்டைகளில் பல்தாவாவிலிருந்து ஹார்க்கவை நோக்கிய எதிரியின் பலத்த தாக்குதல்களை முறியடித்தன. மார்ச் 13 முதல் 28 வரை மத்திய சேனையின் துருப்புகள் நோவ்கரத்- சேவெர்ஸ்கிய் பிரதேசத்தில் எதிரியின் பலத்த பதிலடியை முறியடித்தன. சோவியத் துருப்புகள் சிறிதளவு நெருக்கப்பட்டன. எதிரியின் பதிலடிகளின் விளைவாய் கூர்ஸ்க் அரை வட்டம் தோன்றியது. போர் முனை ஸ்திரமடைந்தது.

**கூர்ஸ்க் சமர் (1943 ஜூலை 5 - ஆகஷ்ட் 23 )**

ஸ்டாலின்கிராட் அருகே பாசிச ஜேர்மனியத் துருப்புகள் முறியடிக்கப்பட்டதும் 1942-1943 பனிக்காலத்தில் செஞ்சேனையின் பரந்த அளவு தாக்குதலும் சோவியத் ஜேர்மனியப் போர்முனை முழுவதிலும் நிலவரத்தை அடியோடு மாற்றின. சோவியத்துருப்புகள் எதிரியை 600-700 கி.மீ. தூரம் மேற்கு நோக்கி பின் தள்ளின. 4 இலட்சத்து 90 ஆயிரம் சதுர கி.மீ.களுக்கும் கூடுதலான பரப்பை விடுவித்தன். 100க்கும் மேற்பட்ட எதிரி டிவிசன்களை முறியடித்தன. கிழக்குப் போர் முனையில் 1942 நவம்பர் முதல் 1943 மார்ச் வரை ஜேர்மனிய இராணுவம் 17 இலட்சம் பேர்களைப் பலிகொடுத்தது. 3500க்கும் அதிகமான டாங்கிகள், 4300 விமானங்கள், 24 ஆயிரம் பீரங்கிகளை இழந்தது.

ஜேர்மனிய இராணுவ இயந்திரத்திற்கு செஞ்சேனை தந்த அடிகள் "மூன்றாம் ரைஹின்" இராணுவ வல்லமையை சீர் குலைத்தன. ஹிட்லர் பேரரசின் செல்வாக்கு குறைவதைக்கண்டு கவலையுற்ற நாஜித் தலைமை போர்த்தந்திர முன் முயற்சியை மீண்டும் கைப்பற்றவும் கூட்டாளிகள் மற்றும் நடுநிலை நாடுகளின் முன், தன் கௌரவத்தை புனர் நாட்டவும் யுத்தத்தின் போக்கை தனக்கு ஆதாயமாகத் திருப்பவும் திட்டமிட்டது.

போர்க்கள பூமியில் சோவியத் சிறார்கள்



புதிய கோடை காலத்தாக்குதலுக்கு தயாரான பாசிச ஜேர்மனி, யுத்தக் கைதிகள் மற்றும் அயல் நாட்டு தொழிலாளர்களை ஈவிரக்கமின்றி சுரண்டியதன் விளைவாய் 1943 இல் ( 1942- ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில்) டாங்கிகள், சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள் உற்பத்தியை இரண்டு மடங்கிற்கும் அதிகமாகவும் போர் விமானங்கள் உற்பத்தியை 1.7 மடங்கும் பெருக்கியது. *டைகர்பாந்தர்* என்ற புதிய கனரக டாங்கிகளும் *பெர்டினாண்டு* என்ற திடீர்த்தாக்குதல் பீரங்கிகளும் *ஃபோக்கே-வுல்ப்-190* மற்றும் *ஹேன்ஷெல்-129* ரக விமானங்களும் ஜேர்மனிய இராணுவத்திற்கு கிடைத்தன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு தான் கோடைக்கால நடவடிக்கை திட்டமிடப்பட்டது. முற்று முழுமையாக அணிதிரட்டிய ஹிட்லர் படைத்தலைமை தனது இராணுவத்தின் எண்ணிக்கையை 103 இலட்சம் வரை உயர்த்தியது. இயங்கும் இராணுவத்தில் மட்டும் 66 இலட்சத்து 82 ஆயிரம் பேர்கள் இருந்தனர். இவர்களில் 48 இலட்சம் பேர்கள்-அதாவது 71சதவிகித்திற்கும் அதிகமானோர்- சோவியத்- ஜேர்மனியப் போர் முனியல் இருந்தனர்.

கூர்ஸ்க் முகப்பில் தமது துருப்புகளின் அனுகூலமான நிலையைக் கணக்கில் கொண்ட பாசிச ஜேர்மனியப் படைத்தலைமை கூர்ஸ்க் முகப்பின் அடித்தளத்தை நோக்கி வடக்கேயிருந்தும் தெற்கேயிருந்தும் ஒன்றிணையும் திசைகளில் தாக்குதல்களைத் தொடுப்பதன் மூலம் மத்திய மற்றும் வரோனிஷ் சேனைகளை சுற்றி வளைத்து அழிக்கவும் பின்னர் தென் மேற்கு சேனையின் பின்னணிமீது தாக்குதல் தொடுக்கவும் தீர்மானித்தது. இதன்பின் வடகிழக்குத்திசையில் தாக்குதலை வளர்க்கத் திட்டமிடப்பட்டது. லெனின்கிராட் மீது தாக்குதல் தொடுக்கும் எண்ணமும் இருந்தது.

"த்ஸித்தாதேல் என்ற அடையாளப் பெயரைபெற்ற இந்நடவடிக்கையின் நிறைவேற்றத்திற்காக 9 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆட்கள், 10 ஆயிரம் வரையிலான சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் கிட்டத்தட்ட 2700 டாங்கிகள், சுமார் 2050 விமானங்கள் அடங்கிய 50 டிவிசன்கள் (16 டாங்கி மற்றும் மோட்டார் டிவிசன்கள் உட்பட) ஒதுக்கப்பட்டன. மேற்கு ஜேர்மனிய வரலாற்றாசிரியர் லைட்லரின் கூற்றுப்படி ஜேர்மனிய தொழிற்துறையாலும் "அணிதிரட்டப்பட்ட ஐரோப்பாவாலும்" முடிந்தவையெல்லாம் கூர்ஸ்க் திசையில் கொண்டுவந்து குவிக்கப்பட்டிருந்தன.

சோவியத் இராணுவமும் உறுதியான தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் தயாரானது. பாசிச ஜேர்மனியின் நிலைக்கு மாறாக சோவியத் யூனியனின் இராணுவ-அரசியல் நிலை 1943 கோடையில் இன்னமும் வலுவடைந்தது. செஞ்சேனையின் வெற்றிகளால் ஊக்கமடைந்த சோவியத்மக்கள் உள்நாட்டில் வீரத்தோடு உழைத்தனர். பொருளாதாரத்துறையில் புதிய வெற்றிகள் அடையப்பட்டன.1942ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் மொத்தப் பொருளுற்பத்தி 17 சதவிகிதம் அதிகரித்தது. நாட்டின் கிழக்கிந்தியப் பிரதேசங்களில் உராலில், வோல்கா பிரதேசத்தில், சைபீரியாவில், மத்திய ஆசியாவில் பொருட்களின் உற்பத்தி கணிசமாக அதிகரித்தது. 1943 ஆம் ஆண்டு சோவியத் தொழிற்துறை மாதந்தோறும் சராசரியாக சுமார் 3000 விமானங்களையும் 2000 க்கும் கூடுதலான டாங்கிகளையும் தானியங்கி பீரங்கி அமைப்புகளையும் உற்பத்தி செய்தது என்று கூறுவதே போதுமானது. புதிய தானியங்கிப் பீரங்கி அமைப்புகளாகிய சு-76, சு-122, சு152, புதியவகை சுடும் ஆயுதங்களும் துருப்புகளுக்குக் கிடைத்தன. விமானத்தொழிற்துறை யாக்- 7, யாக்-9, லா-5 என்ற புதிய சண்டை விமானங்களை கணிசமான அளவு உற்பத்தி செய்தது. உயர்மட்ட பிரதானபடைத் தலைமையிடமிருந்த சேமப்படைகளின் பீரங்கிகள் முற்றிலுமாக இயந்திர இழு விசைக்கு மாற்றப்பட்டன. சோவியத் இராணுவத்திற்குத் தேவையான போர் வாகனங்கள், இராணுவத் தளவாடங்கள், ஆயுதங்கள் ஆகியன இடையறாது கிடைத்து வந்தன. ஆடையணிகளும் உணவுப் பொருட்களும் போதுமான அளவு சப்ளை செய்யப் பட்டன. சோவியத்படை வீரர்களின் தார்மீக அரசியல் மனப்பான்மை இன்னமும் அதிகமாக உயர்ந்தது, இவர்களது போர்த் திறமை அதிகரித்தது.





மக்களை போர்முனைக்கு அழைக்கும் சோவியத் சுவரொட்டி



ஜேர்மனியின் புதிய தயாரிப்புகளான டைகர் டாங்கி

# யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை



ஜேர்மனியின் புதிய தயாரிப்புகளான டைகர் டாங்கி

1943 கோடையில் செஞ்சேனை, சோவியத்-ஜேர்மனிய போர்முனையில் இயங்கிவந்த ஹிட்லர் துருப்புகளை டாங்கிகளில் 1.8 மடங்கும் பீரங்கிகளில் கிட்டத்தட்ட இரு மடங்கும் விமானங்களில் 2.8 மடங்கும் விஞ்சிநின்றது.

(தொடரும்)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கல்வயல்)

கல்வயல் சிறி சண்முகனாந்தா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு விநாயகமூர்த்தி விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் இ.ரவீந்திரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. சிறிஸ் கந்தமூர்த்தி, சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் சே. சிவஞானம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(அ-7-31)

## உத்தரவு பிறப்பிப்பது மட்டுமே நீதிமன்றம்; நடைமுறைப்படுத்துவது பொலிஸாரின் கடமை

(கொழும்பு)

நீதிமன்றத்தினால் உத்தரவுகளை பிறப்பிக்க மாத்திரமே முடியும் என்பதுடன் அதனை நடைமுறைப்படுத்துவது பொலிஸாரின் பொறுப்பாகும் என கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உட்பட நால்வர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த நாட்டின் சட்டவாதிக்கம் ஒருவரையே சார்ந்துள்ளதென பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் உறவினர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய அனைவரும் சட்டத்தின் முன் சமமாக கருதப்படும் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா இதுவரை கைது செய்யப்படாமை ஆச்சரியத்துக்குரிய விடயமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா நீதிமன்றத்திற்கும் மேலாக இருக்கின்ற ஒருவரா? என இதன்போது முறைப்பாட்டாளர் தரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்தில் வினவினார்.

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு விடுமுறை கோரி அண்மையில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பாராளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளதாக சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

எனினும் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உட்பட சிலர் கொலை செய்யப்பட்டு மூன்று மாதங்களுக்கும் அதிக காலம் கடந்துள்ள போதிலும் சம்பவத்தின் சந்தேக நபரான துமிந்த சில்வா கைது செய்யப்படவில்லை என முறைப்பாட்டாளர் தரப்பு சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

இதேவேளை துமிந்த சில்வாவை கைது செய்வது தொடர்பாக சட்டமா அதிபருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் சார்பாக ஆஜரான பொலிஸ் இன்ஸ்பெக்டர் மெரில் ரஞ்சித் நீதிமன்றத்தில் அறிவித்தார்.

இதன்பிரகாரம் விரைவில் அவரை கைது செய்வதற்கான சட்டமா அதிபர் ஆலோசனைகள் கிடைக்கும் என பொலிஸ் இன்ஸ்பெக்டர் கூறினார். இந்தக் கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் 18 பேரும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-7)

## வைத்தியசாலையில் மரணிப்போரின் மரண விசாரணைகளை துரிதப்படுத்துங்கள்

### நீதி அமைச்சர் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம்

(கொழும்பு)

வைத்தியசாலைகளில் மரணமடைவோரின் சடலங்களை குறித்த பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸ் நிலையத்தின் நெறிப்படுத்தலின் கீழ் மரண விசாரணை அதிகாரிகளால் விசாரணை நடத்தி உறவினர்களிடம் விரைவாக ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறுப்பிட்டுள்ளார். அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வைத்தியசாலைகளில் நோயினாலோ அல்லது விபத்தின் காரணமாகவோ மரணமடைவோரின் விசாரணைகளை குறித்த பிரதேச மரண விசாரணை அதிகாரி மேற்கொண்டு வருகின்றார்.

இந்த விசாரணையின் போது இறந்த நபர் வசித்த பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த அதிகாரிகளே சாட்சியங்களை நெறிப்படுத்துவதோடு உரிய தகவல்களையும் தெரிவிப்பது நடைமுறையில் உள்ளது.

அதனால் இறந்தவர்களின் உறவினர்களுக்கு அதிக் சிரமங்கள் மற்றும் துயரங்கள் ஏற்படுவதாகவும் என்னிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைப்பதில் அதிக கால தாமதம் ஏற்படுவது உண்டு. குறிப்பாக முஸ்லிம் இனத்தவரொருவர் இவ்வாறு மரணிக்கும் பொழுது அவரது ஜனாஸா 24 மணித்தியாலங்களுக்குள் நல்லடக்கம் செய்வது பல சந்தர்ப்பங்களில் இயலாத காரியமாக இருந்து வந்திருக்கின்றது. இதனால் ஜனாஸாக்கள் பழுதடைய கூடிய நிலைமைகளும் தோன்றியுள்ளதாக அறிய முடிகின்றது.

இத்தகைய சூழ்நிலைகள் ஏற்படாதவாறு மரணிப்பவரின் சடலங்களை இயன்ற வரை துரிதமாக உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-2)

## கூவைக்கட்டு நோயால் பாடசாலைகள் மூடப்பட்டன

கூவைக்கட்டு நோய் பரவியதன் காரணமாக களுத்துறை கல்வி வலயத்தின் இரண்டு பாடசாலைகள் இன்று முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

மாணவர்கள் மத்தியில் தொடர்ந்தும் நோய் பரவிச் செல்வதைத் தடுக்கும் வகையில் மேல் மாகாண கல்வி அமைச்சு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

களுத்துறை போம்புவல கனிஷ்ட வித்தியாலய மற்றும் போம்புவல மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே இந் நோய் பரவல் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (அ-2)

## மட்டு. தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க விசேட திட்டங்கள்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்த சூழலினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனமும் பல விசேட திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம், தேசிய கைத்தொழில் அதிகார சபை, ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் என்பவற்றின் அனுசரணையுடன் பாதிக்கப்பட்ட முயற்சியாளர்களுக்கு விசேட தெளிவூட்டல் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

(அ-2)

## நாட்டைக் காப்பாற்ற ஏகாதிபத்திய சக்திகளை ஒன்றிணைக்கத் தயார்

### ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)


நாட்டைக் காப்பாற்றுவதற்காக உண்மையான ஏகாதிபத்திய விரோத சக்திகளை ஒன்றிணைக்க ஜே.வி.பி. தயாராக இருப்பதாக அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அனைத்து நிறுவனங்களின் ஊழியர் சங்கத்தின் 13 ஆவது பிரதிநிதிகள் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தின் போது உழைக்கும் மக்கள் விவசாயிகள் மாணவர்கள், மீனவர்கள், கலைஞர்கள் மாத்திரமல்லாது ஊடகவியலாளர்களை ஒன்றிணைத்து போராட வேண்டும்.

இந்த அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து மிகப் பெரியதும் உண்மையானதுமான ஏகாதிபத்திய எதிர்ப்பு மையம் ஒன்றை ஏற்படுத்த ஜே.வி.பி. தயாராகவுள்ளது.

எவ்வாறாயினும் இலங்கையின் உள்நாட்டு பிரச்சினையில் வெளிநாடுகள் தலையிடுவதற்கான பாதை திறந்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுமே என ரில்வின் சில்வா குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)





கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் நிற்பதையும் மாணவர்களின் அணிநடை நிகழ்வினையும் ஓய்வுபெற்ற கிளி/கரைச்சி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அரியரத்தினம் வெற்றியீட்டிய மாணவனுக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- வட்டக்கச்சி செய்தியாளர்)



# சிறுவர் அரங்கம்


40

## அம்புலி மாமா கதைகள்

## நண்பனுக்கு உதவி

விஷ்ணுபுரத்தில் வசித்து வந்த செல்வரான சுந்தரம் தனக்கென்று சில கொள்கைகள் வைத்திருந்தார். அவற்றில் ஒன்று வெள்ளிக்கிழமைகளில் அவர் யாருக்கும் ஒரு பைசா கூட தானமாகவோ கடனாகவோ தரமாட்டார்.யாரிடமிருந்தும் அன்று தானமாகவோ, கடனாகவோ அல்லது காசோ வாங்க மாட்டார்.

அவருடைய நெடுநாளைய நண்பரான நடேசனுக்கு ஒரு முறை வியாபாரத்தில் பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிட்டது.தனது நண்பரான சுந்தரத்திடம் கூட கை நீட்டி பண உதவி பெறுவதைக் கேவலமாக நினைத்ததால் அவர் சுந்தரத்தை அணுகவே இல்லை. ஒரு நாள் அந்த கிராமத்திற்கு சுதர்சனம் என்ற யோகி வருகை தந்தார். தன்னுடைய தெய்வீக சக்தியால் பலருடைய வாழ்க்கைப் பிரச்சினைகளை சீர்செய்யும் பரிகாரங்களை கூறி வந்தார். கிராமத்து மக்கள் பலரும் அவரிடம் அணிஅணியாகச் சென்று தங்கள் குறைகளை கூறி அவற்றுக்குப் பரிகாரம் வேண்டினர். நடேசனும் அவரைக் காண தன் நண்பரான சுந்தரத்தையும் அழைத்துக் சென்றார்.




அவருடைய வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டத்தையும் மீண்டும் வியாபாரத்தை நிலைநிறுத்த தேவையான பரிகாரத்தை பற்றியும் நடேசன் யோகியிடம் கேட்டார்

அதற்கு யோகி உன்னுடைய கஷ்டங்கள் நீங்கி மீண்டும் உன் வியாபாரம் செழிக்க வேண்டுமானால் அதற்கு ஓர் எளிய பரிகாரம் உண்டு. நூறு பொற்காசுகள் செலவழித்து நீ உன் இஷ்ட தெய்வத்தின் வெண்கல சிலை ஒன்றை வெள்ளிக்கிழமை அன்று வாங்கி ஒருநாள் உன் பூஜை அறையில் அதை வைத்து பூஜை செய்ய வேண்டும். மறுநாள் அதை வேறு யாருக்காவது வாங்கின விலையை விட அதிக விலையில் விற்றுவிட வேண்டும். அப்படிச் செய்தால் எதிர்காலத்தில் உன் வியாபாரத்தில் வாங்கிய பொருட்களை அதிக விலைக்கு விற்று இலாபம் பெறுவாய் என்றார்!

அதற்கு சுந்தரம் சுவாமிகளே! நீங்கள் சொல்லும் பரிகாரம் நடைமுறைக்கு ஒத்துவராது. வெண்கலச்சிலையின் விலை இரண்டு பொற்காசுகள் மட்டுமே! அதை நூறு பொற்காசுகள் கொடுத்து வாங்க சொல்கிறீர்கள் அப்படியே என் நண்பர் மிக அதிக விலை கொடுத்து அதை வாங்கினாலும் அதையாரிடம் அவர் அதே லாபத்திற்கு விற்க முடியும்? என்றார்


ஏன் வாங்கமாட்டார்கள்? ஒரு வேளை நீங்கள் கூட அதை வாங்கலாம் என்றார் யோகி. அது என்னால் முடியாது வேண்டுமானால் அவருக்கு தானமாகவோ கடனாகவோ பணஉதவி செய்வேன் ஆனால் ஒரு வெண்கலச் சிலைக்கு என்னால் அத்தனை விலை தர முடியாது என்றார் சுந்தரம்.நண்பனின் பேச்சைக் கேட்டு நம்பிக்கையிழந்த நடேசன் அங்கிருந்து மௌனமாக சென்று விட்டார்.

ஒருநாள் சுந்தரமும் அவர் மனைவி சாருமதியும் நண்பகல்



வேளையில் தன் வீட்டில் ஒய்வெடுத்துக் கொண்டு இருந்தனர். அப்போது சுந்தரத்தைப் பார்க்க ஒருவன் வந்தான்.தன்னை ஒரு வியாபாரி என்று அறிமுகப்படுத்திக் கொண்ட பிறகு அவன் ஊர் ஊராகச் சென்று அற்புதமான கலைப்பொருட்களை வாங்கி விற்பனை செய்து வருகிறேன். இன்று தான் ஒரு வண்டி நிறைய பொருட்களை வாங்கி இந்தக் கிராமத்திற்கு வந்தேன்.பல பொருட்களை விற்றுவிட்டேன். விற்பனையில் மும்முரமாக இருந்ததால் இதுவரை ஒன்றும் சாப்பிடவில்லை இங்கு ஏதாவது சிற்றுண்டிச்சாலை உள்ளதா? என்றான்.

அதற்கு சுந்தரம் நீ வெளி ஊர்க்காரன்! இன்று எங்கள் கிராமத்திற்கு என் வீடு தேடி வந்திருக்கிறாய். உன்னை என் விருந்தாளியாக பாவித்து உனக்கு நானே உணவு அளிக்கிறேன் என்றார். சாருமதி அவனுக்கு உணவளித்தாள்.உணவு உண்ட பின் அவளுக்கு நன்றி கூறிய அந்த வியாபாரி தன் விற்பனைப் பொருட்களை அவளிடம் காட்டினான். அவற்றுள் புல்



லாங்குழல் இசைக்கும் கிருஷ்ணரின் வெண்கலச்சிலை அவளை மிகவும் கவர்ந்தது. ஆனால் அதன் விலை நூற்றுப்பத்து வராகன் என்றதும் அவள் திடுக்கிட்டாள்.

என்ன இந்த விலை சொல்கிறாய்?இதன் விலை இரண்டு வராகனுக்கு மேல் இருக்காதே! என்றாள்.அம்மா இது சாட்சாத் மீரா பூஜை செய்த கிருஷ்ணர் சிலை. இதை அவள் யாருக்கோ தானமாக கொடுத்துவிட்டாள். அன்று முதல் வாங்கியவர் குடும்பத்திலேயே இருந்து வந்தது. இதை அந்தக் குடும்பத்தினிடமிருந்து வாங்கி இருக்கிறேன். ராஜஸ்தானில் இருந்து இதைக் கொண்டு வந்து இருக்கிறேன். அதனால் தான் இதன் மதிப்பும் விலையும் அதிகம்! என்றான்.

இதனை விலை கொடுத்து வாங்க என் கணவர் சம்மதிக்க மாட்டார். தவிர இன்று வெள்ளிக்கிழமை! அவர் ஒரு பைசா கூட செலவழிக்க மாட்டார். யாரிடமிருந்து கை நீட்டி வாங்க மாட்டார். என்றாள் அதற்குள் சுந்தரம் பக்கத்து வீட்டில் இருந்து தன்னுடைய வீடு திரும்பினார். கிருஷ்ணருடைய வெண்கலச் சிலையை கண்டதும் அவர் முகம் பிரகாசமடைந்தது.

அட்டா! இன்று வெள்ளிக்கிழமை! அதனால் நான் பணம் கொடுத்து எதையும் வாங்க மாட்டேன் என்ற சுந்தரம் ஒரு கணம் யோசித்துவிட்டு பக்கத்து வீட்டு அருணாச்சலத்திடம் சென்று நூறு வராகன் கடன் வாங்கினார். திரும்பி வந்து அந்த விக்கிரத்தை விலைக்கு வாங்கி நடேசனிடம் கொடுத்து நீ இதை உன் பூஜை அறையில் இப்போதே வைத்து பூஜை செய்வாய்! நாளைக்கு இதை லாபத்திற்கு விற்று விடலாம்! என்றார்.

நாளைக்கு யார் வாங்குவார்கள்? என்று கேட்ட நடேசனை, நீ இப்போது இதை எடுத்து செல் நாளை பற்றி பிறகு பேசலாம்! என்று அனுப்பி வைத்தார்.

மறுநாள் சுந்தரம் தானே நடேசன் வீட்டிற்குச் சென்று நூற்றுப் பத்து வரகன் கொடுத்து கிருஷ்ணர் சிலையை விலைக்கு வாங்கி கொண்டார்.

அன்றிரவு சாருமதி தன் கணவரிடம் நீங்கள் உங்கள் கொள்கையில் மிக உறுதியானவர் என்று நினைத்தேன்.நண்பருக்காக உங்கள் கொள்கையை காற்றில் பறக்க விட்டீர்களே! வெள்ளிக்கிழமையன்று பக்கத்து வீட்டுக்காரிடம் கடன் வாங்கி விட்டீர்கள் என்றாள்.

இல்லை சாருமதி என் கொள்கையிலிருந்து நான் தவறவில்லை. எனக்காகத்தான் நான் பிறரிடம் வெள்ளிக்கிழமையன்று கடன் வாங்க கூடாதே தவிர, மற்றவர்ளுக்காக வாங்கியதில் தவறில்லை ஆகையால் நான் கொள்கையை விடவில்லை என்றே சொல்லலாம் என்றார்.

இதைக் கேட்ட சாருமதியும் ஆமாம், நீங்கள் கூறுவது சரிதான் உங்களைப் போன்ற நல்லவரிடம் இருந்து நடேசனுக்கு பணம் கிடைத்தால் கண்டிப்பாக அவனது செல்வம் பெருகும் அவரது நிலைமையிலும் மாற்றம் ஏற்படும் என்று கூறினாள். சாருமதி கூறிய படியே நடேசனின் நிலையில் மாற்றம் ஏற்பட்டது. வியாபாரம் மீண்டும் செழித்து ஏராளமான லாபம் சம்பாதித்தார்.

# இலங்கை தொடர்பான பிரச்சினை சர்வதேசத்தையும் இருகூறாக்கியதாம்

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்



(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை சர்வதேச சமூகத்தை சமவளவான இரண்டு கூறுகளாக பிரித்துள்ளன.**

**இது சர்வதேச சமூகத்தை துருவப்படுத்துகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் 47 நாடுகளும் சம அளவான இரு அணிகளாக பிளவுபட்டு போயுள்ளன. ஒருமித்த கருத்தும் இங்கு இல்லை என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.**

சர்வதேச உறவுகள் மற்றும் தந்திரோபாய கற்கைகளுக்கான லஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நல்லிணக்கத்தில் கல்வித்துறையின் பங்கு எனும் தலைப்பிலான தேசிய மாநாட்டின் மூன்றாவது தொடர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், தற்போது நாடுகள் அணிகளாக வாக்களிக்க வைக்கப்படுகின்றன.

மனித உரிமைகள் ஆணைக்குழு அரசியல் பார்வையாக கொண்டிருந்தமையால் மாற்றமாக நிறுவப்பட்ட மனித உரிமை பேரவையும் தோல்வி கண்டுவிட்டது.

இவ்வளவுக்கு துருவப்பட்டுள்ள மனித உரிமை பேரவை ஆணைக்குழுவை விட எவ்வகையிலும் சிறந்ததானது. இப்போது இது சர்வதேச சமூகத்தின் மதிப்புக்குரியதாக இல்லை. தற்போது நாடுகளினால் சுதந்திரமாக இயங்க முடிவதில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் ஆதிக்க குழுக்கள் உள்ளன. பலமான நாட்டின் சைகைகளுக்கு ஏற்ப ஏனைய நாடுகள் செயற்படுகின்றன.

நாம் ஏற்கனவே அமுல்படுத்த தீர்மானித்துள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என வெளிநாட்டு சக்திகள் கூறும் போது நாட்டு மக்கள் இந்த சிபாரிசுகளை ஏற்க மறுக்கலாம்.

இந்த அறிக்கையில் எமது கருத்துப்படியான பொறுப்புக்கூறல் உள்ளது. நாம் தண்டனை கொடுப்பதில் பிடிவாதமாக இல்லை. தொடர் நல்லிணக்க செயற்பாட்டில் சர்வதேச தலையீட்டை இலங்கை விரும்பவில்லை என்பது தவறாகும். சர்வதேச சமுதாயத்திற்கு இவ்விடயத்தில் முக்கியமான தவிர்க்க முடியாத பாத்திரம் உள்ளது என்பதே எமது நிலைப்பாடு என்றார். (அ-2)

## வெள்ளைவான் ஆபத்துக்களை அரசு புரிந்துகொள்ளவில்லை


### ஐ.தே.க. தெரிவிப்பு

வெள்ளைவான் சம்பவங்களினால் ஏற்படக்கூடிய பாதக நிலைமைகளை அரசாங்கம் இன்னமும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொலன்னாவ பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் சர்ச்சையை எற்படுத்தியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் வெள்ளைவான் கடத்தல் சம்பவங்கள் பாதக நிலைமையை ஏற்படுத்தும்.

மாற்றுக் கருத்துக்களை உடையவர்களை அடக்குவதற்கு அரசாங்கம் பயன்படுத்தும் வழிமுறைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. வெள்ளைவான் கலாசாரம் தொடர்வதனை இந்த உலகம் முழுவதற்கும் அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது.

வெள்ளை வான் கடத்தல் சம்பவங்களின் பொறுப்பை வேறு தரப்பினர் மீது சுமத்த முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)



இந்தியாவின் தென்பிராந்திய பிரதம கட்டளை அதிகாரி லெப்டினன் ஜெனரல் ஏ.கே.சிங், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியை ஆளுநர் பணிமனையில் சந்தித்த போது .... (படம்:- என்.குமார்)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

### நல்லதை நினைப்போம்; நன்மையைச் செய்வோம்



இன்றைய உலகம் நன்மையானதையும் நல்லது செய்வோரையும் நலமான வாழ்வையும் உயர்வுதரும் சிறந்த விழுமியங்களையும் ஏற்க மறுக்கின்றது. சுயநலத்தால் பணம், பதவி, மதிப்பு, சுகபோகம் போன்றவற்றின் மீது வெறிகொண்டு நீதியானதையும் நேர்மையானதையும் பாதாளத்தில் புதைத்துவிட்டு சாக்கடையின் நாற்றத்தை சந்தணத்தின் நறுமணமாக எண்ணி வாழ்வுச் சக்கரத்தை அழிவு நோக்கி விரைபுபடுத்துகின்றது.

உலக வரலாற்றின் பக்கங்களை பகுத்தாய்ந்தால் சமூக நலனை முன்னெடுக்கும் நல்ல உள்ளங்கள் தொடர்ந்து தாக்குதல்களுக்கும் படுகொலைகளுக்கும் உள்ளாகி வருவது கண்கூடு. அதற்காக மனிதர்கள் அனைவரும் தீயவர்கள் என்று சொல்வதற்கில்லை. நல்லவர்களை வாழ்த்திப்பாராட்டும் அருள் நிறை உள்ளம் கொண்ட மாந்தர் சிலர் இருப்பதால் தான் சமூக நலனை முன்னெடுக்கும் மகான்கள் உலகில் தொடர்ந்து தோன்ற முடிகிறது. மகான்களின் பெயர்களை இழிவுபடுத்தி, உண்மைக்கு மாறான செயல்களையே உண்மையாக்கி, சமூக நலனுக்கே ஊறுவிளைவிக்கும் உள்ளுணர்வற்ற மனிதர்கள் தங்களின் செயல்களாலேயே அழிவார்கள். ஏனெனில் நல்லாரை அழிக்க நினைப்பவன் அழிவான்.

**அருட் சகோதரர் றமேஸ் அ.ம.தி**

இதைத்தான் திருவிவிலியமும் நற்பாடமாக எமக்குத் தருகின்றது. நாம் வாழ்வைப் பெற வேண்டுமென்றால் அழிவுதரும் எண்ணங்களிலிருந்து மீண்டு வரவேண்டும். ஒளி நிறைந்த நிலைபெற இருளிலிருந்தும் அதன் பயங்கர ஆட்சியிலிருந்தும் வெளிவரவேண்டும்.

இன்று எமது சிந்தனைகள், எண்ணங்கள், பேச்சுக்கள், செயற்பாடுகள் அனைத்தும் எதை நோக்கியதாக இருக்கின்றன. வாழ்வில் தெளிவில்லாத தன்மையும் குறிக்கோளற்ற நிலையும் எம்மை குட்டிச்சுவராக்கி எம்மில் தீமைகளையும் தீமையுணர்வுகளையுமே வளர்த்துவிடுகின்றன.

இந்த நிலையில் நன்மையையும் உண்மையையும் நாம் தேட வேண்டுமென்றால் தீமையையும் பொய்மையையும் விட்டுவிட வேண்டும். நல்லதை நினைத்து நன்மை செய்ய வேண்டும்.

## வடக்கு, கிழக்கு வாழ்மக்கள் அதிகாரத்தை கோரவில்லை

### பிரதியமைச்சர் முஸ்தபா கூறுகிறார்

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் அதிகாரத்தைப் பகிர வேண்டுமென கோரவில்லை என்றும் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றே விரும்புகின்றனர் எனவும் பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

நல்ல பாடசாலைகள், சுகாதார வசதிகள், உட்கட்டுமான வசதிகள், வாழ்வதற்கான சிறந்த சூழல் போன்றவற்றையே மக்கள் கோருகின்றனர். அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொண்டதன் பின்னர் அதிகாரப் பகிர்வு தொடர்பில் மக்கள் கோரக்கூடும்.

இடம்பெயர் மக்கள் பற்றி பேசப்படுகின்ற போதிலும் புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட மக்கள் பற்றி எவரும் பேசுவதில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து நாட்டை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரிய முறையில் அமுல்படுத்துவதன் மூலம் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார். (அ-2)

## இளைஞர் கொலை

பாசறை பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். பாசறை பிரதேசசபைக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு 9.55 மணியளவில் 20 வயதுடைய குறித்த இளைஞன் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பாசறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (அ)

# இந்தியாவின் தென்பிராந்திய இராணுவத் தளபதி வடக்கு விஜயம்

(கொழும்பு)

இந்திய இராணுவத்தின் தென் பிராந்திய கட்டளைத் தளபதி லெப் ஜெனரல் ஏ.கே. சிங் நேற்று முன்தினம் வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்திற்கு விஜயம் மேற்கொண்ட அவர் புனர்வாழ்வு பெறும் முன்னாள் போராளிகளையும் சந்தித்தார்.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான இராணுவ ஒத்துழைப்புக்களை வலுப்படுத்தும் நோக்கில் நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அவர் முன்னாள் போராளிகளின் தொழில் பயிற்சி கூடத்தில் அவர்களின் செயற்பாடுகளை பார்வையிட்டதுடன் முன்னாள் போராளிகளுடன் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்ட போதிலும் புகைப்படங்கள் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அத்துடன் லெப் ஜெனரல் ஏ.கே.சிங்கிடம் ஊடகவியலாளர்கள் கேள்விகளை கேட்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணத்திற்கான விஜயம் மேற்கொண்ட இந்திய இராணுவத்தின் தென் பிராந்திய கட்டளைத் தளபதி வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இதன் பின்னர் யாழ். நல்லூர் கந்தசுவாமி கோயிலிற்கும் லெப் ஜெனரல் ஏ.கே. சிங் விஜயம் மேற்கொண்டார். (ந-8-11)

# சரத் பொன்சேகா ஓய்வுபெற்ற பின் வாகனங்களை ஒப்படைக்கவில்லை

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தமை மற்றும் அரசாங்கத்திற்கு கீழ்படியாதிருக்கச் செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் தாம் நிரபராதிகள் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் அவரின் பிரத்தியேக உதவியாளரான சேனக ஹரிப்பிரிய டி சில்வா ஆகியோர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

அதையடுத்து அன்றைய தினம் வழக்கு விசாரணை ஆரம்பமாகியது. பிரிகேடியர் அஷோக் வீரசிங்கவின் சாட்சியத்தை அரச வழக்குரைஞர் தமித் தொட்டவத்த நெறிப்படுத்தினார்.

இராணுவ அதிகாரியொருவர் எந்த தரத்திலிருந்தாலும் அவருக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் மெய்ப்பாதுகாவலர்களை ஓய்வுபெற்ற பின்னர் மீள ஒப்படைக்க வேண்டும் என பிரிகேடியர் வீரசிங்க கூறினார்.

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக பதவி வகித்த போது 28 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததாகவும் ஓய்வுபெற்ற பின்னர் அவற்றை ஒப்படைக்கத் தவறிய அவர் அவ்வாகனங்களை அவரின் கட்டுப்பாட்டிலிருந்து எடுத்தால் தன்னை சுடுவதாக எச்சரித்ததாகவும் பிரிகேடியர் வீரசிங்க கூறினார்.

பொன்சேகாவின் மெய்ப்பாதுகாவலர்களாக நியமிக்கப்பட்டிருந்த இராணுவ உத்தியோகத்தர்கள் பொன்சேகாவின் ஓய்வின் பின்னர் இராணுவ சேவைக்கு சமுகமளிக்கவில்லை எனவும் அதனால் அவர்கள் தப்பிச் சென்றவர்களாக கருதப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

இவ்வழக்கின் அடுத்த விசாரணை இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. (அ-2)

# வெள்ளை வான்களில் நபர்களை கடத்தி குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுபட முடியுமா?

## அர்ஜுன ரணதுங்க எம்.பி.கேள்வி

(கொழும்பு)

நாள்தோறும் வெள்ளை வான்களில் நபர்களைக் கடத்தி மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுபட முடியுமா என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

சரத் பொன்சேகாவின் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அர்ஜுன ரணதுங்க இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

போரை வழிநடத்திய தைரியமிக்க படைவீரர்களை கைது செய்து தடுத்து வைத்து வெள்ளை வான்களில் நபர்களைக் கடத்தி மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை முறியடிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவிற்கு எதிராக கூக்குரல் இட்டு போராட்டங்களை நடத்துவதன் மூலம் மனித உரிமை குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுபட முடியாது. உண்மையாகவே மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் மனித உரிமைகளை பாதுகாக்கின்றது என்றால் அரசியல் கைதியான சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.03 15

★கி.மு 44- ரோமன் குடியரசின் மன்னன் யூலியஸ் சீசர் மார்க்கஸ் புரூட்டாஸ் மற்றும் பல ரோமன் செனட்டர்களால் குத்திக் கொல்லப்பட்டான்.

★933-பத்தாண்டுகள் அமைதிக்குப் பின்னர் ஜேர்மனிய மன்னன் முதலாம் ஹென்றி ஹங்கேரிய இராணுவத்தை ரியாட் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தான்.

★1493-கொலம்பஸ் அமெரிக்காவுக்கான தனது முதலாவது பயணத்தை முடித்துக் கொண்டு ஸ்பெயின் திரும்பினார்.

★1776-தெற்கு கரோலினா பிரித்தானியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது. பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்ற முதலாவது அமெரிக்கக் குடியேற்ற நாடு இதுவாகும்.

★1802-இலங்கையின் முதலாவது அரச வர்த்தமானி வெளியிடப்பட்டது.

★1815-நேப்பில்ஸ் மன்னன் ஜோக்கிம் முராட் ஆஸ்திரியா மீது போர் தொடுத்தான்.

★1848-ஹங்கேரியில் புரட்சி வெடித்தது. ஹாப்ஸ்பேர்க் ஆட்சியாளர்கள் சீர்திருத்தக் கட்சியின் முக்கிய நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று.

★1877- முதலாவது தேர்வுத் துடுப்பாட்டம் இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் மெல்பேர்னில் ஆரம்பமானது.

★1917-ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ் த்சார் மன்னன் முடிதுறந்தான்.

★1922-எகிப்து ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து முறையாக விடுதலை அடைந்த பின்னர் முதலாம் ஃபுவாட் எகிப்தின் மன்னனானான்.

★1943-இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனிய படைகள் உக்ரேய்னின் ஹார்க்கொவ் நகரை சோவியத் இராணுவத்திடம் இருந்து கைப்பற்றின.

★1961-தென்னாபிரிக்காவின் பொதுநலவாய நாடுகளில் இருந்து வெளியேறியது.

★1970-எக்ஸ்போ 70 உலகக் கண்காட்சி ஜப்பானின் ஒசாக்கா நகரில் ஆரம்பமானது.

★1985-முதலாவது இணைய டொமைன் பெயர் (symbolics.com) பதியப்பட்டது.

★1988-ஈராக்கியப் படைகள் குருதிய நகரான ஹலப்ஜா மீது இரசாயன நச்சு குண்டுகளை வீச ஆரம்பித்தது. 5 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★1990-பிரித்தானிய ஊடகவியலாளர் பர்சாட் பாசொஃப்ட் ஈராக்கில் தூக்கிலிடப்பட்டார்.

★1990-மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் ஒன்றியத்தின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக தெரிவானார்.

★1991-இரண்டாம் உலகப்போரின் பின்னர் ஜேர்மனியின் ஆதிக்க நாடுகளான ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் ஆகியவற்றிடம் இருந்து ஜேர்மனி முழுமையான விடுதலையைப் பெற்றது.

★2004-சூரியக் குடும்பத்தில் அதிவேகமான பொருள் 90377 செட்னா கண்டுபிடிக்கப்பட்டது.

★2007-இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் தண்டவத்தா பகுதி பொலிஸ் நிலையம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 55 பொலிஸார் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★1830-பவுல் ஹெய்ஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1914)

★1854-எமில் பேஹ்ரிங், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1917)

★1915-அழகு சுப்பிரமணியம், ஆங்கில இலக்கியத்துறையில் புகழ் பெற்ற இலங்கையர் (இ.1973)

★1920-டென்னஸ் தோமஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★1930-அல்ஃவியோரவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய இயற்பியலாளர்

### இறப்புக்கள்

★கி.மு44-யூலியஸ் சீசர், ரோமன் குடியரசின் மன்னன் (பி.கி.மு 100)

★1897-ஜேம்ஸ் சில்வெஸ்டர், கணிதவியலாளர் (பி.1814)


★1962-ஆர்தர் கொம்ப்டன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1892)

★2004-ஜோன் போப்பில், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (பி.1925)

### சிறப்பு நாட்கள்

★ ஜப்பான்- ஒவுனென் மட்சுறி புத்தியிர்ப்பு இயற்கைசார் விழா


★ உலக நுகர்வோர் தினம்



★1767-அமெரிக்காவின் 7 ஆவது குடியரசுத் தலைவர் அன்ட்ரு ஜாக்சன் பிறந்த தினம் (இ.1845)

# அதிசய உலகம்...

## கம்பி வலைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட உருவங்கள்



வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பதுபோல் சிறந்த கற்பனைத்திறன் படைத்தவர்கள் தமக்கு கிடைக்கும் பயனற்ற பொருட்களையும் பயனுள்ளதாக மாற்றிவிடுவார்கள்.

அதன்படி டெரெக் கின்செட் என்ற 45 வயதான நபர் ஒருவர் 100 மணித்தியாலங்களை செலவு செய்து கம்பி வலைகளில் அழகிய உருவங்களை வடிவமைத்துள்ளார்.

சுமார் 6ஆயிரம் யூரோக்கள் பெறுமதியான இந்த உருவங்கள் இயற்கையோடு ஒன்றிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளதால் உயிரூட்டமாக காணப்படுவதுடன் காண்போரை கொள்ளையிடும் அளவிற்கு கலைநயம் மிகுந்ததாகவும் இருக்கின்றது.

## பாம்பு வடிவில் பிறந்த குழந்தை



இயற்கையின் மாற்றத்தில் பல்வேறு அதிசயங்கள் நடப்பது இயல்பு. அந்த வகையில் பிறந்த குழந்தை ஒன்று எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. சாதாரணமாக பிறக்கும் குழந்தையல்ல மல் பாம்பு உடலமைப்பில் பிறந்துள்ளது. இக்குழந்தை சவுதிஅரேபியாவில் ஒரு குடும்பத்தில் பிறந்த குழந்தையே இவ்வாறு பாம்பின் வடிவில் பிறந்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது ஒரு தோல் வியாதியாக இருக்கக் கூடும் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். பாம்புக்குழந்தையினை நீங்களும் பாருங்கள்.

## சைக்கிளில் 30,000கி.மீ பயணித்து அசத்திய மனிதர்

உலக சாதனைக்காக 95 நாட்களில் 30 ஆயிரம் கி.மீ தூரத்தை சைக்கிளில் சுற்றும் இங்கிலாந்து வாலிபர் இந்தியாவில் தர்மபுரி மாவட்டத்திற்கு வந்துள்ளார்.

உலக அளவில் 105 நாடுகளில் துவிச்சரக வாகனத்தில் பயணம் மேற்கொண்டு 29 ஆயிரம் கி.மீ தூரம் பயணம் செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இந்த சாதனையை முடியடிக்க இங்கிலாந்தைச் சேர்ந்த மைக்கால்(வயது30) என்ற வாலிபர் 95 நாட்களில் 30ஆயிரம் கி.மீ தூரத்தை கடந்து சாதனை படைக்க துவிச்சக்கர வாகனத்தில் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இவரைப்போல் ஒன்பது பேர் இந்த போட்டியில் பங்கேற்றுள்ளனர். கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி லண்டனில் இருந்து அவரது சைக்கிள் பயணம் தொடங்கியது. மேலும் இவரது துவிச்சக்கர வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள மொனிடர் மூலம் மைக்கால் எந்த நாட்டில் எந்த இடத்தில் இருக்கிறார். அவர் கடந்த சென்ற தூரம் எவ்வளவு உள்ளிட்ட அனைத்து விபரங்களும் துல்லியமாக லண்டனில் போட்டி நடத்தும் நிறுவன கணனியில் பதிவு செய்யும் நவீன வசதிகள் இவ்வாகனத்தில் பொருத்தப் பட்டுள்ளது.


அதேபோன்று அவர் கடக்கும் தூரத்தைக் கண்டறிய வசதியாக ஸ்பீடா மீற்றர் இவ்வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ளது. பல்வேறு நவீன வசதிகள் கொண்ட இந்த வாகனத்தில் பயணம் செய்யும் மைக்கால் சாதாரணமாக ஒரு மணி நேரத்தில் 30கி.மீ தூரத்தை கடந்து செல்லும்



வகையில் பயணம் செய்கிறார்.

துவிச்சக்கர வாகன பயணம் குறித்து அவர் கூறியதாவது, உலக சாதனைக்காக இப்பயணத்தை தொடங்கியுள்ளேன். 20 நாடுகளில் 95 நாட்களில் 30 ஆயிரம் கி.மீ. கடக்க வேண்டும் என்ற இலட்சியத்தில் என் பயணம் தொடர்ந்து வருகிறது. இதுவரையில் 10 நாட்களை கடந்து இந்தியா வந்துள்ளேன். தமிழகத்தில் இது வரையில் 450 கி.மீ. பயணம் செய்துள்ளேன் என்று மைக்கால் கூறுகிறார்.

## இரண்டு முகத்துடன் அதிசய குழந்தை



## பின்னந் தலையில் மினி கமரா



நமக்குப் பின் என்ன பேசுவார்களோ? என்ற நினைப்பு எல்லோருக்கும் உண்டு. இனி இதை நினைத்து கவலைப் பட தேவையில்லை.

பின்னால் நடப்பதையும் காட்டும் கமரா விரைவில் ஈராக்கை சேர்ந்த போட்டோ கிராபி மற்றும் இமேஜ் துறை துணை பேராசிரியர் வபா பிலால் தலைமையில் நியூயோர்க் பல்கலைக் கழகத்தில் சமீபத்தில் ஒரு ஆய்வு நடந்தது.

ஆராய்ச்சி பற்றி பிலால் கூறியதாவது,

ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கருவிக்கு தேர்ட்ஐ (மூன்றாவது கண்) என்று பெயரிட்டுள்ளோம். கட்டை விரல் நகம் அளவில் உள்ள மைக்ரோ கமராவை தலையின் பின்பக்கம் லேசாக துணையிட்டு பொருத்த வேண்டும். இது நம் பின்னால் நடக்கும் அனைத்து செய்கைகளையும் படம் பிடிக்கும். ஒரு நிமிடத்துக்கு ஒருமுறை நிகழ்வுகளை இது பதிவு செய்து கொள்ளும்.

அனைத்து காட்சிகளும் தொடர்ந்து பதிவு செய்யப்படும். தேவைப்படும் நேரத்தில் இக்காட்சிகளை பார்க்க முடியும். முடி பகுதியில் கமரா பொருத்தியிருப்பது தெரியாமல் இருக்க கறுப்பு நிறத்தில் லென்ஸ் மூடி பொருத்தப்படும். இவ்வாறு பேராசிரியர் பிலால் கூறினார்.

## பெற்றோலுக்கு அடிமையான பெண்




இந்தச் செய்தியைக் கேட்பவர்களுக்கும் நிச்சயம் ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஆம் போதைக்கு அடிமையானவர்கள், மதுவுக்கும் அடிமையானவர்கள் பற்றி எல்லாம் நாங்கள் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், பெற்றோலுக்கு அடிமையாதல் என்பது ஒரு புதிய விடயமாகவே இன்றும் நோக்கப்படுகின்றது. அழகானடீனேஜ் இளம் பெண் ஒருவர் பெற்றோலுக்கு அடிமையாகியுள்ளார். குப்பியில்உள்ளபெற்றோலை ஆர்வமாக எடுத்துக் குடிக்கும் காட்சியைத் தான் நீங்கள் பார்க்கின்றீர்கள். Shannon என்ற இந்தப் பெண் ஒவ்வொருநாளும் 12தேக்கரண்டி அளவிலான பெற்றோலை அருந்துகிறார். அதைக் குடிக்கும் போது தொண்டையை எரித்தாலும் நல்லதொரு சந்தோசமான நிலையை தான் அனுபவிப்பதாக கூறுகிறார் இந்த பெண்.

இவர் கடந்த வருடம் மட்டும் ஐந்து கலனுக்கு மேற்பட்ட பெற்றோலை குடித்து விட்டதாக தெரிய வந்துள்ளது. பெற்றோலைக் குடிப்பதால் நரம்பு மண்டலம்,கிட்னி.இதயம்,ஈரல், நாளங்கள் போன்றவை கடுமையாகப் பாதிக்கப்படும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# கருத்து வெளியிடும் சுதந்திரத்தை அரசாங்கம் பறிக்க முடியாது

## கரு தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் சட்டம் மற்றும் அமைதி என்பன சீர்குலைந்துள்ளமை உள்ளிட்ட பல விடயங்களை அடிப்படையாக வைத்து ஐக்கிய தேசிக்கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

சட்டம் மற்றும் அமைதி தொடர்பில் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என அவர் அதில் தெரிவித்துள்ளார்.

இந்த சந்தர்ப்பங்களில் வாய் மூடி மௌனமாக இருப்பதனால் மக்கள் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை அற்றுப் போகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றங்கள் தொடர்பில் பொலிஸார் செயற்படும் செயற்றிறனற்ற நடவடிக்கைகள் காரணமாக நீதியை எதிர்பார்த்து மக்கள் வன்முறையை கடைபிடிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் அமைதியற்ற முறையில் நடந்து கொள்வதற்கு சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்தாமையே காரணம் எனவும் அண்மையில் கஹவத்தையில் ஆளும் கட்சியின் உதவியாளர் ஒருவரின் வீட்டிற்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் அதன்மூலம் புலனாகுவதாகவும் கரு ஜயசூரிய விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொலன்னாவ நகரசபையின் தலைவரை கடத்த முற்பட்ட சம்பவம் குறித்தும் அதனுடன் தொடர்புபட்ட பல விடயங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களின் உண்மைத்தன்மையை நீதியானதும் நியாயமானதுமான விசாரணை ஒன்றின் பின்னரே வெளியிட வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் உதவியாளர்களுடன் தொடர்புபட்ட விடயங்களில் உரிய முறையில் விசாரணைகளை மேற்கொள்ளும் விடயத்திலும் பாதுகாப்பு வழங்கும் விடயத்திலும் பொலிஸார் தோல்வியடைந்துள்ளதாக தெரிவித்தார்.

நாட்டில் சிறு அளவிலோ அல்லது பாரிய அளவிலோ சட்டங்கள் மீறப்படுகின்றமை தொடர்பில் கருத்து தெரிவிப்பதற்கு அனைத்து பிரஜைகளுக்கும் உரிமை இருப்பதாகவும் அதற்கான காலம் தற்போது மலர்ந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை விரைவில் வெளியிட வேண்டும்.

ஆணைக்குழுவின் சிபாரிசுகள் தொடர்பில் ஆராய வேண்டும் எனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கருஜயசூரிய மேலும் கூறினார். (அ-7)

# பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தென்மராட்சி பிரதேச சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சங்கத் தலைவர் சி. சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய யாழ். மாவட்ட தலைவர் வி. சிறிசக்திவேல், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக கணக்காளர் அ. மோகனராஜ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7-29)

# ஆசிரிய மாணவர்களை உள்ளீர்ப்பு செய்வதற்கான நேர்முகத்தேர்வு

ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி நெறிக்காக ஆசிரிய மாணவர்களை உள்ளீர்ப்பு செய்வதற்காக இடம்பெறும் நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது என கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் கே.கா.கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பக் கல்வி பாடநெறிக்கும் 23 ஆம் திகதி வர்த்தகம், சித்திரம், இந்து சமயம், கிறிஸ்தவம், றோமன் கத்தோலிக்கம் ஆகிய பாடநெறிகளுக்கும் 24 ஆம் திகதி தமிழ், மனைப்பொருளியல், நடனம், சங்கீதம், கடல்வள தொழில்நுட்பம், விஞ்ஞானம், கணிதம், கைவினைத் தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளுக்கும் 25 ஆம் திகதி ஆங்கிலப் பாடநெறிக்கும் தேர்வுகள் இடம்பெறவுள்ளன.

வன்னியில் போர்ச்சூழல் காரணமாகப் பாதிக்கப்பட்டு பயிற்சி பெறாத ஆசிரியர்கள் மற்றும் தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கான அனைத்து பாடங்களுக்குமான நேர்முகத்தேர்வுகள் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நேர்முகத்தேர்வின் போது பிரகடனப் படிவம், பிறப்புச் சான்றிதழ், முதல் நியமனக் கடிதம், தேசிய அடையாள அட்டை, கடமையேற்றமையை உறுதிப்படுத்தும் சம்பவத்திரட்டுப் புத்தகப்பிரதி, கல்வி மற்றும் தொழிற்றகைமைச் சான்றிதழ்கள், பதிவின் மூலம் இலங்கைப் பிரஜையாயின் அதனை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் என்பவற்றின் மூலப்பிரதிகளையும் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதிகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

இதன்போது பட்டதாரிகளாகவுள்ள ஆசிரிய உதவியாளர்கள் கலாசாலைப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளவது அவசியமற்றது. எனினும் இப்பயிற்சி தமக்கு தேவை எனக் கருதுபவர்கள் தொடர்பில் பொருத்தமான முடிவுகளை மாகாணக் கல்விச் செயலாளர்கள் மேற்கொள்வது பொருத்தமானது.

எனவே, தத்தம் மாகாணக் கல்விச் செயலாளர்களின் விதந்துரையின் அடிப்படையில் நேர்முகத்தேர்வுக்குத் தோற்றுவதை அவர்கள் முடிவு செய்யலாம் எனக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (அ-7)

# தேர்தல் காலத்தில் மட்டும் மக்களுக்கு உதவக்கூடாது

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



முல்லைத்தீவு மாவட்ட ஆலயங்களுக்கு நிதி உதவி வழங்க வேண்டாம் என ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாசவிடம் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கோரியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் உதவிகளை வழங்குவது பொருத்தமாகாது. இது தேர்தல் சட்டங்களுக்கு முரணானது என அவர் தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் முல்லைத்தீவு மக்களை சந்தித்து பிரதேச இந்து ஆலயங்களுக்கு நிதி உதவிகளை வழங்க சஜித் பிரேமதாச திட்டமிட்டுள்ளார். இந்த நிலையில் இவ்வாறு உதவிகளை வழங்குவது கட்சியின் நன்மதிப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# ஜெனீவாவில் இலங்கைக்கெதிராக கொண்டுவரும் பிரேரணையை இந்துமத குருமார்கள் ஆதரிக்க வேண்டும்

## யோகேஸ்வரன் எம்.பி. வேண்டுகோள்

(கொழும்பு)

ஜெனீவாவில் அரசுக்கு எதிராக கொண்டு வரும் குற்றச்சாட்டை ஆதரித்து இந்துக்குருமார் செயற்பட வேண்டும். மேலும் மதவிவகார அமைச்சின் அழைப்பை நிராகரித்து இந்நிகழ்வில் கலந்து கொள்வதை தவிர்க்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த யுத்த சூழலில் எமது இனத்தை திட்டமிட்டு அழித்த அரசாங்கத்தின் செயற்பாட்டினை மனித உரிமை மீறல்களை ஐ.நா. மனித உரிமை பேரவையில் ஆராயப்படவிருக்கின்றது.

இந்நிலையில் அரசுக்கு எதிராக கொண்டுவரப்படும் குற்றச்சாட்டை மறைப்பதற்காக மதவிவகார அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பு விகாரமா பூங்காவில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு இந்து குருமார்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவ் அழைப்பை ஏற்று இந்து குருமார் சென்றால் இது எமது நாட்டில் எம்மக்கள் அரசால் திட்டமிட்டு கொல்லப்பட்டதற்கும் கடத்தப்பட்டதற்கும் சீரழிக்கப்பட்டதற்கும் நீங்கள் துணை போனவர்களாக அமைவீர்கள் என்பதை உணர வேண்டும். எனவே, சகல இந்து குருமார்களும் இவ்வழைப்பை நிராகரித்து ஜெனீவாவில் அரசுக்கெதிராக கொண்டு வரும் தீர்மானத்தை வெற்றியடைய செய்யும் முகமாக இறைவழிபாடுகள், பூசைகள் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# முஸ்லிம் நாடுகளில் நுழைந்த அமெரிக்கா இலங்கையிலும் நுழைய முற்படுகிறது

## றிசாத் பதியுதீன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கெதிரான அமெரிக்காவின் பிரேரணையானது தமிழர்களுக்கு தனி நாட்டை கொடுப்பதை போன்றும் சிங்களவர்களை பழிவாங்குவதை போன்றதென்றும் மாயையொன்று தோற்றுவிக்கப்பட்டிருந்ததாக அமைச்சர் றிசாத் பதியூதீன் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்திருக்கும் பிரேரணை தொடர்பில் இலங்கையில் பாரிய மாயையொன்று தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த பல ...ங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கும் நிலையில் இவ்வாறான மாயைகள் மூலம் இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது. இந்த நிலையில் நாம் அனைவரும் இனவேறுபாடுகளை மறந்து இலங்கையர்கள் என்ற நிலையில் ஒன்றுபட வேண்டும்.

வெளிநாடொன்று இலங்கையின் உள் விவகாரத்தில் உள்நுழைய இடமளிக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் அனைத்து இனங்களும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். இதன்மூலம் இவ்வாறான நடவடிக்கைகளை முறியடிக்க முடியும் எனவும் அர் குறிப்பிட்டார்.

ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா, எகிப்து உள்ளிட்ட பல முஸ்லிம் நாடுகளில் பலவந்தமாக உள்நுழைந்த அமெரிக்கா ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை கொன்றுள்ளது. தற்பொழுது இலங்கையிலும் கைவைப்பதற்கு முயற்சிக்கிறது இதற்கு நாம் ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திருமுறை மன்றத்தினால் பன்னிரண்டாந்திருமுறை பெரியபுராணம் முற்றோதல் நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் ஏப்ரல்மாதம் 12 ஆம் திகதி வரை தினமும் 4 மணிக்கு நல்லையம்பதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இத் திருவாசக முற்றோதல் நிகழ்வு மணிமண்டப உத்தியோகத்தர்களின் அனுசரணையுடன் இடம்பெறும் என மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (அ-7)

# கூடங்குளம் அணுமின் நிலையம்.. முடக்கத்திலிருந்து மீட்பாரா ஜெயா?



"கூடங்குளம் அணுமின் நிலையத்தை உடனே திறக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்துள்ளார். "கூடங்குளம் அணுமின்நிலைய எதிர்ப்பாளர்களை கட்டுப்படுத்தி வையுங்கள்" என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே.வாசன் கோரிக்கை விடுத்துள்ளார். முக்கிய கட்சிகள் மட்டுமின்றி, முக்கிய தொழிலாளர் அமைப்புகள், பொதுநல அமைப்புகள் எல்லாமே கூடங்குளம் அணுமின் நிலையத்தை உடனடியாக திறக்கவேண்டும் என்றநிலைப்பாட்டிற்கே வந்திருக்கிறார்கள். குறிப்பாக ப்ளஸ் டூ மாணவர்கள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில் மாணவர்கள் மின்வெட்டால், அவஸ்தைப் படுவதால், பொதுமக்கள் மத்தியில் அணுமின்நிலைய எதிர்ப்பாளர்களுக்கு பெரும் எதிர்ப்பு கிளம்பி வருகிறது.

சங்கரன் கோவில் இடைத் தேர்தலில்கூட மின்வெட்டு பிரச்சினையை பிரதானமாக வைத்தே பிரச்சாரம் செய்கிறார்கள். தி.மு.க. வினர்கூட, "பத்துமாதமாக கரன்ட் இல்லாமல் ஆட்சி செய்யும் அ.தி.மு.க. விற்கு இந்த தேர்தலில் கரன்ட் ஷாக் கொடுங்கள்" என்று வாக்காளர்கள் மத்தியல் பிரசாரம் செய்கிறார்கள். முன்னணித் தலைவர்கள் தேர்தல் களத்தில் இறங்கிவிட்ட நிலையில் மின்வெட்டும், கூடங்குளமுமே தேர்தல் பிரசாரத்தின் முக்கிய அம்சங்களாக மாறப்போகின்றன. கடுமையான மின்வெட்டைச் சந்தித்துக் கொண்டிருக்கும் விவசாயிகள், தொழிலாளர்கள், தொழிலதிபர்கள், தாய்மார்கள் எல்லாம் அணுமின் நிலைய எதிர்ப்பாளர்கள்மீது கடும் கோபத்தில் இருக்கிறார்கள் குறிப்பிட்ட மக்களைத் திரட்டிவைத்துக் கொண்டு தினமும் ஒரு போராட்டம், பால்குடம் எடுத்தல், மொட்டை போடுதல் என்றுகூறி கூடங்குளம் அணுமின்நிலையம் இருக்கும் பகுதிகளில் ஒரு பதற்றத்தை உருவாக்கி வருகிறார்கள் கூடங்குள அணுமின் நிலைய எதிர்ப்பாளர்கள். இவர்கள்

### தமிழகப் பார்வை

மீது எல்லாம் மாநில காவல்துறை தங்கள் பங்கிற்கு தேசத்துரோக வழக்கைப்போட்டு வைத்திருக்கி போட்டிருந்தும், ஏன் கூடங்குளம் போராட்டக்குழுவின் தலைவர் உதயகுமாரை கைதுசெய்யவில்லை என்று கேட்டு தமிழக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் பத்திரிகையாளரைச் சந்தித்த, இந்திய அணுமின் கழக இயக்குநர் பரத்வாஜ், "அணுமின் நிலையத்தை திறக்க விடாததால் கடந்த ஆறுமாதங்களாக தினமும் ஐந்துகோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது" என்று அறிவித்தார். தமிழகம் கடும் மின்வெட்டை சந்தித்துக்கொண்டிருக்கிற வேளையில் கூடங்குள அணுமின் நிலையப் பணிகள் கடந்த ஆறுமாதங்களாக முடங்கிப்போய் கிடக்கின்றன. இதனால், சென்றவருட இறுதிக் கட்டத்தில் தமிழகத்திற்கு கிடைத்திருக்க வேண்டிய மின்சாரம் இன்னும் கிடைக்கவில்லை. அது மட்டுமின்றி இனி, பணிகள் தொடங்கினாலும், சுமார் ஆறுமாத காலங்கள் கழித்தே மின்சாரம் கிடைக்கும் என்று தெரிய வருகிறது. இந்த நிலையில் போனால், கோடை காலத்தில் மின்வெட்டு இன்னும் கடுமையாகப் போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை மனதில் வைத்துத்தான் 1000 மெகாவோட் மின்சாரத்தை மத்திய தொகுப்பில் இருந்து வழங்குங்கள் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா-பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு அடிக்கடி கடிதம் எழுதிவருகிறார். இப்போது கூட வெளிமாநிலங்களில் இருந்து மின்சாரம் வாங்குவதற்கு உள்ள தடையை நீக்குமாறு பிரதமர் மன்மோகன்



## "தமிழக அரசுக்கு "கரன்ட் ஷொக்" கொடுங்கள்" சங்கரன் கோவில் வாக்காளரிடம் தி.மு.க. வினர்

சிங்கிற்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

இதற்கிடையில் மத்தியஅரசு நியமித்த நிபுணர்குழுக்கள் தவிர, மாநில முன்னாள் அணுமின் கழகத் தலைவர் சீனிவாசன் தலைமையில் ஒரு நிபுணர்குழுவை அமைத்து கூடங்குளம் அணுமின் நிலையத்தின் பாதுகாப்பு அம்சங்களை ஆராய்ந்து விட்டது. அதன் அறிக்கை முதலமைச்சரிடம் கொடுக்கப்பட்டுவிட்டது. இதைத்தொடர்ந்து அணுமின்நிலையத்திற்கு எதிரான போராட்டக் குழுவின் தலைவர் உதயகுமார் உள்ளிட்டோரை தமிழக முதல்வர் சந்தித்துவிட்டார். இந்த சந்திப்பிற்கு பிறகு தமிழக சட்டம்- ஒழுங்கு, கூடுதல் டி.ஜி.பி. ஜார்ஜ் -கூடங்குளம் பகுதிக்குச் சென்று தென்மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டினார். கூடங்குளம் அணுமின் நிலையை பாதுகாப்புப் பற்றி அவர்களுடன் விவாதித்தார். கடலோரக் கிராமங்களிலிருந்துதான் இந்தப் போராட்டத்திற்கு அதிக மக்கள் வருகிறார்கள். அதை சமாளிப்பது எப்படி என்பது பற்றியும் மதுரை மண்டல ஐ.ஜி.ராஷேஸ் தாஸ் அந்த கிராமங்களுக்கு சென்று பார்வையிட்டு திரும்பியிருக்கிறார். இதற்கு முன்பு கூடங்குளம் தவிர, மற்ற பகுதிகளில் நடந்த அணுமின் நிலைய எதிர்ப்பு போராட்டங்களை பெரிய அளவில் மாநில அரசு கண்டுகொள்ளாமல் இருந்தது. ஆனால், மாநில அரசு அமைத்த குழு கொடுத்த அறிக்கை, கூடுதல் டி.ஜி.பி. ஆய்வு, கூடங்களம் அறிக்கை பற்றி தமிழக அமைச்சரவையில் ஆலோசனை போன்ற சம்பவங்களுக்கு பிறகு, ஈரோடு பகுதியில் நடைபெறுவதாக இருந்த அணுமின் நிலைய எதிர்ப்பு கூட்டத்திற்கு மாநில அரசு அனுமதி மறுத்துள்ளது. "இனி, பேராட்டங்களை அனுமதிக்க முடியாது" என்று ஒரு முன்னறிவிப்பை போராட்டக்காரர்களுக்கு கொடுத்திருக்கிறது மாநில அரசு. கூடங்குளம் அணுமின் நிலையத்தை திறக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்யவேண்டும் என்று கொள்கை அளவில் மாநில அரசு முடிவு எடுத்துள்ளது போலவே, தொடர்ந்து நடைபெறும் சம்பவங்கள் காட்டுகின்றன.

கொள்கை முடிவை அம்பலப் படுத்தும் நேரத்தை மட்டுமே முடிவு பண்ணாமல் வைத்திருக்கிறார் தமிழக முதல்வர் ஜெயலலிதா. அதற்கு முக்கிய காரணம் சங்கரன் கோவில் இடைத்தேர்தல். அந்த இடைத்தேர்தல் மார்ச் 18 ஆம் திகதி நடைபெறப் போகிறது. அதன் பிறகு எந்த நேரத்திலும் கூடங்குளம் அணுமின் நிலைய விவகாரத்தில் தமிழக அரசின் நிலைப்பாடு வெளியிடப்படும். உடனே பொலிஸ்துறையும், அரசு அதிகாரிகளும் கூடங்குளம் அணுமின் நிலையப் பணிகள் தங்குதடையின்றி நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிகிறது. இதையெல்லாம் மனதில் வைத்தே, "கூடங்குளம் அணுமின் நிலைய விவகாரத்தில் மத்திய அரசின் முயற்சிகளுக்கு மாநில அரசு துணை நிற்க வேண்டும்" என்று மத்திய அமைச்சர் ஜி.கே. வாசனும், "உடனே திறக்க வழிசெய்யவேண்டும்" என்று தி.மு.க. தலைவர் கருணாநிதியும் பரபரப்பு அறிக்கைகள் மற்றும் பேட்டிகளை அளித்துள்ளார். இதற்கிடையில் மத்திய அரசும் "இந்தியாவில் உள்ள என்.ஜி.ஓ. க்களுக்கு 10 ஆயிரம்கோடி ரூபாய்க்கு மேல் வெளி நாட்டப்பணம் வந்திருக்கிறது. குறிப்பாக தமிழகத்தில் உள்ள என்.ஜி.ஓ.அமைப்புகளும் ஆயிரத்து 600 கோடி ரூபாய்க்கு மேல் நிதி வந்திருக்கிறது" என்று அறிவித்து கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்பார்ப்பாளர்களுக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்பாளர்களுக்கு ஒருபுறம் மத்திய அரசின் நெருக்கடி, இன்னொரு புறம் கடும் மின்வெட்டால் மக்களே அவர்களுக்கு எதிராகத் திரும்பியது, ஆயினும் எல்லாவற்றிற்கும் மேலாக இதுவரை அவர்கள் பக்கமும் நியாயம் இருக்கிறது. அணுமின் நிலைய பதுகாப்

**நன்றி: இணையம்**

பை மத்திய அரசு உறுதி செய்து அம்மக்களின் அச்சத்தை போக்க வேண்டும் என்று கூறிவந்த மாநில அரசு, இப்போது போராட்டக் காரர்களின் வாதத்தை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இல்லை. அந்த அளவிற்கு மின்வெட்டால், மக்களும், தொழிற்சாலைகளும், சிறுதொழில்களும் தமிழகத்தில் பாதிக்கப்பட்டுள்ளன. ஆகவே, சங்கரன்கோவில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் கூடங்குளம் அணுமின்நிலைய பிரச்சினையில் தன் முடிவை அறிவிப்பார் முதல்வர் ஜெயலலிதா என்பதே இப்போது தமிழக அரசின் அதிகார மையத்தில் இருக்கும் அதிகாரிகளின் கருத்தாக



இருக்கிறது. சங்கரன்கோவில் தேர்தல் முடிந்ததும், கூடங்குளம் அணுமின் நிலையப்பணிகள் மீண்டும் தொடங்கும் என்று மத்திய அரசும் பெரும் நம்பிக்கையில் இருக்கிறது.

# நடுவீதியில் கத்திக்குத்துக்கு இலக்கான கைலாயநாதன்

## நடந்தது என்ன?

கே.கே.எஸ். வீதியும் மின் சாரநிலைய வீதியும் சந்திக்கும் பகுதியில் சிவசம்பு களஞ்சியம் இயங்குகின்றது. அதன் விஸ்தீரணம் சிறியதாயினும் வர்த்தகச் செயற்பாடுகள் அங்கு மிகவும் சுறுசுறுப்பாக நடைபெறும்.

அண்ணன், தம்பி ஆகிய இருவரும் கூட்டாக நடத்தும் அந்தக் களஞ்சியம் தமிழ் மருந்துக்கடை. ஆலயங்க ளுக்கான அபிஷேக திரவிய ங்கள் உட்பட கோவில் தேவை களுக்கு அந்தக்கடை பிரபல் யமானது. அன்று 2012 ஜனவரி 31 ஆம் திகதி இரவு 7.45 மணிக்கெல்லாம் கடைபூட்டப் பட்டுவிட்டது. அன்றைய வியாபாரத்தில் கிடைத்த பணம்




வைக்கப்பட்ட பையுடன் இரண்டுபைகளை கைலாயநா தன் துவிச்சக்கர வண்டியில் எடுத்துச்செல்கிறார். கந்தர் மடம் அம்மன் வீதியில் இருக் கும் அவரின் வீடு நோக்கி துவிச்சக்கர வண்டி உந்துகிறது. வழமையில் பலாலிவீதியூடாக வீடு செல்லும் அவர் அன் றையதினம் பருத்தித்துறை வீதியால் பயணிக்கின்றார்.

ஆனைப்பந்தி சந்திக்கும் வீரமாகாளி அம்மன் கோயிலுக் கும் இடைப்பட்ட பருத்தித் துறை வீதியில் சன நடமாட்டம் குறைந்த-மின்குமிழ்கள் ஒளி ராத பகுதியில் இரவு 8 மணியை அண்மிக்கும் நேரத்தில் கைலா யநாதனுக்கு கத்திக்குத்து விழுகிறது.

கத்தியால் குத்தியவர்கள் அவர் வைத்திருந்த இரண்டு பைகளில் ஒன்றை அபகரித் துச் செல்கின்றனர். எனினும் அது பணப்பை அல்ல.

கத்திக்குத்துக்கு இலக்கான கைலாயநாதன் தன்னைக் காப் பாற்றுமாறு கூக்குரல் இடுகி ன்றார். யாருமே உதவுவதாக இல்லை.


அச்சமயம் கைலாயநாதனுக் குத் தெரிந்த ஆட்டோ ஒன்று வருகின்றது. ஆட்டோ உரிமை யாளர் வீதியில் விழுந்து கிடப் பவரைப் பார்க்கின்றார். இரத்த வெள்ளத்தில் கைலாயநாதன் .

ஏதோ நடந்துவிட்டதை உணர்ந்துகொண்ட அவர் கைலாயநாதனை ஆட்டோவில் ஏற்றிச்சென்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கின்றார். தகவல் அறிந்த உறவினர்கள் வைத்தியசாலை க்கு விரைகின்றார்கள்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட கைலாய நாதன் ஐந்து நாட்கள் சுய நினைவோடு இருந்தாராயினும் அவரால் வாய்திறந்து எதனை யும் பேசமுடியவில்லை.

உடலில் மூன்று கத்திக்குத் துக்கள். இதில் ஒன்று அவரின் நுரையீரலை ஆழமாகத் தாக்கியி ருந்தது.

குருஷேத்திரப் போர்க்காலம் போன்று 18 நாட்கள் கைலாய நாதன் உயிருக்காகப் போராடி னார். ஆனால் அவரை யாரா லும் காப்பாற்ற முடியாமல் போயிற்று.



கைலாயநாதன்

## எங்கள் மண்ணின் அவலக்குரல்களும் அதைக் கேட்க மறுக்கும் வன்செவிகளும்

### மர்மம் என்ன?

வழமையில் தனது வர்த்தக நிலையத்தை பூட்டிவிட்டு பலாலி வீதியூடாகக் கந்தர்மடம் அம்மன் வீதியிலுள்ள தனது வீட்டிற்குச்செல்லும் கைலாய நாதன் அன்றுமட்டும் பருத்தித் துறை வீதியூடாகச்சென்றது ஏன்?

யாரேனும் அவரை அச்சு றுத்தி பருத்தித்துறை வீதியால் அவரைக் கூட்டிச் சென்றார் களா அல்லது தன்னை பின் தொடர்ந்தவர்களிடம் இருந்து தப்பித்துக் கொள்ள கைலாய நாதன் பருத்தித்துறை வீதியை தெரிவுசெய்து கொண்டாரா?

இந்தப்புரியாத புதிரை உயி ருக்காகப் போராடிய 18 நாட் களில் கைலாயநாதனால் சொல் லவே முடியவில்லை. அவரின் வாக்குமூலம் இருந்திருந்தால் கொலையாளிகளைக் கண்டு கொள்வதற்கு உதவியாக இருந் திருக்கும்.

எதுவாயினும் ஒரு அப்பாவி மனிதனின்-இந்த மண்ணில் வாழ்ந்த கடின உழைப்பாளியின் உயிர் காவுகொள்ளப்பட்டுள் ளமை யாழ்ப்பாணத்தின் தனி மனித பாதுகாப்பை கேள்விக் குறியாக்கி இருப்பதை சுட்டி நிற்கின்றது. கொலை, கொள் ளை, பாலியல் விவகாரங்களின் படையெடுப்பில் சிக்கித் தவிக்கும் யாழ்ப்பாணத்தை மீட்டெடுக்க யார் உளர்.

ஓ! மக்கள் சமூகமே அறு பத்தொரு வயது நிரம்பிய கைலாயநாதன் கத்திக் குத்துக்கு இலக்காகி என்னைக் காப்பாற் றுங்கள் என்று அவலக் குரல் எழுப்பியபோது எங்கள் செவி கள் ஏன்தான் வன்செவி களா யின. ஓ! பயம் எங்களை முழு மையாகாகக் காவுகொண்டு விட்டதா? அல்லது மனிதநேயம் சுயநலத்தில் புதையுண்டு போனதா?


இன்று கைலாயநாதனுக்கு இது கதி என்றால், நாளைய பொழுதில் எங்கள் சமூகம் மனம் மாறி மனிதநேயம் காக் கவா போகின்றது. ஓ! மனித நேய அமைப்புகளே! மனித நேயத்தை அமைப்புகளாக்கி விட்டதால், மனிதர்கள் தங்கள் பொறுப்பு நீங்கி விட்ட தாக நினைத்துவிட்டார்கள் போலும். கைலாயநாதனின் கொலை உண்மையாயினும் கொலை செய்தவர்கவர்கள் கண்டறியப்படுவார்கள் என்பது உண்மையா?

யாழ்ப்பாணப் பொலிஸா ரைத்தவிர இதற்கு யார்தான் பதில் அளிக்கமுடியும்.

**விஜயன் -பிரபா**

# தமிழ் மக்களின் போராட்டம் சர்வதேசத்தில் பரிணமித்துள்ளது

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு



இலங்கை அரசாங்கத்தை நடுங்க வைத்த பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கின்றது. ஆனால் கூட்டமைப்பை பிளவுபடுத்தும் நோக்கில் அரசாங்கத்தினால் பணம் ஒதுக்கப்பட்டு பல ஊடகங்கள் இலங்கையில் செயற்பட்டுக் கொண்டிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டு. களுவாஞ்சிக்குடி சைவ மகா சபையின் 59 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் புத்த சமயம் எங்களில் ஆளுமை செலுத்தியதன் காரணமாக இனவாதம் என்பது எம்மில் தங்கி நிற்கின்றது. இந்த இனவாதத்தின் சிந்தனையால் தமிழ் மக்கள் பல வேதனைகளை சந்தித்துக் கொண்டு இருக்கின்றார்கள். புத்த பகவானின் போதனை வேறு. ஆனால் இன்று பௌத்த சமயத்தில் இருக்கின்ற வரலாற்று ரீதியான ஆளுமை என்பது தற்போது இனவாத ஆதிக்கமாக மாறியுள்ளதன் காரணமாக சிறுபான்மை என்கின்ற உணர்வுகளை தந்து உரிமைகளை இழந்து தத்தளித்துக் கொண்டு இருக்கின்றவர்களாக தமிழர்கள் இருக்கின்றோம்.

இதேவேளை, எமது போராட்டம் இன்று சர்வதேச அளவிலே பரிணமித்துக் கொண்டிருக்கின்றது. அதன் விளைவாகத்தான் ஜெனீவாப் பேச்சுவார்த்தையும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

கூட்டமைப்பு அதிகாரத்தை பிரயோகித்தோ ஆக்கிரமித்தோ எவரையும் துன்புறுத்தவில்லை. எங்களிடம் ஆயுதங்களோ அல்லது எச்சரிக்கை பண்ணக்கூடிய எவையுமில்லை. எவரும் எதையும் செய்யலாம். இவ்வாறான காரணங்களினால் கூட்டமைப்பு தனது கொள்கையிலே இருந்து சற்றும் பின்னடையாது அதன் பயணத்தில் முன்னோக்கியே சென்று கொண்டிருக்கும்.

முன்மொழியப்பட்ட பிரேரணை என்ன என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். முள்ளிவாய்க்காலிலே இடம்பெற்ற போர்க்குற்றச்சாட்டுக்கள், மனித அவலங்கள் பற்றி ஐ.நா. சபையினால் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதன் மூலமாகத்தான் தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற விடயத்தை கொண்டு சென்றிருக்கின்றார்கள் என்றார். (அ-2)

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் வலி.மேற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகர்த்தர் ஆ.கோகுலன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக அ.சர்வானந்தன், செயலாளராக க.ஞானசேகரம், பொருளாளராக க.சபாரத்தினம், உபதலைவராக வே.பாலசுப்பிரமணியம், உபசெயலாளராக க. இராசசிவம் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்கள் எட்டு பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

---

பாரதி சனசமூக நிலையத்தின் இவ்வாண்டுக்கான நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக பெ.மதிகாந்தன், செயலாளராக செ. கேதீஸ்வரன், பொருளாளராக வே. சிவசுப்பிரமணியம், உபதலைவராக வே.மயூரன், உபசெயலாளராக வி.சிவபாலன், கணக்காய்வாளராக கு.சுரேஸ்குமார் ஆகியோரும் நான்கு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ)

## இந்திய அரசு அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு 174 மில்லியன் நன்கொடை

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசாங்கத்தின் 174 மில்லியன் ரூபா நன்கொடையுடன் அச்சுவேலி கைத்தொழில் பேட்டை மீளவும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது என பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வி.சிவஞானம் சோதி தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக அச்சுவேலி கைத்தொழில் பேட்டையும் செயலிழந்து போனது. இந்த கைத்தொழில் பேட்டையை மீளவும் இயங்க வைப்பதன் மூலம் பலருக்கு தொழில் வாய்ப்பினை வழங்குவதனால் தொழில் துறைகளில் முன்னேற்றமும் காணமுடியும்.

இந்திய அரசாங்கம் இந்த கைத்தொழில் பேட்டையை மீளவும் இயங்க வைப்பதற்கு 174 மில்லியன் ரூபா நிதியை நன் கொடையாக வழங்க முன்வந்துள்ளது.

14 மாதங்களில் இந்த அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் உட்கட்டுமான வேலைகள் பூர்த்தியாக்கப்படும் என எதிர் பார்க்கப்படுவதோடு 16 மாதங்களில் இயங்க வைக்க முடியும் எனவும் எதிர் பார்க்கப்படுகின்றது.

1971 ஆம் ஆண்டு அளவில் 65 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த கைத்தொழில் பேட்டை இயங்கி வந்தது. ஆனால் 25 ஏக்கரி லேதான் மீள் கட்டுமானப் பணிகள் மேற் கொள்ளப்பட வுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## புதிதாக இணைந்துள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சித் திட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மூன்று வாரங்களுக்கு 28 மத்திய நிலையங்களில் மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படவுள்ளதென உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

இராணுவ, கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் மாணவர்படை முகாம்களில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலை

மைத் துவ பயிற்சி வழங்கப்படும்.

பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சித் திட்டம் கடந்த வருடம் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.


பல்வேறு குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்கள், அழுத்தங்கள் காணப்பட்டாலும் பயிற்சித் திட்டத்தை உரிய முறையில் நிறைவு செய்ய முடிந்தது. கடந்த முறையில் ஏற்பட்ட குறைபாடுகளை நீக்கி சகல தரப்பினரதும் ஆலோசனைக்கு ஏற்ப இம்முறை தலைமைத்துவ பயிற்சித் திட்டத்தை மேலும் சிறப்பாக முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.


இம்முறை பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ள சுமார் 22 ஆயிரம் மாணவர்களில் பத்தாயிரம் பேர் இம்மாதம் ஆரம்பமாகும் முதற்கட்ட தலைமைத்துவ பயிற்சித் திட்டத்தில் இணைந்து கொள்ளவுள்ளனர். (அ-2)












மார்ச் 8 ஆம் திகதி இலங்கை வங்கி (வட பிராந்தியம்) யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடத்திய மகளிர் தினத்தின் போது மங்கல விளக்கேற்றப்படுவதையும் இலங்கை வங்கியின் யாழ். பிரதான கிளை முகாமையாளர் எஸ்.என். மாணிக்கசிங்கி மற்றும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் தேவரஞ்சினி சிவஸ்கரன் ஆகியோர் உரையாற்றுவதையும் இலங்கை வங்கி வடபிராந்திய முகாமையாளர் கே.இ.டி.சுமணசிறி பெண் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் பெண்களின் பொருளாதார முன்னேற்றத்தின் முன்னோடியாக திகழும் திருமதி இதயராஜ் சைலா யாழ். குடாநாட்டின் சிறந்த பெண்மணியாக தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்காமல் பொருந்தாத காரணம் கூறி அரசு மழுப்புகிறது

## பழ.நெடுமாறன் கண்டனம்



(சென்னை)

ஐ.நா. மனித உரிமை குழுவின் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஆதரிக்காமல் பொருந்தாத காரணம் கூறி மத்திய அரசு மழுப்புகிறது என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஐ.நா.மனித உரிமைக் குழுவில் தனியொரு நாட்டுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்காது என மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார். இதனை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கும் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும் துணை நின்றது இந்திய அரசுதான்.

எனவேதான் தனது கூட்டாளிக்கு எதிராக கண்டனம் தெரிவிக்க இந்தியா மறுக்கிறது. தென்னாபிரிக்க அரசின் நிறவெறிக் கொள்கையைக் கண்டனம் செய்து அதற்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று ஐ.நா. பேரவையில் அன்றைய பிரதமர் ஜவாஹர்லால் நேரு தீர்மானம் கொண்டு வந்தார். அப்போது பிரிட்டன் அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.


ஆனால், ஆசிய ஆபிரிக்க நாடுகள் மற்றும் கம்யூனிஸ்ட் கொள்கைகளைச் சார்ந்த அரசு ஆட்சியில் இருந்த நாடுகளின் ஆதரவுடன் ஐ.நா. பேரவையில் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தனி ஒரு நாட்டுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரு தயங்கவில்லை.

ஆனால், நேரு வழியில் வந்ததாகக் கூறும் மன்மோகன் சிங் அரசு இலங்கை விவகாரத்தில் பொருந்தாத காரணம் கூறி மழுப்புகிறது.

அமெரிக்கா பிரிட்டன் உட்பட மேற்கு நாடுகள் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்கும் போது இந்தியா பின்வாங்குவது மனித உரிமைக்கு எதிரான செயலாகும் என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு பசுமைத் தாயகம் ஆதரவு திரட்டுகிறது

## ராமதாஸ் தெரிவிப்பு



ஐ.நா மனித உரிமை குழுவின் உறுப்பினர்களிடம் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு பசுமைத் தாயகம் ஆதரவு திரட்டுவதாக பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கை இலங்கைக்கு எதிராக ஐ.நா. வில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்க வேண்டும் என்று தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருமித்துக் குரல் கொடுத்து வருகின்றன.

ஆனால் இந்தப் பிரச்சினையில் மத்திய அரசின் நிலைப்பாடு என்ன என்பதை இதுவரை அறிவிக்கவில்லை. இலங்கைப் போரில் பிரபாகரன் மகன் பாலசந்திரன் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட காட்சியை இங்கிலாந்தின் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது. இந்த ஆதாரத்தைப் பார்த்தாவது இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்கும் முடிவை மத்திய அரசு அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டும்.

ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வெற்றி பெறச் செய்ய தனிப்பட்ட முறையில் நானும் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றேன்.

இதனைப் பயன்படுத்தி பசுமைத் தாயகம் சார்பில் மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்களைச் சந்தித்து இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவு திரட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறோம். இந்த முயற்சிக்கு உலகெங்கும் உள்ள தமிழர்கள் ஆதரவு கொடுத்து உள்ளனர் என்று அவர் கூறினார். (அ-2)

# இலங்கைத் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்படும் காங்கிரஸ் எம்.பிக்களிடம் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளிப்பு

(புதுடில்லி)

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் குழுக்கூட்டத்தில் கொண்டு வரப்படும் தீர்மானம் தொடர்பாக தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தமிழகத்தை சேர்ந்த காங்கிரஸ் எம்.பிக்களின் பிரதமர் மன்மோகன் சிங் உறுதி அளித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தமிழக காங்கிரஸ் எம்.பிக்கள் நேற்று முன்தினம் குரல் கொடுத்தனர். பின்னர் பிரதமர் மன்மோகன் சிங்கை அரவது அலுவலகத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் பி.எஸ்.ஞானதேசிகன் தலைமையில் தமிழக காங்கிரஸ் உறுப்பினர்கள் சந்தித்தனர்.

அவ்வேளையில் மாநிலங்களவை உறுப்பினர் எம்.பிக்கள் கையெழுத்திட்ட மனுவை பிரதமரிடம் அளித்தனர்.

அம்மனுவில் கூறியிருப்பதாவது, இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிந்து மூன்று ஆண்டுகள் முடிந்து விட்டது. இந்த நிலையில் போரின் போது அப்பாவி மக்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் இழைக்கப்பட்டுள்ளன. ஆனால் அதற்கு யாரும் பொறுப்புஏற்கவில்லை.மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக ஆய்வு செய்த பல சர்வதேச உள்நாட்டு பார்வையாளர்கள் அனைவரும் போர்க்குற்றங்கள் மீது நடவடிக்கை எடுக்க இலங்கை அரசு சரியான செயல் திட்டத்தை வகுக்கவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளனர். இதனை குறிப்பிட்டு தான் அமெரிக்காவும் ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் குழுக்கூட்டத்தில் தீர்மானத்தை கொண்டு வந்துள்ளது.

ராஜீவ் காந்தி- ஜெயவர்த்தன உடன்படிக்கையின் படி இலங்கை தமிழர்களுக்கு அரசியல் உரிமையை பெற்றுத் தரும் நடவடிக்கையில் மத்திய அரசு முனைப்பு காட்ட வேண்டும். இலங்கையில் வடகிழக்கு, வடக்கு மாகாணங்களில் வசிக்கும் ஆதரவற்ற இலங்கை தமிழ் மக்களின் நலன்களில் உண்மையான அக்கறை உள்ள நாடு இந்தியா மட்டுமே என்ற உணர்வுடன் இந்த விவகாரத்தை அணுக வேண்டும் என அம்மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மனுவை பெற்றுக் கொண்ட பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை தமிழர்கள் விவகாரத்தில் மத்திய அரசு மிகுந்த அக்கறையும் கவலையும் கொண்டிருப்பதாகவும் கூறினார். தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்த விவகாரத்தில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என பிரதமர் கூறினார். (அ-2)

# 700 பாகிஸ்தானியர்களுக்கு குடியுரிமை வழங்கிய இந்தியா

கடந்த மூன்று ஆண்டுகளில் 700 பாகிஸ்தானியர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கடந்த மூன்று ஆண்டுகளில் 700 பாகிஸ்தானியர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. இதில் 2009 ஆம் ஆண்டு 321 பேருக்கும் 2010 ஆம் ஆண்டில் 150 பேருக்கும் 2011 இல் 300 பேருக்கும் என 700 இற்கும் மேற்பட்டோருக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் 2009 ஆம் ஆண்டு 31 விண்ணப்பங்களும் 2010 இல் 54 விண்ணப்பங்களும் 2011 இல் 14 விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டன.

கடந்த 2009 ஆம் ஆண்டில் 285 ஆப்கானிஸ்தானியர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அமைச்சர் முல்லைப்பள்ளி இராமச்சந்திரன் தெரிவித்தார். (அ-2)

# இந்தியாவில் 25 இலட்சம் ஓரின சேர்க்கையாளர்கள்

## 7 வீதமானோருக்கு எச்.ஐ.வி.தொற்று



(புதுடில்லி)

இந்தியாவில் 25 இலட்சம் பேர் ஓரினசேர்க்கை பழக்கம் உள்ளவர்கள் என்றும் அவர்களில் 7 சதவீதம் பேர் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவது குற்றம் ஆகாது என்று டில்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து அரசியல் கட்சிகள் மத அமைப்புகள் என பல தரப்பினர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த மனுக்களை நீதிபதிகள் விசாரித்து வருகின்றனர்.

இந்தியாவில் ஓரின சேர்க்கையாளர்கள் எண்ணிக்கை எவ்வளவு? அதில் எவ்வளவுபேருக்கு எச்.ஐ.வி பாதிப்பு உள்ளது. என்பது மத்திய சுகாதார துறை உச்ச நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்த பதில் மனு தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டுத்திட்ட புள்ளிவிபரப்படி இந்தியாவில் 25 இலட்சம் ஓரின சேர்க்கையாளர்கள் உள்ளனர்.

இவர்களில் 7 சதவீதம் பேருக்கு அதாவது 1.75 இலட்சம் பேருக்கு எச்.ஐ.வி வைரஸ் பாதிப்பு உள்ளது. ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் ஆண்களில் 4 இலட்சம் பேருக்கு எயிட்ஸ் நோய் வரும் அபாயம் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களுக்கு எயிட்ஸ் வராமல் தடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது என அரசு பதில் மனுவில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

## பாரதச் செய்தி

# இந்தியாவில் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது

கடந்த ஆண்டுகளைவிட 2010-11 ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் புதிய தொழுநோயாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் புதிதாக 2 இலட்சத்து 28 ஆயிரத்து 474 பேர் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களாக கண்டறியப்பட்டனர்.

இதில் 55.5 சதவீதம் அதாவது, ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 800 பேர் இந்தியர்கள் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் நேற்று முன்தினம் நடந்த நாடாளுமன்றக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் அவர் கூறியதாவது, தொழுநோயை உடனடியாக ஒழிப்பது என்பது இயலாத காரியம். ஏனெனில் இதற்கான சிகிச்சைக் காலம் சில வாரங்கள் முதல் 20 ஆண்டுகளாக உள்ளன. புதிய தொழுநோயாளிகளின் எண்ணிக்கையை 10 ஆயிரத்தில் ஒருவராக குறைக்க வேண்டும் என்பது இப்போதைய இலக்கு.

தொழுநோயை ஒழிப்பதற்கு மத்திய அரசு ரூ.45 கோடி செலவிட்டுள்ளது. இருப்பினும் நம் நாட்டின் மாநிலங்களைப் பொறுத்தவரை 25 ஆயிரத்து 509 தொழுநோயாளிகளுடன் உத்தரப்பிரதேசம் முதலிடம் வகிக்கிறது என்று தெரிவித்துள்ளார். (அ-2)

# வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் ஆலோசனைகள்

அதிகரித்து வரும் பெண்கள், சிறுமியர் மீதான வன்முறைகளை தடுத்து நிறுத்த நாம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு நாம் முதலில் இளம் பெண்களையும் சிறுமியர்களையும் விழிப்படைய செய்து குறுகியகால செயற்றிட்டத்தின் மூலம் இதனை ஓரளவிற்கு தடுக்கலாம் என்ற ஆலோசனைகளை சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம் முன்வைத்துள்ளது.

இவ்விடயம் சார்பாக சங்கானைக் கோட்டத்தின் ஆசிரியர்களுக்கான ஓர் அமர்வு எமது இவ் அமைப்பினால் பரீட்சார்த்தமாக வெற்றிகரமாக நடத்தப்பட்டு ஆலோசனைகள் பெறப்பட்டன.

அந்த ஆலோசனைகளுக்கு அமைவாக எம்மால் பின்வரும் தீர்வுகள் எட்டப்பட்டன.

இத்தீர்வுகள் ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் மட்டத்திலிலும் செயற்படுத்தப்படும் போது ஓரளவிற்கேனும் சமூக ஒழுக்கங்களை பாதுகாக்கலாம் என இவ்வமைப்பு பரிந்துரை செய்கிறது.

இதற்கமைவாக வலி. மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எடுத்த விடயங்களை கீழே குறிப்பிடுகின்றோம்.

✸ பிரதேசத்தில் உள்ள 25 கிராம அலுவலர்கள் பிரிவினையும் 25 குழுக்களாக பிரித்தல்.

✸ இப்பிரதேசத்தில் உள்ள 17 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், 79 சனசமூக நிலையங்கள், 20 கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள், 32 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியைகள் இவர்களை 25 குழுக்களாக பிரித்தல்

✸ இப்பிரதேசத்தில் உள்ள 188 ஆலயங்களதும் குருமார்கள், ஆலய அறங்காவலர்கள், 10 கிறிஸ்தவ ஆலயங்களது குருமார்கள் ஆகியோரை இணைத்து 25 குழுக்களாக பிரித்தல்.

✸ இவர்களுடன் பிரதேச செயலகத்தின் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் எம்.ஓ. எச். யை சேர்ந்த தாதியர்கள், அதிகாரிகள் ஆகியோரையும் இணைத்தல்.

✸ குழுக்களில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவருக்கும் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் முதலில் வழக்கப்படல் வேண்டும். அதற்கு உடனடியாக துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல்.

✸ பிரதேசத்தில் உள்ள முதலில் ஆலோசனைகள் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படும் கிராமங்களை தெரிவு செய்து அங்கு உள்ள தாய்மார்களை முதலிலும் அவர்கள் பெண்பிள்ளைகளையும் நேரடியாகச் சந்தித்து பெண்களுக்கு ஏற்படும் ஆபத்துக்களையும் ஏற்படும் விளைவுகளையும் சகயமாக விளங்கப்படுத்தல் வேண்டும்.

இதனை ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்துவதற்கு இயன்ற ஒத்துழைப்புக்களை வழங்க சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் குருமார்கள் எப்போதும் தயாராக உள்ளனர்.

இப்பணிக்கு ஆசிரியர்களுக்கான சங்கம், பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள் மருத்துவ மாணவர் அமைப்புக்கள், தாதிய மாணவர் அமைப்புக்கள், குறிப்பாக ஆலய அறங்காவலர்கள், சமய சொற்பொழிவாளர்கள், இந்து அமைப்புக்கள் தமது சேவைகளுக்கும் அப்பால் ஒரு மிகச்சிறந்த தானமாக தமது சேவைகளை வழங்க முன்வருவதன் மூலம் எமது கலாசாரத்தையும் எழது பிள்ளைகளையும் பாதுகாக்க முடியும்.

சமூக நலன் அக்கறை உடைய அமைப்புக்களும் ஆலயங்களும் அரச அதிபர் தலைமையிலான பிரதேச செயலகங்களும் இவ் விடயத்தில் ஒன்றுகூடி உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது எமது வேண்டுகோள் என அவ் அமைப்பு தெரித்துள்ளது. (அ)


UNIVERSITY OF JAFFNA- SRILANKA

SPORTS SCIENCE UNIT

Academic Year -2012/2013

Applications are invited from those who wish to follow the **Diploma in Physical Education** Course to be contacted by the University of Jaffna for the Academic Year 2012/2013

Applications should satisfy the requirements given bellow.

**Minimum Educational Qualifications:**

1.Should have passed in three subjects in the G.C.E(A/L) in one and the same sitting.

2.Should have the minimum Qualification required by the University Grants commision for university admission in srilanka

**Selection:**

The selection will be based on the performance of the applicants in a written examinations and practical assessment and Oral examination conducted by the university.

These examination and assignment test will be held at the University of Jaffna ,Thirunelvely.

**Note:** performance will be given to those candidates who have participated in sports and athletics and won places at District and National Level.

**Age:** Should be in the age group18-28 years.

The University Senate may relax the age requirement in the case of Candidates who are already in the sports profession in Government and Non-Government Sectors.

**Duration:Two years.(Internal-Fulltime)**

**Course Fee: Rs 24,000/=**

Application from could be obtained from the Assistant Registrar/ Student Admissions Branch, University of Jaffna on a Payment of Rs.100/= Duly filled Application form should be submitted to the **Assistant Registrar/ Student Admissions Branch, University of Jaffna, Jaffna** on or before 16.04.2012.

**Registrar**
**13.03.2012**

(C-6084)


# மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலை இம்மாத இறுதியில் வெளியிடப்படும்

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

மருந்துப் பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலைமுறை இம்மாத இறுதியில் அல்லது அடுத்தமாத முற்பகுதியில் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சின் ஊடாக இந்த கட்டுப்பாட்டு விலை முறைமை வர்த்தமானியில் வெளியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில், மருந்துப் பொருட்களுக்குக் கட்டுப்பாட்டு விலை முறையை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் முடிவு செய்துள்ளோம். இது தொடர்பாக உள்நாட்டு வர்த்தக கூட்டுறவு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவ்விலைக் கட்டுப்பாட்டு முறை மூன்று கட்டங்களாக வர்த்தமானியில் வெளியிடப்படும். முதலில் அத்தியாவசியமற்ற மருந்து பொருட்களுக்கே கட்டுப்பாட்டு விலை முறை அறிமுகப்படுத்தப்படும். நாட்டில் ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட மருந்துப் பொருட்கள் புழக்கத்தில் உள்ளன. ஆனால், 282 மருந்து பொருட்களே அத்தியாவசியமானவை.

நாட்டு மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்படுத்தப்படும் இத்திட்டம், மக்களுக்கு எதுவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தி விடாத வகையில் ஒழுங்கு முறையாக முன்னெடுக்கப்படும் என்றார். (அ-2)

# கொழும்பில் டெங்குநோய்த்தாக்கம் அதிகரிப்பு

மேல் மாகாணத்தில் இந்த வருடத்தில் மாத்திரம் டெங்குக் காய்ச்சலினால் 7 பேர் உயிரிழந்துள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதுவரை 4ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

டெங்குக் காய்ச்சலினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும் நோய்த்தாக்கத்திற்கு இலக்காகும் நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாவதாக மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. மட்டக்குளி, தெஹிவளை, கொலன்னாவ, கோட்டை உள்ளிட்ட கொழும்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் அதிகளவலானவர்கள் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# யாழ். மாநகர சபைக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

பிரதித் தொழில் ஆணையாளரினால யாழ். மாநகர சபைக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த குற்றவியல் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.மாநகர சபையில் சேவையாற்றிய ஊழியர் ஒருவருக்கு வழங்கப்படவேண்டிய ஊழியர் சேமலாப நிதியினை முழுமையாக வழங்கப்படாமையினாலேயே மேற்படி குற்றவியல் வழக்கு மாநகர சபை ஆணையாளருக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ளது.மாநகர சபையில் சேவையாற்றிய ஒருவருக்கு கொடுக்கப்பட வேண்டிய 20 வீத ஊழியர் சேமலாப நிதியில் குறித்தவருக்கு 12 வீதமான நிதி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

மிகுதி எட்டு வீதமானது மாநகர சபையினால் குறித்தவருக்கு வழங்கப்படாததோடு அத் தொகையினை மாநகரசபை வழங்க வேண்டியதில்லை. குறித்தவராலேயே அவ் எட்டு வீதமும் பங்களிப்புச் செய்யப்பட வேண்டும் எனவும் மாநகரசபையின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. எனினும் குறித்த ஊழியருக்கு வழங்கப்பட்டுள்ள 12 வீத ஊழியர் சேமலாப நிதியானது மாநகர சபையின் ஆணையாளரினாலேயே வழங்கப்பட்டுள்ளது எனவும் ஆகவே மிகுதி 8 வீத நிதியும் கழிக்கப்பட்டது தொடர்பில் கருத்திற் கொள்ளப்படும் எனவும் வாதாடப்பட்டது.

இவ் வழக்கில் மாநகரசபையின் சார்பில் சட்டத்தரணி அ.ராஜரட்ணமும் தொழில் ஆணையாளர் சார்பில் சட்டத்தரணி வி.ஜி. சிவலிங்கமும் ஆஜராகி இருந்தனர்.இந்நிலையில் குறித்த வழக்கு கட்டளைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (அ-4)

அறிவாளி என்பவன் யார் தெரியுமா? தேவைப் படும் போது தன் முடிவை மாற்றிக் கொள்ளத் தெரிந்தவன் தான். -டாக்டர் ஜான்சன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இராமர் தேரையைக் கொன்றார் இந்தியா தமிழரைக் கொன்றது

இராமபிரான் ஆற்றில் நீராடுவதற்காகத் தன்னிடம் இருந்த அம்பை நிலத்தில் ஊன்றிவிட்டு நீராடச் செல்கிறார்.

இராமர் அம்பை நிலத்தில் ஊன்றிய போது நிலத்தின் கீழ் இருந்த தேரையை அம்பு குத்தி விடுகிறது.

நீராடிவிட்டு வந்த இராமர் நிலத்தில் தான் ஊன்றி வைத்த அம்பை இழுக்கிறார்.

அம்பின் நுனியில் குத்துண்ட தேரை துடிக்கிறது. நிலைமையை அவதானித்த இராமர் 'தேரையே நாம் அம்பை குத்தும் போது நீ கூப்பிட்டிருக்கலாம் அல்லவா?' என்று கூறுகிறார்.

அம்பில் குத்துண்டு வலிதாங்க முடியாமல் துடிக்கும் தேரை இராமரை பார்த்து கூறுகின்றது. 'இராமா! எனக்கு யார் துன்பம் செய்தாலும் நான் இராமா... இராமா... என்றுதான் உச்சாடனம் செய்வேன். அந்த இராமரே என்னைக்குத்தும் போது நான் யாரைக் கூப்பிடுவேன்.' இவ்வாறு கூறியபடியே தேரையின் உயிர் பிரிந்தது.

இதுதான் ஈழத்தமிழர்களின் நிலையும்.

இலங்கை அரசுகள் தமிழ் மக்களுக்கு காலாகாலமாக பெரும் கொடுமைகள் செய்த போதெல்லாம் இந்தியா காப்பாற்றும் என்று இந்தியா... இந்தியா... என்று தமிழர்கள் உச்சாடனம் செய்தனர்.

ஆனால் அந்த இந்தியாவே ஈழத்தமிழர்களின் முதுகில் குத்தி சங்காரம் செய்துவிட்டது. என்ன செய்வது! இராமா... இராமா... என்று உச்சாடனம் செய்த தேரையை இராமர் அறியாமல் குத்தினார்.

ஆனால் இந்தியா... இந்தியா... என்று உச்சாடனம் செய்த தமிழர்களை இந்தியா திட்டமிட்டே கொன்றது.

இப்போது கூட ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படும் தீர்மானத்தை எதிர்ப்பதே இந்தியாவின் நிலைப்பாடு.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ இப்போதும் இந்தியா... இந்தியா... என்று உச்சாடனம் செய்கிறது.

ஐந்தறிவு படைத்த தேரையால் இராமரை புரிந்து கொள்ள முடியாமல் போயிருக்கலாம். ஆனால் ஆறறிவு படைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் இன்னமும் இந்தியாவை புரிந்து கொள்ள முடியாமல் இருப்பது கொடுமையிலும் கொடுமை.

ஓ! இந்திய தேசமே! எங்கள் வீட்டை உடைத்து விட்டு, எங்கள் உயிர்களைப் பறித்துவிட்டு எங்களுக்கு நீ வீடுகட்டி கொடுப்பதாக உன் பாராளுமன்றத்தில் தெரிவிப்பதை விடச் சின்னத்தனம் வேறு எதுவும் இல்லை.

இறைவா! ஜெனிவா தீர்மானத்தை இந்தியா எதிர்த்தால், இந்தியா எங்களுக்கு வீடுகட்டித் தரத்தேவையில்லையென்று கூறும் சக்தியை எங்களுக்குத்தா? அதுபோதும்.

## ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் தேசிய மாநாட்டுக்கு ஆலோசனை

(கொழும்பு)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாட்டை விரைவில் நடத்துவதென்றும் அதற்கென கட்சியின் மத்திய குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் மாநாட்டுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப் படையில் கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, சகல பிராந்திய அமைப்பாளர்களுக்கும் மாநாடு குறித்த அறிவித்தலை அனுப்பி வைத்துள்ளாரெனவும் கட்சியின் மாநாட்டிற்கான ஏற்பாட்டுக் குழுவினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கவும் எங்கள் வரலாற்று வாழ்விடங்களை அபிவிருத்தியால் தூக்கி நிறுத்தவும் வேண்டிய வரலாற்றுக் கடமை யென்பது எம்மீது சுமத்தப்பட்டுள்ளது. சுமைகளைத் தாங்கி நடக்கவும், தடைகளைத் தாண்டி உடைக்கவும், நாம் எமது கட்சியை செப்பனிட்டு, புனரமைத்து மேலும் பலப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்த இலக்கினை அடைவதற்கு கட்சியின் அடுத்த தேசிய மாநாட்டை நடத்துவது அவசியமானது என்பதால் மாநாட்டிற்கான ஏற்பாட்டுக்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தேசிய மாநாட்டை நடத்துவதற்கு முன்பாக கட்சியின் பிராந்திய மாநாடுகளை நடத்த வேண்டுமென்றும் அதன் பிரகாரம் கிழக்குப் பிராந்தியம் வன்னிப் பிராந்தியம், யாழ்.பிராந்தியம் மற்றும் சர்வதேசப் பிராந்தியம் என அனைத்துப் பிராந்தியங்களும் தனித்தனியாக பிராந்திய மாநாடுகளை நடத்த வேண்டுமென்றும் பிராந்திய மாநாட்டுத் தீர் மானங்களை மாநாட்டுக்குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்றும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தீர்மானங்கள் யாவும் கே.என். டக்ளஸ் தேவானந்தாவிடம் பரிந்துரைக்கப்பட்ட நிலையில் கட்சியின் அனைத்து பிராந்திய அமைப்பாளர்களுக்கும் மாநாட்டிற்கான அறிவிப்புக்கள் அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிராந்திய மாநாடுகளை நடத்துவதற்கான திகதியை அந்ததந்தப் பிராந்தியங்களே தீர்மானிக்க வேண்டுமென்றும் அதன் பின்னர் தேசிய மாநாட்டை நடத்துவதற்கான திகதியை. மாநாட்டுக் குழுவினரால் தீர்மானிக்கப்படுமென்றும் மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவின் கூட்டத்தில் முடிபு எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

## குடும்பஸ்தர் கைதான வழக்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு யாழ்.மேல் நீதிமன்றம் பிடியாணை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பயங்கரவாத புலனாய்வுப்பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு யாழ். மேல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் தொடர்பான வழக்கில் நீதிமன்றால் ஆறு தடவை குறித்த பொலிஸ் அத்தியட்சகருக்கு சமன் அனுப்பப்பட்டும் மன்றில் சமுகமளிக்காத நிலையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் 2009ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி ஓமந்தையில் வைத்து சுழிபுரத்தினைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையாரான நாதன் என அழைக்கப்படும் பொன்னையா சிதம்பரம் (வயது 36) என்ற குடும்பஸ்தர் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு பூசா முகாமில் வைக்கப்பட்டிருந்தார்.

இவருக்கு எதிராக கடந்த வருடம் கார்த்திகை மாதம் யாழ்.மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு இது வரைக்கும் 6 தவணைகளுக்கு உதவி பொலிஸ் அத்தியட்சகராக உள்ள அயூக்கான் என்பவர் மன்றில் சமுகமளிக்கவில்லை.

இவ்வழக்கு நேற்று யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குடும்பஸ்தர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி எம்.ரெமிடியஸ் குறித்த குடும்பஸ்தரை விடுதலை செய்யுமாறு விண்ணப்பித்த போது உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு பிடியாணை பிறப்பித்ததுடன் மறுமுறை இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது அவ் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் மன்றில் சாட்சியமளிக்காவிடின் அவரைக் கைது செய்து முன்னிலைப்படுத்துமாறும் கட்டளையிடப்பட்டு விளக்கத்துக்கு என ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி வரைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதன்போதும் குறித்த அத்தியட்சகர் சமுகளிக்காவிடின் குற்றம்சாட்டப்பட்டவர் தொடர்பில் சட்டத்தரணியால் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பம் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு உரிய கட்டளையிடப்படும் என உத்தரவிட்டார்.

இக் குடும்பஸ்தருக்கு எதிராக உள்ள ஒரேஒரு சான்று அவரால் வழங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)

## பூநகரிக்கோட்ட மெய்வல்லுநர் போட்டி

(பூநகரி)

பூநகரி கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டி கடந்த இரு நாட்களாக நடைபெற்று மூன்றாம் நாள் நிகழ்வுகளும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை பி.ப 1.30 மணியளவில் முழங்காவில் மகாவித்தியாலயத்தில் பூநகரி கோட்டக்கல் விப்பணிப்பாளர் எஸ்.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், சிறப்பு விருந்தினராக பூநகரி பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் வி.சொர்க்கநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் என பூநகரி கோட்ட விளையாட்டுதுறைச் செயலாளர் இ.கலைச்செல்வன் தெரிவித்துள்ளார். (அ-3,84)

## கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இலங்கை கிரிக்கெட்டினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மத்தியஸ்தர்களும் நாளை காலை 10 மணிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (எ)

## தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

விநாயகர் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கிவரும் கைதடி தென்கிழக்கு விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டி நடைபெற்றுவருகின்றது.

இப்போட்டியில் இன்று வியாழக்கிழமை குழு 01 ஐச் சேர்ந்த குமரநகர் ஏ அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி பி அணியும் நாளை வெள்ளிக்கிழமை குழு 2 ஐச் சேர்ந்த வளர்மதி பி அணியை எதிர்த்து மின்னொளி ஏ அணியும் மோதவுள்ளன. (அ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### உள்ளம் சொல்வதை கேள்!



கடவுளை அவருடைய அருளால் பார்க்க முடியும். கடவுள் நமக்கு அருகில் இருந்தாலும் தேடினால் மட்டுமே காணக்கூடியவராக இருக்கிறார்.

உயர்ந்த மனநிலைக்கு ஒருவனை அழைத்துச் செல்வது அறிவாற்றலே அப்போது இதயம் தெய்வீக நிலையை அடைகிறது.

பண்புடையவர்களிடம் நம்பிக்கை, நேர்மை, பக்தி ஆகிய குணங்கள் தானாகவே வந்துவிடும். இந்த குணங்கள் உள்ளவர்களுக்கு எந்த ஆபத்தும் நிகழ்வதில்லை.


உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய மூன்றையும் பெற்றுள்ள ஒருவனை உலகமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு. அவன் எதிலும் வெற்றிபெறுவான்.

அறிவு, உள்ளம் இவ்விரண்டில் எதைப் பின்பற்றுவது என மனதில் போராட்டம் எழும் போது உள்ளம் சொல்வதையே பின்பற்றுங்கள். உள்ளமே மனிதனின் கண்ணாடியாக இருக்கின்றது.

# சிரிய இராணுவத்தின் வன்முறைகளை இனியும் தொடரவிட முடியாது

## கமரூன், ஒபாமர் கோபமாகப்பதில்





பிரிட்டன் பிரதமர் கமரூன்-அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடனான சந்திப்பு வோஷிங்டன் நகரில் நடைபெற்றது. பின்பு இருவரும் இணைந்து வோஷிங்டனிலுள்ள போஸ்ட் நாளிதழுக்கு அறிக்கை வழங்கினர்.

மூன்று நாட்கள் வருகையாக அமெரிக்கா வந்திந்த கமரூன் ஜனாதிபதி ஒபாமாவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அடுத்து நடக்க வேண்டிய மாற்றங்கள் குறித்துப் விவாதித்தனர்.

மேலும் ஈரானில் உள்ள அணுசக்தி நிலையப் பிரச்சினை குறித்தும் சிரியாவில் நடைபெற்றுவரும் இராணுவ வன்முறை குறித்தும் பேசியுள்ளனர்.

இவ்விரு தலைவர்களின் பேச்சுவார்த்தை நேட்டோ மற்றும் ஜி8 தலைவர்களின் கூட்டத்திற்கு முன்பு நடைபெறுவதால் மிகுந்த எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவர்களின் சந்திப்பு இருநாடுகளின் பாரம்பரிய மரபு மற்றும் வரலாற்று மதிப்புகளால் பிணைக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டு நாடுகளும் இதயத்தால் இணைந்துள்ளன என்பதை இந்த சந்திப்பு எடுத்துக்காட்டுவதாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சிரியாவிலும் இராணுவம் அப்பாவி பொதுமக்களை கூட்டம் கூட்டமாக சுட்டுத்தள்ளுவதும் தீ வைத்துக் கொளுத்துவதும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

எனவே, ஜனாதிபதி ஆசாத்தையும் அவரது இராணுவத்தின் வன்முறையையும் இனியும் தொடர விட முடியாது என்று தலைவர்கள் இருவரும் கருத்து வெளியிட்டுள்ளதாக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-2)

# அனுசக்தி உச்சிமாநாட்டிற்கு கொரியா விரைகிறார் ஒபாமா

தென்கொரியாவில் நடக்கவிருக்கும் சியோல் அணுசக்தி பாதுகாப்பு உச்சி மாநாட்டுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா செல்லவுள்ளார்.

இந்த பயணத்தின் போது அவர் வட மற்றும் தென் கொரியாவுக்கு இடைப்பட்ட எவ்வித இராணுவ நடவடிக்கையும் இல்லாத எல்லைக்குச் செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சியோலில் பாதுகாப்பு உச்சி மாநாடு எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் காலை நடைபெறும். இந்த மாநாட்டில் வட கொரியாவின் செயற்பாடுகள் குறித்தும் அந்நாட்டின் மீதான உலக நாடுகளின் பார்வை குறித்தும் ஒபாமா பேசுவார் என்றும் தென் கொரியாவுடனான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் அவர் கலந்தாலோசிப்பார் என்றும் அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பயணத்தின் போது அவர் தென்கொரிய எல்லைப்பகுதியில் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டுவரும் அமெரிக்கப்படை வீரர்களைச் சந்திப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 1950-53 ஆம் ஆண்டுகளில் வடகொரியாவுடன் நடந்த போரிலிருந்து அமெரிக்க வீரர்கள் தென்கொரியாவில் உள்ளனர். கடந்த 2010 ஆம் ஆண்டு தென்கொரியாவின் போர்க்கப்பலை வட கொரியா அத்துமீறி மூழ்கடித்தது. கப்பலிலிருந்த 46 இராணுவீரர்கள் உயிரிழந்தனர். இதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையேயான பதற்றம் மேலும் அதிகரித்து வருகிறது. (அ-2)


# ரஷ்ய உலங்குவானூர்தி விபத்து; இரு விமானிகள் உயிரிழப்பு

ரஷ்ய விமானப் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 2 விமானிகளும் உயிரிழந்தனர். விபத்துக்குள்ளான உலங்குவானூர்தி கமோவ்-2 ரகத்தைச் சேர்ந்தது ரஷ்யாவின் வடமேற்குப் பிராந்தியத்தில் இந்த விபத்து நிகழ்ந்தது.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது. விபத்து நடந்த இடத்திலேயே ஒரு விமானி உயிரிழந்ததாகவும் மற்றொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாகவும் தெரிகிறது.

இந்த ரக உலங்குவானூர்திகள் பீரங்கிகளை அழிக்கும் திறன் கொண்டவை. மேலும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தவும் இவை பயன்படுத்தப்படும். இந்தச்சம்பவத்தையடுத்து கமோவ் ரக உலங்குவானூர்திகளின் செயற்பாடுகளை நிறுத்தி வைக்கும் திட்டம் ஏதுமில்லை என்று இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது. (அ-2)

# அரசியல் சட்டத்தில் திருத்தம்; மே மாதத்தில் தேர்தல்- ஆசாத்



சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் ஆட்சிக்கு எதிராக கடந்த 11 மாதங்களாக பொதுமக்கள் போராடி வருகின்றனர். போராட்டத்தில் ஈடுபட்ட 8 ஆயிரம் பேர் இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு ஐ.நா.சபை கண்டனம் தெரிவித்துள்ளது. ஆசாத் பதவி விலகி போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர வலியுறுத்தி வருகிறது. ஆனால் அதை ஆசாத் கண்டு கொள்ளவில்லை.

அரசயல் சட்டத்தில் திருத்தம் செய்து பாராளுமன்றத்துக்கு விரைவில் தேர்தல் நடத்தபடும் என அறிவித்து இருந்தார். அதன்படி எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என்று அவர் நேற்று முன்தினம் அறிவித்தார்.

ஆசாத் கடந்த 2000 ஆவது ஆண்டு ஜனாதிபதியானார் அதன் பின்னர் தற்போது 3 ஆவது தடவையாக பாராளுமன்றதுக்கு தேர்தல் நடத்துகிறார். தேர்தல் அறிவிப்புக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளார்.

தனக்கு வேண்டியவர்களை நியமித்துரப்பர்ஸ்டாம்ப் பாராளுமன்றமாக மாற்ற அவர் முயற்சிக்கிறார் அவர் பதவி விலகி போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என் அமெரிக்க பாராளுமன்றத்தின் செய்திதொடர்பான விக்டோரியா நூலண்டு தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே சிரியா பிரச்சினைக்குதீர்வு காண ஐ.நா. அரபுநாடுகளின் தூதுவராக டமாஸ்கஸ் சென்றுள்ள கோபி அனானும் முகாமிட்டுள்ளார். இருந்தும் துருக்கி எல்லையில் உள்ள இட்லிப் நகரை சிரிய இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி கைப்பற்றியுள்ளது.

இராணுவம் நடத்திய தாக்குதலில் அங்கு பலர் பலியாகி உள்ளனர் மேலும் பலர் காயம் அடைந்துள்ளனர். இட்லிப் நகரம் இதுவரை போராட்டக்காரர்கள் வசம் இருந்தது. (அ-2)




# பாக்.கில் விமான தாக்குதல்; 15 தீவிரவாதிகள் உயிரிழப்பு

பாகிஸ்தானில் அமெரிக்கா நடத்திய விமானத் தாக்குதலில் 15 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லையில் தெற்கு வெஜிரிஸ்தானில் உள்ள பழங்குடியினர் பகுதியில் நேற்று முன்தினம் அமெரிக்கா விமானத்தாக்குதல் நடத்தியதில் 15 பயங்கரவாதிகள் கொல்லுப்பட்டதாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் முக்கிய பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த அமீர் ஹம்சா, ஷாம்ஸ் உல்லாஹ் ஆகிய கொமாண்டர்கள் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லையான வடக்கு வெஜிரிஸ்தான், தெற்கு வெஜிரிஸ்தான் ஆகிய பகுதிகள் பயங்கரவாதிகளின் புகலிடமாக உள்ளதாக அமெரிக்காவின் நேட்டோ கருதுகிறது.

இதன் அடிப்படையில் இரண்டு நாட்கள் தெற்கு வெஜிரிஸ்தானின் சாரா கஹ்வாரா பகுதியில் விமான தாக்குதல் நடத்தியது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம், வடக்கு வெஜிரிஸ்தானில், நோட்டோ படையினர் நடத்திய தாக்குதலில் 24 பாகிஸ்தான் இராணுவத்தினர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ-2)



ஆப்கானிஸ்தானின் காபூல் கிழக்கு பகுதியில் உள்ள ஜலலாபாத்தில் மாணவர்களை அமெரிக்க இராணுவ வீரர்கள் சுட்டுக் கொன்றதை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிற்கு எதிராக உருவப்பொம்மையை எரிக்கும் ஆப்கானிஸ்தானியர்களை படத்தில் காணலாம்.

# ஈராக்கில் நாகரிக உடைக்கு கட்டுப்பாடு; மீறினால் கல்லால் அடித்துக்கொலை

ஈராக்கில் இருந்து முழுவதுமாக அமெரிக்க இராணுவப் படை வெளியேறிய பின்னர் அங்கு தீவிரவாதிகளின் அட்டூழியம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் ஷியா பிரிவை சேர்ந்த தீவிரவாதிகள் பொது மக்களுக்கு கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

இளைஞர்கள் அமெரிக்கர்களின் நவநாகரிக உடைகளான இறுக்கமான காற்சட்டை, மேல் சட்டை மற்றும் நீளமான தலை முடியுடன் அலங்காரம் செய்யவே கூடாது என்றும் பெண்கள் ஆடம்ப ரமாக இருக்கக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுப்பாடுகளை மீறி செயற்பட்ட 14 இளைஞர்களை தீவிரவாதிகள் செங்கற்களால் அடித்துக் கொன்றனர். அவர்களில் 9 பேர் சதார் நகரிலும் 3 பேர் கிழக்கு பாக்தாத்திலும் 2 பேர் மத்தியமார்க் பகுதியிலும் கொலை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் பலர் தலையில் ஏற்பட்டுள்ள பலத்த காயத்தின் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெண்களும் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாகரிக உடையுடன் வலம் வரும் இளைஞர்கள் மற்றும் பெண்கள் முதலில் எச்சரிக்கப்படுகின்றனர். அதன்பின்னர் நாகரிக அடை அணிந்தவர்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டு ஆங்காங்கே ஒட்டப்படுகின்றது.

பின்னர் அவர்கள் தீவிரவாதிகளால் நடு வீதியில் கல்லால் அடித்து கொலை செய்யப்படுகின்றனர். ஆனால், இதுவரையார்மீதும் கொலை வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது. (அ-2)

# ஆசிய கிண்ண கிரிக்கெட்; இலங்கை-பாக். இன்று மோதல்

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்காளதேஷ், ஆகிய 4 நாடுகள் பங்கேற்கும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் டாக்காவில் நடைபெற்று வருகின்றது.

முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் 21 ஓட்டங்களால் பங்களாதேஷை தோற்கடித்திருந்தது.

2-வது லீக் ஆட்டத்தில் இந்தியா 50 ஓட்டங்களால் இலங்கையை வெற்றிகொண் டது.

இந்நிலையில் 3-வது லீக் ஆட்டம் இலங்கை மற்றும் பாகிஸ்தான் இடையே டாக்காவில் இன்று நடைபெறுகிறது.

பாகிஸ்தான் முதல் போட்டியில் வெற்றி பெற்றிருந்த நிலையில் இரண்டாவது வெற்றியையும் பெறும் முனைப்பில் களமிறங் கும்.

அதேவேளை நேற்று முன்தினப் போட்டியில் இலங்கை அணி தோல்வியுற்றதால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றேயாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்குகிறது.

இன்றைய ஆட்டம் இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு தொடங்குகின்றது.

# தென்னாபிரிக்கா - நியூசிலாந்து இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது.

இருபது-20 தொடரை 2:1 என்ற கணக்கிலும், ஒருநாள் தொடரை 3:0 என்ற கணக்கிலும், தென்னாபிரிக்கா கைப்பற்றியது.

3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரில் இரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் முதல் நான்கு நாட்கள் இடம்பெற்றதோடு, தீர்மானம் மிக்க ஐந்தாம் நாள் மழை காரணமாக ஒரு ஓவரும் வீசப்படாது கைவிடப்பட போட்டி சமனிலையானது.

இந்நிலையில் 2 ஆவது டெஸ்ட் போட்டி இன்று ஹமில்டனில் ஆரம்பமாகிறது. இந்தப் போட்டிக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. வேகப்பந்து வீச்சாளர் சௌத்தி நீக்கப்பட்டுள்ளார்.

முதல் டெஸ்டில் அவர் விக்கெட் எதுவும் எடுக்காததால் நீக்கப்பட்டார். மார்க் சில்லஸ் அவருக்கு பதிலாக சேர்க்கப்பட்டுள்ளார்.

**இன்றைய போட்டியில் ஏ.பி.டி.வில்லியர்ஸ் சந்தேகம்**

இன்றைய போட்டியில் தென்னாபிரிக்க அணியின் நம்பிக்கை நட்சத்திரம் ஏ.பி.டி.வில்லியர்ஸ் பங்குபற்றுவது சந்தேகத்திற்கு உரியதாகியுள்ளது.

நேற்றைய தினம் பயிற்சிகளின்போது காலில் காயமடைந்ததன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இன்றைய போட்டியில் ஏ.பி.டி. வில்லியர்ஸ் பங்குபற்ற முடியாமல் போனால் தென்னாபிரிக்க அணி சார்பில் ஜே.பி.டுமினி அவருக்கு பதிலாக பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படும் நிலையில், வேறெதும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வாய்ப்புக்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

கடந்த போட்டியில் நியூசிலாந்து அணி சார்பாக பங்குபற்றிய ரீம்.சௌத்தி இப்போட்டிக்கான அணியில் சேர்க்கப்பட்டிராத நிலையில், அவருக்கு பதிலாக மார்க் கிலெஸ்பி அல்லது பிரெண்ட் ஆர்னல் இருவரில் ஒருவர் பங்குபற்றுவர். அதைத் தவிர நியூசிலாந்து அணியிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வாய்ப்புக்கள் இல்லை.

ஹமில்டனில் இடம்பெறவுள்ள இன்றைய போட்டிக்கான ஆடுகளம் வேகப் பந்து வீச்சாளருக்கு அதிக சாதக தன்மையை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப் போட்டி இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

## ஆதரிப்பதா? எதிர்ப்பதா?...

ஆக்கபூர்வமான உறவு மற்றும் எமது உதவித்திட்டங்கள் காரணமாகவே அங்கு தமிழ்ப் பிரதேசங்களில் வழமை நிலைமைக்குத் திரும்பியுள்ளது.

அவசர காலச் சட்டம் வாபஸ் பெறப்பட்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடந்துள்ள பின்னணியில் பல வகையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கு நாம் எதைச் செய்தோம், அது தமிழ் மக்களின் நலன்களையும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி, மீள்கட்டுமானம் என்பனவற்றையும் கருத்தில் கொண்டே செய்யப்படுகின்றது.

இலங்கை, குறிப்பிடத்தக்க சில நடவடிக்களை தொடங்கியுள்ளதை அவதானிக்க[illegible]றது.

[illegible]சிய மனித உரிமைகள் வேலைத்திட்டத்[illegible]ன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்[illegible]த் கண்காணிக்கவென அமைச்ச[illegible]ப குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. [illegible]றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுக்கு அமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழு மீண்டும் தொழிற்படத் தொடங்கியுள்ளது அத்துடன், நல்லிணக்க ஆணைக்குழு கூறியபடி மனித உரிமை மீறல்களை விசாரிக்கவென இலங்கை பாதுகாப்புத் துறை விசாரணை நீதிமன்றம் ஒன்றை அமைத்துள்ளது.

தமிழ்ச் சமுதாயத்தின் மனத் தாக்கங்களை தீர்க்கும் வகையில் உண்மையான நல்லிணக்க செயற்பாடு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதன் அவசியத்தை இலங்கை அரசாங்கத்திடம் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலிருந்தும் அனைத்துக் கட்சி பிரதிநிதிகளை இலங்கைக்கு வருமாறு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. நாம் இந்த விஜயத்தை விரைவில் மேற்கொள்ளவுள்ளோம்.

இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு சம உரிமை, மதிப்பு, நீதி மற்றும் சுயமரியாதை வழங்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது. நாடாளுமன்றில் வெளிப்படுத்திய இந்த உணர்வினை அரசாங்கம் கவனத்தில் கொள்ளும் என்று உறுதியளிக்கின்றேன். ஐ.நா.மனித உரிமை தீர்மானம் குறித்து இறுதி முடிபு எடுக்கும்போது, அது பற்றி நாடாளுமன்றில் தெரிவிக்கப்படும்.

இலங்கை தொடர்பாக இந்திய அரசு எது செய்தாலும், அது இலங்கைத் தமிழர் நலன்களையும், நல்வாழ்வையும் கருத்தில் கொண்டே செய்து வருகின்றது. இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா முன்னெடுத்து வருகின்றது.

இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சனல் 4 நிறுவனம் ஒளிபரப்பியுள்ள காட்சிகள் குறித்து விசாரிக்கப்பட வேண்டியது அவசியம். அதை இலங்கை தான் செய்தாக வேண்டும். அதற்குத்தான் முதல் கடமை உள்ளது. இதை இலங்கை செய்யும் என்று நம்புகிறோம்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் தற்போது அமெரிக்கா தாக்கல் செய்துள்ள தீர்மானம் குறித்து உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

அது குறித்து நிதானித்துத்தான் தீர்மானிக்க வேண்டும். காரணம், இலங்கையுடன் நமக்கு வரலாற்று ரீதியான உறவு, நட்பு உள்ளது. அது பாதிக்கப்பட்டு விடக்கூடாது.

அதேபோல இலங்கையில் நடந்துவரும் அமைதி தொடர்பான பேச்சுவார்த்தைகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது. பிரச்சினைகள் மேலும் பெரிதாகிவிடக் கூடாது. கசப்புணர்வு அதிகரித்துவிடக் கூடாது என்றார் கிருஸ்ணா. (எ-11)

## நோர்வேயின்...

பதற்காகவாவது தீர்மானித்திருக்க வேண்டும் என அவர் கூறினார்.நோர்வேயின் இத் தீர்மானமானது துரதிர்ஷ்டவசமானது என அவர் கூறினார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன் தினம் ஜெனிவா நோக்கி பயணமானமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான இலங்கை தூதுக் குழுவினர் எதிர்வரும் 16-ம் திகதி மீண்டும் ஜெனிவாவுக்குச் செல்லவுள்ளனர்.(எ-11)

## மின்சாரம்...

சம்பவ தினத்தன்று தொலைக்காட்சி பார்ப்பதற்கென தொலைக்காட்சி வயரினை மின் ஆளியோடு தொடுக்க முயன்றபோது சடுதியாக மின் தாக்கியுள்ளது.

இதில் குறித்த சிறுவனுக்கு மூக்கினாலும், வாயினாலும் இரத்தம் கசிந்து வந்துள்ள நிலையில், உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரும் வழியில் உயிரிழந்துள்ளார். (எ-4)

## அமெ. உடனான...

அமெரிக்காவுடனான வர்த்தக உறவுகள் துண்டிக்கப்படுமாயின் இலங்கையில் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி காணும் என கூறினார்.

நாம் கவனமாக பேச வேண்டும். நாம் இது போன்ற முட்டாள்தனமான அறிக்கைகளை விடலாகாது. வீரவன்ச போன்ற அரசியல்வாதிகள் பொருளாதாரம் நாசமாவதையே விரும்புகின்றனர். அப்படியானால்தான் இவரால் அரசியலில் தப்பிப் பிழைத்து இருக்க முடியும் என கிரியல்ல கூறினர். (எ-1)

## பொறுப்புக் கூறத்...

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லிணக்கம் போன்ற விடயங்கள் இலங்கையின் நலன்களுக்கு முக்கியமானவை. இதனூடாக அவர்கள் முழுமையான சமாதானத்தையும் பாதுகாப்பையும் அடைய முடியும்.

இல்லையேல் இலங்கையில் மீண்டும் போர் உருவாகக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும். உலகில் இடம்பெற்ற பல உள்நாட்டுப் போர்கள் இத்தகைய அனுபவங்களை தந்துள்ளன.

உலகில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறுவது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியவர்கள் மீண்டும் தோற்றம் பெற்ற கிளர்ச்சிகளை தொடர்ந்து அனுபவித்து வருகிறார்கள்.

இலங்கையிலும் இத்தகைய நிலைகள் தோன்றலாம்.

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிபுக்கு வந்தபின்னர் அரசாங்கம் வடக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஆயினும் வட பகுதி தமிழர்கள் தாம் தொடர்ந்தும் படைத்தரப்பினரின் ஆக்கிரமிப்பின் கீழ் இருப்பதாகவே உணர்கின்றார்கள்.

இந்நிலையில் வட மாகாண சபைத் தேர்தலை நடத்தி தமிழர்கள் தமது பகுதியில் மேலும் கட்டுப்பாட்டை எடுத்துக் கொள்வதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும் என ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.(எ-11)

## கிருஸ்ணா சமர்ப்பித்த...

50 வீடுகள் கூட முழுமையாகக் கட்டி முடிக்கப்படவில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு பரிசீலிக்கும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்ததாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கூறியிருந்தார். அவர் அவ்வாறு கூறி சில நாட்களிலேயே, தான் அவ்வாறான எந்த உறுதியையும் அளிக்கவில்லை என ஜனாதிபதி மகிந்த தெரிவித்தார்.

இவ்வாறானதொரு நிலையில் இலங்கை அரசு உறுதிமொழிகளை காப்பாற்றும் என்பதை எப்படி நம்புவது? இஸ்ரேலுக்கு எதிராக கொண்டுவரப்பட மனித உரிமை மீறல் தீர்மானத்தை ஆதரித்த இந்தியா, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் மௌனம் சாதிப்பது ஏன்? என்று கனிமொழி எம்.பி.கேள்வி எழுப்பினார்.

இலங்கை விவகாரம் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் அளித்த விளக்கம் நேர்மையற்றதாகவும் உண்மைக்கு புறம்பானதாகவும் உள்ளது.

இந்திய மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் அமைச்சரின் விளக்கம் அமையவில்லை. ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர இடம் பிடிக்க இந்தியா முயற்சிக்கிறது. இலங்கை விவகாரத்தில் இந்தியா தார்மீக அடிப்படையில் முடிபெடுக்க வேண்டும் என்றார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி. டி.ராஜா. (எ-11)

## புதுக்குடியிருப்பில்...

மனுக்களை ஆதரித்து கருத்துரைக்க அனுமதி வழங்குமாறு மனுதாரர்களின் வழக்குரைஞர்கள் கூறினர்.

இந்த மனுவின் 5 ஆவது பிரதிவாதியான மாவை சேனாதிராஜா இந்த வழக்குத் தொடர்பில் தமக்கு கட்டளை ஏதும் கிடைக்கவில்லை என தனது வழக்குரைஞர் மூலம் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தார். (எ-11,15)

## மன்னிப்புச் சபை அறிக்கை...

விவகாரம் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ் அறிக்கையை நான் நிதானமாக படித்தேன். அதில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து நாம் கவலை அடைகிறோம்.

இவ் அறிக்கையில் பழைய விடயங்கள் பல குற்றச்சாட்டுக்களாக பதியப்பட்டுள்ளன.

படைத் தரப்பினர் பொதுமக்களின் மீது கடுமையாக நடந்து கொண்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

இதில் துரதிர்ஷ்டவசமாக ஒரேயொரு சம்பவத்துடன் மட்டுமே படைத் தரப்பினர் தொடர்புபட்டுள்ளனர்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பது குறித்த தேசிய செயல்திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

ஆசிய பசுபிக் மனிதவுரிமைகள் நிலையத்துடன் இணைந்து நாம் செயற்படுகின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

நாங்கள் மனிதவுரிமை விடயங்களில் முன்னோக்கி நகர்கிறோம். அதற்கு சற்றுக் காலம் எடுக்கும்.

நல்லிணக்கத்திற்காக நாங்கள் எதுவும் செய்யவில்லை என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிக்கின்றோம்.

எனினும் எமது நல்லிணக்கச் செயற்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் விரைவில் தெரியப்படுத்துவோம் என அவர் கூறினார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்து சுயாதீனமான சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் சபை ஆதரவு வழங்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை லண்டனில் வைத்து வெளியிட்ட அறிக்கையில் கோரிக்கை விடுத்திருந்தது.

இலங்கை விவகாரங்கள் தொடர்பில் 63 பக்கங்களில் வெளியான இவ் அறிக்கையில், இலங்கையில் சட்டத்திற்குப் புறம்பான தடுத்துவைப்புகள், காணாமல் போகும் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

**செய்மதி தொலைக்காட்சி அலைவரிசை பொருத்துதலும் செயற்படுத்தலும்**

(C- BAND/ KW BAND) பெரிய, சிறிய (டிஸ் அன்ரனாக்களை) செய்மதி தொலைக்காட்சி (Sun Direct, Dish TV, Tata Sky, Video con)ஆகியன உங்கள் இல்லங்களில் பொருத்திடவும் C-Band மூலமாக 20க்கும் மேற்பட்ட தமிழ் அலைவரிசைகளை கண்டுகளிக்கவும் கணனி (Computer) பழுது பார்க்கவும் அழையுங்கள்: **S. Ram 075 0460210, 0773572125**

(7699)

**தவறிவிட்டது**

சின்னத்துரை குணசேகரம் ஆகிய எனது தேசிய அடையாளஅட்டை (560542399V) தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தந்துதவவும். தொடர்பு:0777898267.

(இ-6090)

**இன்று நடைபெறும்**

உங்கள் வெளிநாட்டுக் கல்விக் கனவை நனவாக்க! உங்கள் வெளிநாட்டுக் கல்விக் கனவை நனவாக்க!

மலேசியாவில் ஆரம்பித்து அடுத்த வருடமே

**விரும்பிய நாட்டுக்குச் செல்லுங்கள்!**

UK, Australia, New Zealand, USA, Canada பட்டக்கல்வியை வழங்கும்



**மலேசிய உயர்கல்விக் கண்காட்சி** (2nd Edition)

with **SPOT ADMISSION**

SkillsMalaysia

INTI UCSI UNIVERSITY Curtin University of Technology SUNWAY UNIVERSITY SEGi University College KLIUC LIMKOKWING UNIVERSITY OF CREATIVE TECHNOLOGY

தூதரக நேர்முகத் தேர்வு இல்லை! வங்கிப்பணம் காட்டத் தேவையில்லை!

**யாழ்ப்பாணத்திலேயே விசா அனுமதி!**

A/L, O/L முடித்தவர்களும், O/L முடிக்காத 18-45 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கும்

**தொழில்வாய்ப்புடன் கூடிய பட்டக்கல்வி வாய்ப்புக்கள்**

மார்ச் 15 வியாழன்
யாழ் ஞானம்ஸ் ஹொட்டேல்
காலை 9.00 மாலை 5.00

**அனுமதி இலவசம்!**

மார்ச் 14, புதன் 9.00 மணிக்கு
யாழ் வீரசிங்கம் மண்டபத்தில்
**கனவு மெய்ப்படவேண்டும்**
சான்றிதழுடன் கூடிய
கல்வி - தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

பெற்றோரே! உங்கள் பிள்ளைகளுடன் நேரில் வந்து அவர்களது பட்டக்கல்விக் கனவை நனவாக்குங்கள்

ஏற்பாடு:
கல்வி வழிகாட்டல் பிரிவு
சிகரம் ஊடக இல்லம்
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
T.P.: 021 300 80 60 Email: SikaramMedia@gmail.com
In Association with Winning Magnitude
Be a winner · Study · Job · Business

Supported and Endorsed by:
Ministry of Higher Education, Malaysia
High Commission of Malaysia

ஊடக அனுசரணை: சகரம்

**மணல் விற்பனைக்குண்டு**

நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
**கண்ணா**
**0776766499**

(7700)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா தம்பிப்பிள்ளை



ஆனந்தா வீதி, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா தம்பிப்பிள்ளை கடந்த 11.03.2012 ஞாயிற்றுக்கிழமையன்று காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15.03.2012 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்[illegible] நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி [illegible] மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அ[illegible]னவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தா வீதி,
மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்

(7704)

## மரண அறிவித்தல்



### திருமதி லலிதா சண்முகலிங்கம்

**(ஓய்வுபெற்ற உப அதிபர் - யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்)**

அரியாலையூர் திருமதி லலிதா சண்முகலிங்கம் 14.03.2012 புதன்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் V.K. சண்முகலிங்கம் (யாழ்.மாவட்ட முன்னாள் கிறிக்கற் பயிற்றுனர்/ புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லூர் கோயில் கந்தையா இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும், அகிலன், விமலன் (யாழ்/ பல்கலைக்கழக வணிகபீட மாணவன் 2003/ 2004) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிரோஜனாவின் அன்பு மாமியாரும், பத்மினி இரட்ணலிங்கம், இரவீந்திரன் பேரம்பலம், விஜயா புஸ்பநாதன், இராஜினி சண்முகநாதன், ஜெயகுமார், சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராசமணி சின்னத்துரை, கனகம்மா ஆறுமுகம், கனகேஸ்வரி சுப்பிரமணியம், இராஜ இராஜேஸ்வரி நல்லையா, சற்குணவதி குணரட்ணம், அரசரட்ணம் மற்றும் ஜெயக்குமார் மல்லிகா, சாந்தகுமார் சகுந்தலாதேவி ஆகியோரின் மைத்துனியும் மற்றும் அரசரட்ணம் சசிவதனியின் உடன்பிறவாச் சகோதரியும் சாரங்கன், கிறிஷாகரன், கௌரிசங்கர், சுஜித்தா, நிரோஷாந், டிலக்ஷன், பவித்திரன், கார்த்திகா ஆகியோரின் பெரிய தாயாரும் இஷானி, சிவானி, அஸ்வின், ஹரிசாந்தன், அமரர்கள் ரவீந்திரன், மோகனாம்பிகை மற்றும் பத்மாவதி, ரகுநாதன், வேதவாணி, ரஞ்சினிதேவி, இராஜ்குமார், நந்தகுமார், சுசீலா, சுமதி, சேகர், ஸ்ரீதர், சுகுணா, பாஸ்கர், கௌரி, பிரபாகர், சுதா, சுகுமார், சுசிகலா, சுகிர்தா, சுரேந்திரன், சுபாஸ்கரன், சுபாசினி, சுபத்திரா, ஜசிந்தா, சுதேஸ்குமார், யாழினி, அமரர் சதீஸ்குமார் மற்றும் பிரதீபன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.03.2012 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

125, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(7702)

தகவல்: கணவர் V.K. சண்முகலிங்கம் (கிறிக்கற் பயிற்றுனர்)
பிள்ளைகள் S.அகிலன், S. விமலன் (அவுஸ்திரேலியா)

இப்பத்திரிகை வலம்புரி அ[illegible] ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது